# உதயன்

24

யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 338 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 13, வியாழன் 30.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


**காலநிலை**

மேகமூட்டம்/ மழை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியங்கள் உண்டு

## போருக்குப் பின் மனநிலை பாதிக்கப்படுவோர் அதிகரிப்பு

### எச்சரிக்கிறது யாழ்.மருத்துவ சங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.30
போர், உறவுகள் காணாமற் போனமை, உறவுகளை இழந் தமை போன்ற காரணங்க ளால் மனதளவில் பாதிக்கப் பட்டவர்கள், மன உளைச்சல் காரணமாக பாரிச வாதம் போன்ற நோய்களால் அதி கம் பாதிக்கப்பட்டு உயிரிழக் கின்றனர். அவ்வாறு உயி ரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல் கின்றது என்று தெரிவித்துள் ளது யாழ்.மருத்துவ சங்கம்.

போரின் பின்னரான காலப் பகுதியில் மனநிலை பாதிக் கப்படும் மக்கள் தொகை அதிகமாகவுள்ளது. அது தொடரும் பிரச்சினையா கவே காணப்படுகிறது. அவர் களுக்கு மனஆறுதல், நிம் மதி இல்லாத தன்மை காணப் படுகிறது. காணாமல்போனோர் பிரச்சினை, உறவுகளை இழந்த பிரச்சினை, குடும்பக் கட்டமைப்பு, சமூகக் கட்ட மைப்பு உடைவு, தனிமை வாழ்வு, உளச்சோர்வு என் பவற்றால் பலர் மன உளைச் சலுக்கு உள்ளாகின்றனர். மன உளைச்சல் பல்வேறு நோய்களை உண்டாக்கும் என்றும் மேலும் சுட்டிக்காட்

22 ஆம் பக்கம் பார்க்க

# ராணுவ தலையீடு வடக்கில் அதிகம்

## நேரில் பார்த்தபின் கமலேஷ் சர்மா ஒப்புதல் வாக்கு மூலம்



கொழும்பு, ஒக்.30
வடக்கில் தொடர்கின்ற அதி கரித்த இராணுவத் தலையீ டுகள் குறைக்கப்பட்டு, மக்க ளின் சுதந்திர நடமாட்டம் உறுதிப்படுத்தப்பட வேண் டும் என்று இலங்கை அரசி டம் கோரிக்கை முன்வைத் துள்ளார் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செய லாளர் கமலேஷ் சர்மா.
அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விட யத்தை இலங்கை அரசு அதிக முன்னேற்றதை வெளிப் படுத்தி வருகின்றது என்றும் குறிப்பிட்டுள்ள அவர், வடக் கில் வாழும் மக்களின் நலன் புரி சேவைகளிலும் அதே அக்கறையைக் காண்பிக்க வேண்டும் என்றுதான் விரும்பு வதாகவும் கூறியுள்ளார்.
ஐந்து நாள் பயணமாக இலங்கை வந்திருந்த கம லேஷ் சர்மா, நேற்று கொழும் பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அதில் தனது பயணத்தில் நேரில் கண்டவற்றை அடிப்படையா கக் கொண்டு கருத்துத் தெரி விக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தனது இலங்கைப் பயணம்

22 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீளாய்வு அறிக்கை ஐ.நாவில்

யாழ்ப்பாணம், ஒக். 30
இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கின் றமை, குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாமை போன்ற பல்வேறு விடயங் கள் தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள்சபையால்மீளாய்வு அறிக்கை இன்றைய தினம் வெளியிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை மற்றும் ஒரு சில நாடுகள் தொடர்பிலான ஐக் கிய நாடுகள் மனித உரிமை கள் சபையின் மீளாய்வு அறிக்கையே இன்று வெளி யிடப்பட உள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவின் 112 ஆம் அமர்வு தொடர்பில் விசேட ஊடகவி யலாளர் சந்திப்பு நடத்தப்பட் டுள்ளது.
பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப் படுத்தப்படுதல், குற்றச் செயல் களுக்கு தண்டனை விதிக் கப்படாத நிலைமை, பல வந்தமான கடத்தல்கள், சட்ட விரோத படுகொலைகள், காணாமல் போதல்கள், பாலி யல் வன்முறைகள், பால் நிலை சமத்துவமற்ற ரீதியி லான அழுத்தங்கள், இடம் பெயர் மக்களின் நிலைமை கள் உள்ளிட்டன குறித்து

19 ஆம் பக்கம் பார்க்க

## 400 பேர் மாயம்

### நேற்று பெரும் மண் சரிவு சோகத்தில் மூழ்கியது மலையகம்



கொழும்பு, ஒக்.30
பதுளை, கொஸ்லந்தை, மீறியபெத்தை பகுதியில் நேற்று ஏற்பட்ட பெரும் மண் சரிவில் அங்கிருந்த 7 லயன்கள் மண்ணில் புதையுண்டு போயின. சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பு மண்சரிவில் சிக் குண்டுள்ளது. அதில் 140 குடும்பங் களைச் சேர்ந்த 400 பேர் காணாமற் போயுள்ளனர். அந்தப் பகுதி யில் மீட்புப் பணிகள் மும்முரப்படுத் தப்பட்டுள்ள நிலையில் நேற்று மாலைவரை 10 பேரின் உடல் கள் மீட்கப்பட்டுள்ளன.

19 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண சபையை பலவீனப்படுத்த முயற்சி

### ஆஸ்திரேலிய ஆலோசகர் மைக் ஹில்மனிடம் முறையிட்டது தமிழ்க் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30
வடக்கு மாகாண சபைக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் இடை வெளியைஏற்படுத்தி,மாகாணசபையை பலவீனப்படுத்தும் நடவடிக்கை களில் கொழும்பு அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. மறுபுறம் மாகாண சபைக்கு இருக்கின்ற அதி

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலைக்கழகச் சூழலில் திடீரென குவிக்கப்பட்டது ராணுவம்

### பெரும் அச்சத்தில் மாணவர்கள்



யாழ்ப்பாணம், ஒக்.30
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகச் சூழலில் நேற்றுமுன்தினம் முதல் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ள னர். அதனால் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் அச்சநிலை

19 ஆம் பக்கம் பார்க்க






## சட்டத்தின் ஆட்சி சரியாகவுள்ளதா?

### வடக்கில் ஆராய்ந்தது ஐ.நா. பயங்கரவாத எதிர்ப்பு குழு

யாழ்ப்பாணம், ஒக். 30
போருக்குப் பின்னர் வடக்கில், சட்டத்தின் ஆட்சி முறையாக இடம்பெறுகின்றதா? என்பது தொடர்பில், யாழ்.மாவட்டத்துக்கு நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க

# 1995 ஒக்ரோபர் 30

## இடப்பெயர்வு அனுபவம்

சயந்தன்

அன்று கந்தசஷ்டி விரதத்தின் கடைசி நாள். விடிந்த போது சாதாரணமாத்தான் விடிந்தது. பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணத்தினை கைப்பற்ற இராணுவத்தினர் தாக்குதலை நடாத்தி வருவதும், அன்றைக்கு சில நாள்கள் முன்பாக அந்த நடவடிக்கையை முறியடிக்க புலிகள் மேற்கொண்ட நடவடிக்கை வெற்றியைத் தராமல் போனதும் அப்போதைய பரபரக்கும் செய்திகள்.

யுத்த முனையில் இராணுவத்தினரின் கைகள் ஓங்கியிருப்பது பலருக்கும் தெரிந்திருந்தாலும் புலிகளின் இராணுவ நகர்வுகள் பற்றி யாருக்கும் எதிர்வு கூற முடியாதென்கிற நிலையில் எந்த ஒரு யாழ்ப்பாண குடிமகனும் தானும் உறவும் ஒட்டுமொத்தமாய் இந்த நிலத்தை விட்டுப் பிரிவோம் என்று நினைத்திருக்கவில்லை.

காலையில் பாடசாலைக்கு புறப்படுகின்றவன் மாலையில் சிலவேளைகளில் நான் திரும்பி வராது இருக்க கூடும் என்று நினைத்திருப்பான். குண்டு வீச்சு விமானங்களின் இரைச்சல் கேட்டவன் இந்த விமானங்கள் வீசும் ஏதாவது ஒரு குண்டில் நான் செத்துப் போகலாம் என்று நினைத்திருப்பான். ஷெல் வீச்சுக்கள் அதிகமாகும் போது ஏதாவது ஒரு ஷெல் என் தலையில் விழுந்து யாரேனும் என்னைக் கூட்டி அள்ளிச் செல்லக் கூடும் என நினைத்திருப்பான். ஆனால். ஒரே இரவில் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மண்ணைவிட்டு தூக்கியெறியப்படுவோம் என எவரும் நினைத்திருக்கமாட்டார்கள்.

ஆனால் இன்றைய மாலை அத்தனைபேரும் தங்கள் வேர்களைப் பிடுங்கி நடந்தார்கள். எங்கே போவது, என்ன செய்வது என்னும் எந்தச் சிந்தனையும் இன்றி உயிர் பிழைக்க வேண்டும் என்ற நோக்கோடு மட்டும் நடந்தார்கள். இரவு நெருங்குகிறது. இன்றைக்கும் புத்தூர்ப் பகுதிகளில் சண்டை நடந்தது என பேசிக்கொள்கிறார்கள். மின்சாரம் இல்லாத அந்தக் காலத்து யாழ்ப்பாணம் மிகச் சீக்கிரமாக நித்திரைக்கு சென்று விடும்.

8 மணியிருக்கும். பரவலாக எல்லா இடங்களிலும் ஒலி பெருக்கி கட்டிய வாகனங்களில் அறிவிப்பு செய்கிறார்கள் புலிகள். யாழ்ப்பாணத்தை கைப்பற்றி பாரிய இன அழிப்பு நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்ள இருக்கின்றதனால் உடனடியாக பாதுகாப்பான பிரதேசங்களான தென்மராட்சி வடமராட்சி வன்னிப் பகுதிகளுக்கு சனத்தை இடம் பெயருமாறு கோரியது அந்த அறிவிப்பு. யாழ்ப்பாண குடாநாட்டில் அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை 5 லட்சம். யாழ் குடாநாட்டினை வடபகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த வெறும் இரண்டு வீதிகளினூடாக 5 லட்சம் மக்கள் ஓர் இரவு விடிவதற்குள் கடந்து செல்ல வேண்டும் என்பதனை கற்பனை செய்தும் பார்க்க முடியாது. ஆனால் மக்களுக்கு அதற்கெல்லாம் நேரமிருக்கவில்லை. மூட்டை முடிச்சுக்களை கட்டி எல்லோரும் வீதிகளில் இறங்க இறுகிப்போனது வீதி.

இப்போது நினைத்துப்பார்த்தால், புலிகள் அந்த வெளியேற்றத்தை திட்டமிட்டு நடாத்தி முடித்திருக்கலாமோ என தோன்றுகிறது. ஏனெனில் அந்த இடப்பெயர்வு முடிந்து அடுத்த இரண்டு மாதங்கள் வரை யாழ்ப்பாணம் புலிகளின் கைகளில் தான் இருந்தது. இடப்பெயர்வின் பின்னர் ஒரு பத்து பதினைந்து நாள்கள் வரை இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் சென்று பொருள்கள் எடுத்துவர அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

ஆனால் எந்த விதமான முன் தீர்மானமும் இன்றி நெருக்கடியான நிலையிலேயே புலிகளும் இந்த முடிவினை எடுத்திருந்தார்கள் என்பதற்கு மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்த புலிகளின் படையணிகளும், காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த போராளிகளும் சான்று.

> சூரிய கதிர் இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாண மக்கள் இடம்பெயர்க்கப்பட்ட நாள் இன்று. 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி நடந்த அந்தப் பெரும் இடம்பெயர்வு யாழ்.குடாநாட்டில் 5 லட்சம் மக்களை ஒரே நாளில் ஏதிலிகளாக்கியது.

அந்த இரவு மிகப்பெரும் மனித அவலத்தை சுமந்தது. இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள். எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், வயதான அம்மா அப்பா இவர்களை வீட்டிலே விட்டு வந்தவர்கள். நிறைமாத கர்ப்பிணிகள், முதியவர்களைச் சுமந்தவர்கள் என வீதியில் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு ஒரு மணி நேரம் ஆயிற்று. தண்ணி கேட்டு அழுத குழந்தைகளுக்கு பெய்த மழையை குடையில் ஏந்தி பருக்கியவர்கள். லொறிகளில் றேடியேற்றருக்கெனவாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்து குடித்தவர்கள். வீதியில் இறந்த முதியவர்களை அந்த சதுப்பு நிலத்தில் குழி தோண்டி புதைத்தவர்கள் - உலகம் என்ற ஒன்று பார்த்து "உச்" மட்டும் கொட்டியது.

அடுத்த காலையே வானுக்கு வந்து விட்ட விமானங்கள், நிலமையை இன்னும் பதற்றப்படுத்தின. அந்த வீதிக்கு அண்மையாக எங்கு குண்டு வீசினாலும் ஆயிரக்கணக்கில் பலியாக மக்கள் தயாராயிருந்தனர். 24 மணி நேரங்களிற்கும் மேலாக நடக்க வேண்டியிருந்தது. நடந்தும் தங்க இடமெதுவும் இன்றி ஆலயங்கள், தேவாலயங்கள், பஸ் நிலையங்கள் என கண்ணில் பட்ட இடங்களில் மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தூக்கிப் போட்டனர்.

---

## கொலைச் சந்தேக நபருக்கு 2 வருடங்களின் பின் பிணை

யாழ்ப்பாணம், ஒக். 30

நீர்வேலியில் தனது சகோதரியையும் அவரது கணவரையும் கோடரியால் வெட்டிக் கொலை செய்ததோடு அவர்களின் இரண்டு பிள்ளைகளுக்கும் கடும் காயம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் யாழ்.மேல் நீதிமன்றினால் கடந்த 27 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்குத் தொடர்பான பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பிணை வழங்கப்பட்டது.

நீர்வேலி வடக்கில் 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் 8 ஆம் திகதி இந்தக் கொலை இடம்பெற்றது. அதில் அதே இடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு உதயகுமார் (வயது-55). அவரது மனைவியான வசந்திமாலா (வயது - 46) ஆகியோரே கோடரியால் வெட்டிக் கொல்லப்பட்டனர். வெளியே சென்று வீடு திரும்பிய அவர்களை அவரது வீட்டில் வைத்து அருணாசலம் குணேஸ்வரன் (வயது - 48) என்பவரே வெட்டிக் கொலை செய்தார் என்றும். அவர்களின் இரண்டு பிள்ளைகளுக்கும் காயம் விளைவித்தார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டது.

கொலையை அடுத்து சந்தேக நபர் தலைமறைவாகியிருந்தார்.

தேடுதலின் பின்னர் அதே இடத்தில் உள்ள ஒருவரது வீட்டில் மறைந்திருந்த நிலையில் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவருக்கு வீட்டில் இடம்கொடுத்து உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா முருகையா, கந்தையா சந்திரராசா ஆகியோரையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்ததோடு மேலும் இரண்டு பேரையும் கைது செய்தனர்.

அவர்களில் இறுதியாகக் கூறப்பட்ட இருவரும் வழக்கிலிருந்து சட்டமா அதிபரால் விடுவிக்கப்பட்டனர். ஏனையவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் உடந்தையாக இருந்த இருவரும் விடுவிக்கப்பட்டனர். பிரதான சந்தேக நபரான குணேஸ்வரன் என்பவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதன்படி ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்களோடு எந்த விதத்திலும் சண்டை, பிரச்சினைகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடக்கூடாது என்றும், மறு அறிவித்தல்வரை அவர் கோப்பாய் பொலிஸ் பிரிவில் வசிக்கக்கூடாது என்றும், ஒவ்வொருநாளும் யாழ்.நீதிவான் நீதிமன்றில் கையெழுத்திட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது மன்று. காணித் தகராறு காரணமாகவே பிரச்சினை உருவானதாகக் கூறப்படுகின்றது. (த-4)

---

## திருடும் நோக்குடன் நடமாடியவர் விளக்கமறியலில்

தென்மராட்சி, ஒக்.30

திருட்டு நோக்குடன் நடமாடிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.

நுணாவில் மேற்கு, மட்டுவில் பகுதியில் திருட்டு முயற்சிகள் அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் மக்கள் விழிப்புடன் செயற்பட்டதால் அவை தடுக்கப்பட்டன.

இந்த நிலையில் கடந்த 27 ஆம் திகதி நுணாவில் மேற்குப் பகுதியில் உள்ள தென்னம் தோட்டமொன்றில் சந்தேகத்துக்கு இடமான நிலையில் காணப்பட்ட நபரைப் பொதுமக்கள் துரத்திப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்த நபரை நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தியபோது இவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-9)

---

## பரிசளிப்பு விழா

அச்சுவேலி, ஒக்.30

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் அருட் சகோதரி மரிய றொசாறியோ தலைமையில் நடைபெறும்.

விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கோட்ட கல்வி அதிகாரி ஏ.எஸ்.சற்குணராசாவும், கௌரவ விருந்தினராக அஞ்சலியகம் பணிப்பாளர் வணபிதா.எஸ்.டேமினியனும் கலந்துகொள்வர். (த-11)

---

# கந்தசஷ்டி தினத்தன்று மிருக பலிக்கு முயற்சி

## பொலிஸார் தலையிட்டு நிறுத்தினர்

யாழ்ப்பாணம், ஒக்.30

இந்து மக்களின் முக்கியமான விரதமான கந்தசஷ்டி தினமான நேற்றுப் புதன்கிழமை மல்லாகம் நரியிட்டான் வைரவர் ஆலயத்தில் நடத்தப்படவிருந்த மிருகபலி தெல்லிப்பழைப் பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஆடுகள் திருப்பிக் கொண்டு செல்லப்பட்டன.

மேற்படி ஆலயத்தில் வருடாந்தம் தீபாவளி தினத்தன்று மிருக பலியிடுதல் நடைபெற்று வந்தது. ஆனால் இவ்வருடம் மேற்படி ஆலயக் காணியை அந்த இடத்திலுள்ள இளைய நிலா சன சமூக நிலையம் கொள்வனவு செய்துள்ளதால் மிருக பலி நடத்துவதற்குமேற்படி சனசமூக நிலையம் எதிர்ப்பை வெளியிட்டது.

இது தொடர்பில் சனசமூக நிலையத்தால் வலி.வடக்குப் பிரதேச சபை மற்றும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது.

சனசமூக நிலையம் எதிர்த்ததால் மிருக பலியிடுதலுக்கு முதலில் அனுமதி வழங்க மறுத்த பிரதேச சபை பின்னர் தீபாவளி தினத்தன்று அதற்கான அனுமதியை வழங்கியிருந்தது. ஆனால் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குக் கொல்களக் கடமைகளை மேற்கொள்வதற்கான அதிகாரப் பரம்பல் அனுமதி பிரதேச சபையால் வழங்கப்படாமையால் மேற்படி பணிமனை தனது பொதுச் சுகாதாரப் பரிசோதகரை அனுப்ப முடியாது என்று மறுப்புத் தெரிவித்தது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பரிசோதிக்காமல் ஆடுகளை வெட்டுவதற்கு அனுமதி வழங்க முடியாது என்று பொலிஸார் கூறியதால் அன்று மிருக பலி இடம்பெறவில்லை.

ஆன்ாலும் எட்டாம் மடை என்று கூறப்படும் நேற்று குறித்த ஆலயத்தில் மிருக பலியை மேற்கொள்ள சிலர் மேற்கொண்ட நடவடிக்கைக்குப் பிரதேச சபை அனுமதி வழங்கியிருந்தது. பொதுச் சுகாதாரப் பரிசோதகரை அனுப்புவதற்கு உரிய சட்ட அனுமதி இன்மையைச் சுட்டிக்காட்டிய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகரைக் கடமைக்கு அனுப்ப முடியாது என்று தெரிவித்தது.

இதனால் வேறு பிரதேசத்தில் இருந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகரை அனுப்புவதற்கு வலி. வடக்குப் பிரதேச சபை முயற்சியெடுத்த நிலையில் தங்கள் பிரதேசத்தில் வேறு பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கடமையில் ஈடுபடுவதானது ஆள் மாறாட்டத்துக்கு ஒப்பானது என்று கூறிய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை இதற்கு எதிராகத் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்தது.

> பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் மிருக பலியைத் தடுத்து நிறுத்தினர். இதனால் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஆடுகள் திருப்பிக் கொண்டு செல்லப் பட்டன.

நேற்றுக் காலை குறித்த ஆலயத்துக்குச் சென்ற தெல்லிப்பழை பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் மிருக பலியைத் தடுத்து நிறுத்தினர். இதனால் ஆலயத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஆடுகள் திருப்பிக் கொண்டு செல்லப்பட்டன.

இதேவேளை, கந்தசஷ்டி தினமான நேற்று குறித்த ஆலயத்தில் வேள்வி நடத்துவதற்கு கடும் கண்டனம் வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்து மத விவகாரங்களுக்கு பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், குறித்த வேள்வியைத் தடுத்து நிறுத்துமாறு தெல்லிப்பழை பொலிஸ் பொறுப்பதிகாரியிடமும் பொலிஸ் தலைமையகத்திடமும் நேற்றுக் காலை கோரிக்கை விடுத்திருந்தார். (டு)

உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 13 வியாழன் (29.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 338

# சாட்சிகள் மீது விசாரணைக்கு

# ஐ.நா. சபை கடும் கண்டனம்

## பீரிஸிடம் எடுத்துரைப்பு எனத் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 30

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நியமித்த விசாரணைக்குழுவுக்கு சாட்சியம் வழங்கும் நபர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுகின்றமை தொடர்பில் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகம் இலங்கை அரசிடம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது என அறியமுடிகின்றது.**

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சாட்சியம் வழங்கிய நபர் ஒருவர் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டமை மற்றும் புனர்வாழ்வுத் துறையினரின் தேவையற்ற விசாரணைகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸிடம் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குபவர்கள் மீது நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படமாட்டாது என இலங்கை அரசு கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் உறுதியளித்திருந்தது.

அந்த உறுதிமொழிக்கு ஏற்ப இலங்கை அரசு செயற்பட வேண்டும் என்று ஐ.நா. அதிகாரி ஒருவர் கூறினார் எனவும், புனர்வாழ்வுப் பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்தும் சுட்டிக்காட்டினார் எனவும் அறியமுடிகின்றது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகள், அலுவலகங்களுக்கு இனி உடன் பால் விநியோகம்

தேவையானவர்கள் பெறமுடியும்

யாழ்ப்பாணம், ஒக்.30

தூய்மையான உடன் பாலை நேரடியாக வீடுகளுக்கும் அலுவலகங்களுக்கும் விநியோகிக்க முடியும். தேவையானவர்கள் தொடர்புகொண்டால் அனுப்பி வைக்கப்படும் என்று யாழ்கோ நிறுவனத் தலைவர் இ.சர்வேஸ்வரா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அனைவருக்கும் தூய்மையான சத்துணவான பால் கிடைக்கவேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. காலை மற்றும் மாலை என இரு வேளைகளிலும் பாலை விநியோகிக்க முடியும்.

ஒரு லீற்றர் மற்றும் அரை லீற்றர் அளவுள்ள பைக்கெற்றுக்களாகத் தர நிர்ணயம் செய்யப்பட்ட பால் வீடுகளுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்படு

(22ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு பயணித்த பஸ் மீது கல் வீச்சு

முல்லைத்தீவு, ஒக்.30

புதுக்குடியிருப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகளுடன் சென்ற இ.போ.ச பஸ் மீது புளியம்பொக்கணைப் பகுதியில் கல் வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பிலிருந்து பயணிகளை ஏற்றிய இ.போ.ச. பஸ் நேற்றுப் புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் பயணத்தைத் தொடர்ந்தது.

இந்த பஸ் ஏ - 35 வீதி ஊடாகப் பயணித்துக்கொண்டிருந்த போது இரவு 7.15 மணியளவில் கிளிநொச்சி புளியம்பொக்

(22ஆம் பக்கம் பார்க்க)

## தோள்களில் புத்தகப் பைகளுக்குப் பதிலாக குண்டுச் சிதறலும் துவக்குச் சன்னங்களும்

### இதுதான் ஆசியாவின் அதிசயம் என்கிறார் சிவசக்தி ஆனந்தன்

யாழ்ப்பாணம், ஒக்.30

புத்தகப் பைகளை தோளில் தாங்கிக் கொண்டு பள்ளிக்குப் போகும் பிள்ளைகளுக்குப் பதிலாக, உடல்களில் துப்பாக்கிச் சன்னங்களையும், எறிகணைச் சிதறல் துண்டுகளையும் சுமந்து கொண்டு பள்ளிக்குப் போகும் ஆசியாவின் அதிசயத்தை நாம் இன்று இலங்கையில் காணுகின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

உண்மையில் எந்த மக்களின் பிரதிநிதியாக இந்தச் சபைக்கு வருகைதந்துள்ளேனோ, அந்த மக்களுக்கு இந்த வரவு - செலவுத் திட்டத்தால் எவ்வித நன்மையும் கிடைத்துவிடப் போவதில்லை.

2009 ஆம் ஆண்டு போரின் வடுவிலிருந்து எமது தமிழ் மக்கள் இன்னமும் மீளவில்லை.

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண போக்குவரத்து நியதிச் சட்டத்துக்கு அங்கீகாரம்

யாழ்ப்பாணம், ஒக்.30

வடக்கு மாகாண போக்குவரத்து நியதிச் சட்டம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் நடந்த அமர்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்குரிய போக்குவரத்து நியதிச் சட்டம், வடக்கு மாகாண அமைச்சரவையின் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதனை விரைவில் சபையில் சமர்ப்பித்து ஆளுநருக்கு அனுப்பி அதன் அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்தவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

(22ஆம் பக்கம் பார்க்க)



வடக்கு மாகாண சபையின் வறிய மக்களுக்குப் புதிய வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 6 லட்சம் ரூபா செலவில் வீட்டு நிர்மாணத்துக்காக முல்லைத்தீவைச் சேர்ந்த 4 குடும்பங்களுக்கான காசோலைகள் நேற்று வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனால் வழங்கப்பட்டது. (த)

## வைத்தியசாலை கன்ரீனில் திறந்திருந்த உணவு அழிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்.போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையில் மூடாத நிலையில் வைத்து விற்பனை செய்யப்பட்ட சமைத்த உணவுகள் சுகாதாரச் சீர்கேடாக இருந்தமையால் அழிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலைக்கென இடம் எதுவும் இதுவரை ஒதுக்கப்படவில்லை. அதற்கென கட்டடமும் இதுவரை கட்டப்படவில்லை. அதனால் முன்னர் கண் விடுதி இயங்கிய கட்டடத்திலேயே பல மாதங்களாக சிற்றுண்டிச்சாலை இயங்கி வருகின்றது. குறித்த உணவு வகைகளைப் பாத்திரங்களில் வைத்து விற்பனை செய்யும்போது அவற்றை மூடி வைத்திருத்தல் வேண்டும். அங்கு மூடிகள்

(22ஆம் பக்கம் பார்க்க)

## சமுதாய நீர் வழங்கல் திட்டங்களை புனரமைக்க பட்ஜெட்டில் 750 மில்லி.

யாழ்ப்பாணம், ஒக்.30

சமுதாய நீர் வழங்கல் திட்டங்களைப் புனரமைப்பதற்கும், புதிய திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் 750 மில்லியன் ரூபா அடுத்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நீர் வழங்கல் சபைக்குப் பல்வேறு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

(22ஆம் பக்கம் பார்க்க)

ஆர்ப்பரித்தெழுந்தது இளைஞர் கூட்டம் அலைமோதுகின்றது
திசைகாட்டிக்கு - செங்கன் விசாவுக்கு

ஆம்!
யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக 100% விசா உறுதிப்பாட்டுடன் செங்கன் நாடுகளான ஜேர்மன், சுவிஸ், பிரான்ஸ், இத்தாலி, நோர்வே... போன்ற நாடுகளில் படிக்க பகுதிநேரமாக வேலை செய்ய 2 வருட விசா 14 பேர் பதிவு 4 பேர் விசா வெற்றியும் அடைந்துள்ளனர் என்பதைப் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் அறியத் தருகின்றோம்.
இன்று முதல் புதிய கட்டணமான வெறும் 14 இலட்சத்துடன் மேற்படி நாடுகளில் படிக்க, உழைக்க பறக்கலாம்.
(அனைத்தும் நிபந்தனைகளுக்குட்பட்டது)
(ஏழு நாள்களும் திறந்திருப்போம்)

திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
இல. 175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016
அரச பதிவிற்கு உட்பட்டது. பதிவிலக்கம் PV 82703

(C/17263)(7.3)

## ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல மஹிந்தவுக்குப் புலிகள் தேவை

மாவை சேனாதிராசா கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக்.30

புலிகளை அழித்துவிட்டோம் என்று பேசிய ராஜபக்ஷவுக்கு இன்று ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்காக விடுதலைப் புலிகள் தேவைப்படுகின்றார்கள். அதனால் தான் புலிகள் பற்றிப் பேசி சிங்கள மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். இதனைப் புத்திஜீவிகளும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துகொண்டுள்ளனர் எனத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா குறிப்பிட்டார்.

நல்லூர் பிரதேச சபையின் சனசமூக நிலையங்களுக்கான பிரதேச சபை நிதியுதவி

(22ஆம் பக்கம் பார்க்க)

## பரிசளிப்பு விழா

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் த. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவலர்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள். (த-173)

★ ★ ★

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு கல்லூரி கலையரங்கத்தில் அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) கோ.வரதராஜமூர்த்தியும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் இ.இராசசேகரமும் கலந்து கொள்வர். (வ-ரி)


★ ★ ★

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ தலைமையில் நடைபெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ஆ.இரா சேந்திரம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி ஏ.எஸ். சற்குணராசா கௌரவ விருந்தினராக அஞ்சலி அகம் பணிப்பாளர் வண. பிதா.எஸ்.டேமினியன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (வ-11)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**செல்லையா நேசநாதன்**

(இளைப்பாறிய தெ.கி.ப.நோ. கூட்டுறவு சங்க எரிபொருள் விற்பனை நிலைய முகாமையாளர் – கொடிகாமம்)



தோற்றம் 26.04.1948 மறைவு 30.09.2014

கடந்த 30.09.2014 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் துயரச்செய்தி அறிந்து நேரடியாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமக்கு உறுதுணையாக நின்று உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் இறுதிக்கிரியையின் போது பல்வேறு வகையில் உதவி, ஒத்தாசை நல்கியோருக்கும் உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன்,
இன்று (30.10.2014) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம். குடும்பத்தினர்.

(53641)(7.6.3)

## மரண அறிவித்தல்



**செல்லத்துரை யோகராசா**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட **செல்லத் துரை யோகராசா** (28.10.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணிக்கு நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்.
நீர்வேலி கந்தசாமி கோயிலடி, நீர்வேலி.
(53671) (45.6.3)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**அமரர் கந்தையா செல்வரத்தினம்**

தோற்றம் : 27.10.1935
மறைவு: 02.10.2014

கடந்த 02.10.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கந்தையா செல்வரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (31.10.2014) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அந்த நிகழ்விலும் மறுநாள் (01.11.2014) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உத்திராவத்தை,
புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை. (51993)(5.6.3) குடும்பத்தினர்.

## கை கழுவுதல் தின நிகழ்வு

தென்மராட்சி.
ஒக்.30

தென்மராட்சி. கல்வி வலயத்தினர் 'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் நடாத்தும் சர்வதேச கை கழுவுதல் தின நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் இடம்பெறும். வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி நகர சபை தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளன், வேள்ட் விஷன் நிறுவன செயலாற்றுகை அலுவலர் ஜெயால்ட் அன்ரனி, நிறுவன திட்ட முகாமையாளர் ஏ.ஜீ.றொசைரோ ஆகியோரும் கலந்து கொள்வர்.

சர்வதேச கை கழுவுதல் தினத்தையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கல் ஆகியவையும் இடம்பெறும். (வ-9)

## கூட்டம்

அரச சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் இறப்பு மானியத்தை உடன் வழங்குவது தொடர்பான கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் ஜி.ஏ.ஜே.சில்வெஸ்டர் தலைமையில் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும். நீண்ட காலமாக வழங்கப்படாதிருக்கும் உதவித் தொகைகளை வழங்கவும் கிளைச் சங்கங்கள் இவ்வாறான கொடுப்பனவுகளை உடன் வழங்கக் கூடியதான செயற்பாடுகளை மேற்கொள்வதுமே இன்றைய கூட்டத்தின் நோக்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆசிரியை
செல்வி இ.இராஜலோஜினி
அவர்களின் அன்புத் தந்தை
**க.இரத்தினசபாபதி**
29.10.2014 புதன்கிழமை காலமானார். அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர், ஊழியர் நலன்புரி சங்கம்,
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி, கிளிநொச்சி.
(47911)(5.6.3)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**செல்லத்துரை சுதர்சன்**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 29 |
| 04 | 10 |
| 1979 | 2006 |

ஆண்டுகள் எட்டு நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்புச் செல்வமே!
மாண்டுவிடவில்லை நீ எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றாய்.

குடும்பத்தினர்

(53668)(7.6.3)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



| வாழ்வியலில் | இறையியலில் |
|---|---|
| 11 | 02 |
| 10 | 11 |
| 1927 | 2011 |

அமரர் **வேலுப்பிள்ளை பொன்னம்பலம்**
(உரிமையாளர் - சங்கானை பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம் தரன் ரேடேஸ், Colombo Jet steel (Pvt) Ltd)
(திதி: 30.10.2014)

எமக்கு உயிர்தந்து, இனிய உறவு தந்து, நல் உள்ளம் தந்து, பாரில் உயர்வு தந்த எம் அன்புத் தெய்வத்தைப் போற்றி வணங்குகின்றோம்.

*நொந்ததால் நொந்தோருயர்வை நோக்கமாய்க் கொண்டு வாழ்ந்து*
*சொந்தமாய் உழைத்தே உழைப்பைக் கல்விக்காய், கடவுளிற்காய்*
*தந்துமேஏழைகட்கும், தொழிலாளர்க்கும் வாழ்வளித்து*
*சிந்தியே வியர்வை நீத்தார் பொன்னம்பலத்தாரை நினைவு கூர்வோம்.*

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பாக்கியரத்தின பவனம்,
வட்டு வடக்கு, சித்தங்கேணி. குடும்பத்தினர்.

(53665)(12.3.6)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**அமரர் நாகமுத்து செல்லம்மா**

(ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர், தென்மராட்சி, வடமராட்சி கல்வி வலயம்)



தோற்றம் 13.03.1945 மறைவு 02.10.2014

கடந்த 02.10.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது சகோதரியின் துயரச் செய்தி கேட்டு பத்திரிகை, துண்டுப்பிரசுரம், பதாகை (Banner), தொலைபேசி, தந்தி மூலமாகவும் மற்றும் நேரடியாகவும் வந்து அனுதாபம் தெரிவித்த அனைத்து உறவினர், நண்பர்களுக்கும், நோயுற்றிருந்தவேளை சிரமம் பாராது சேவையாற்றிய யாழ்.போதனா வைத்தியசாலை 26ஆம், 3ஆம் "வாட்" வைத்தியர்கள், ஊழியர்கள், இன்னும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

01.11.2014 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப.11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (47322)(12.3.6) குடும்பத்தினர். 021 720 0590

# வாழைக்குலைத் திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

## நீர்வேலி, சிறுப்பிட்டி பிரதேசங்களில்

யாழ்ப்பாணம், ஒக். 30

நீர்வேலி, சிறுப்பிட்டி பிரதேசங்களில் இரவு வேளைகளில் வாழைக்குலைத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித் துள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவித்தனர்.

தற்போது பெய்து வரும் மழையைப் பயன்படுத்தி திருடர்கள் வாழைத் தோட் டங்களில் வாழைக்குலைகள் மீது தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். சிறுப்பிட்டி மேற்கில் வாழைத் தோட்டத்தில் இருந்து திங்கட் கிழமை பத்துக்கும் மேற்பட்ட வாழைக்குலைகளை திருடர்கள் வெட்டிச் சென்றுள்ளனர். அதனைவிட அந்தப்பகுதியில் இந்த மாத முற்பகுதியிலும் 140 இற்கும் மேற்பட்ட வாழைக் குலைகள் களவாடப் பட்டுள்ளன. அதனை விட நீர்வேலிப் பகுதியில் உள்ள வாழைத்தோட்டங் களிலும் இவ்வாறு வாழைக் குலைகள் திருடர்களால் வெட்டிச் செல்லப்பட்டுள்ளன.

குறிப்பாக வாழைப்பழத்தின் விலை அதிகரித்துக் காணப் பட்ட சமயம் சிறுப்பிட்டி பகுதியில் கூடுதலான வாழைக் குலைகள்மீதுதிருடர்கள்கைவரிசையை காட்டியிருந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

திருடர்களின் இந்த வாழைக் குலைத்திருட்டை முறியடிக்கும் முகமாக விவசாயிகள் தமது வாழைத்தோட்டங் களில் இரவில் காவல் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (வ-17)

# தென்மராட்சி கல்வி வலயத்தின் மாதமொரு இசைக் கச்சேரி

தென்மராட்சி, ஒக்.30

தென்மராட்சி கல்வி வல யத்தின் மாதமொரு இசைக் கச்சேரி என்னும் நிகழ்வு நாளை வெள்ளிக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் இசை ஆசிரியர்கள் மூலம் சங்கீத பாடத்தை மேன்மையடையச் செய்வதுடன் மாணவர்களின் இசை ஆற்றலை வளர்க்கவும் என வலயத்தால் இந்தத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. இந்த இசை நிகழ்வில் அந்தந்தப் பாடசாலை இசை ஆசிரியையின் இன் னிசைக் கச்சேரியுடன் அயல் பாடசாலைகளைச் சேர்ந்த இரு ஆசிரியர்களின் இசைக் கச்சேரியும் மாணவர்களின் இசை நிகழ்வுகளும் நடத்தப் படவுள்ளன.

இதன் முதலாவது இன்னிசை விழாநாளை வெள்ளிக்கிழமை பி.பி. 2.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் கல்லூரி இசை ஆசிரியை திருமதி மஞ்சுளா கண்ணனின் இசைக் கச்சேரியும் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி இசை ஆசிரியை திருமதி ர.கலையரசி, மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய இசை ஆசிரியை திருமதி சீ.சிவகாந்தன் ஆகிய இருவரது இசைக் கச்சேரிகளும் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய மாணவன் ர.நிலக்ஸனின் கீர்த்தனையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களின் பாரதியார் பாடல்களும் இடம்பெறும்.

தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந் தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதன், சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவன், டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவ பாலன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

ஒவ்வொரு மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை ஒவ்வொரு பாடசாலையிலும் இவ்வித இசைக் கச்சேரிகள் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு

ஜீ.சி.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் விவசாய மற்றும் மனைப்பொருளியல் மாண வர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு இன்றும் நாளையும் புலோலி ஆசிரியர் வள நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

இதில் விவசாய பாடத்துக்கான செயலமர்வு இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமை மனைப் பொருளியல் பாடத்துக் கான செயலமர்வும் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளன. வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆதரவுடன் வடமராட்சிக் கல்வி வலயத்தினரால் நடத்தப்படும் இந்தச் செயலமர்வில் பங்குபற்றும் பாடசாலைகளின் மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (த-108)




50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

Wish your a Happy Birthday

கட்டைக்காடு முள்ளியானைச் சேர்ந்த

தம்பிராசா அருள்சந்திரபுஸ்பம்

ஆசிரியர் (புஸ்பா ரீச்சர்)

அவர்கள் 50ஆவது பிறந்தநாளை இன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகின்றார்.

இவர் இறைவனின் ஆசீர்பெற்று எதிர்காலத்தில் சிறந்த மாணவச் சிற்பிகளை உருவாக்கி தன் புகழ் ஓங்கவும் பிறர்பணி பேணவும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ இந்த நாளில் பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

வாழ்க உம்பணி, வளர்க உம் சேவை.

பிள்ளைகள் : நிறோஜன், நிறோஜினி

(53655)(7.6.3)


# சித்திரக் கண்காட்சி

செலான் வங்கியின் சாவகச்சேரி கிளையினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு இடையில் நடத்திய சித்திரப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களால் வரையப்பட்ட சித்திரங்களின் கண்காட்சி இன்று பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். அத்துடன் வலயத்தைச் சேர்ந்த ஆறு முன்னணிப் பாடசாலை மாணவர் களுக்குக்கு இடையிலான போட்டிகளும் கல்லூரி வளாகத்தில் இடம் பெறவுள்ளன. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ் வரன், சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

# சர்வதேச சிக்கன தின விழா

இலங்கை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்க சம்மேளனம் மற்றும் வட மாகாண சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சாங்கங் களின் சமாசங்கள் இணைந்து நடத்தும் 90 ஆவது சர்வதேச சிக்கன தின விழா நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.


யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத்தில் தலைவர் எஸ்.இலகுநாதன் தலை மையில் இடம்பெறும் நிகழ்வில் இலங்கை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங் களில் சம்மேளனத்தில் தலை வர் பி.ஏ.கிரிவந்தெனிய பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், கொழும்பு கூட்டுறவு அபி விருத்தி ஆணையாளர் உபுல் சாந்த அல்விஸ், பேராசிரியார் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வார்கள். (வ-17)


## யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.த.க வித்தியாலயம்

## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு - 2014



ஜெ.சகானா -175 த.சொபியா -173 யூ.கிங்ஸ்ரன் -171 கி.சுகேதா - 170 அ.அபூர்வநாதா -170 அ.மதுசாந் -169 த.டிலக்ஷன் -167 ம.சுஜீவ்காந் -165



வ.டிலாந்தினி -165 ம.ஏஞ்சல்யஸ்வியா -162 ற.சுதர்ஷிகா -162 வி.கிருஷியன் -160 ற.ஷருண்மரின் -160 சி.ரிஷாந்தி -160 அ.அகவாணி -159 சு.ஷாம்சுலக்ஷன் -158



க.பிரித்தி -158 சு.மதுசன் -158 உ.சுபிதா -158



**1வது வரிசையில் இருப்போர்**

ம.பேதுசன்-114, த.சாருஜன்-152, ஸ்ரீ-பவித்தன்-143, ற.திலக்ஷன்-137, பா.சயிந்தன்-110, ஜெ.கிருஷாந்-146, நி.மேரி யதுர்ஷனா-110, ப.திஷாரா-157, யோ.ஜீவிதா-149, மோ.யாக்கின்-119, சி.சந்தோசன்-147, உ.ஜெனகன்-150

**2வது வரிசையில் நிற்போர்**

அ.சாமினி-132, ப.தீபிகா-101, வி.சாருயன்-105, ற.காஞ்சனா-153, ச.சயிந்தவி-145, ஜெ.டிலக்ஷனா-101, வி.சாகித்தியா-129

**3வது வரிசையில் நிற்போர்**

ஜெ.கிருஷாங்கி-146, வி.சுவர்ணா-108, தே.சிந்துஜன்-138, லி.சிவேதன்-143, ம.விகாசன்-127, நி.மிதுரன்-113, ச.சிந்துசான்-121

**4வது வரிசையில் நிற்போர்**

ப.கஜிதா-144, சு.வர்ஜனா-134, சு.தமிழ்ப்பிரியன்-114, ஜெ.சியானுஷா-136, க.சஜீனா-151, அ.சௌமியா-150, க.வினுஜா-122, தி.சியானா-133, ச.றதீனா-135, ற.நஸ்மிதா-154, பா.ஜெபசர்மி-130, சு.பபிதா-125

எமது மாணவச் செல்வங்களை வழிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு வித்திட்டு எமது பாடசாலைக்கு பெருமதிப்பைப் பெற்றுத் தந்த எமது அதிபர் அருட்சகோதரி மேரி ஞானதர்ஷினி அல்பிரட் அவர்களுக்கும் எமது ஆசிரியர்களான திருமதி.அனற் மரீடா றொபின், திரு.கந்தசாமி சசிகரன், திருமதி.ஜெயகுமாரி பேரின்பநாதன், திருமதி.உதயகலா சந்திரமோகன் ஆகிய ஆசிரியர்களை மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(53579)

- பாடசாலைச் சமூகம் -

# தமிழரசுக் கட்சியை விட்டு விலகாதிருந்தால் அதற்குத் தலைமை ஏற்றிருப்பார் ஸ்ரீபாஸ்கரன்

## நினைவு நிகழ்வில் ஆறு. திருமுருகன் தெரிவிப்பு

வலி. வடக்கு, ஒக். 30

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து ஸ்ரீ பாஸ்கரன் விலகாது இருந்திருந்தால் இடைக்காலத்தில் அவர் கட்சியின் தலைமையை ஏற்று நடத்தும் தகைமை கொண்டவராக விளங்கியிருக்கக் கூடும். ஆனால்அவர்கட்சியில்இருந்து விலகிச் சுயேச்சையாக மக்களுக்காகச் செயற்பட்டுள்ளார் எனக் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் தலைவரும், வலி.வடக்கு பிரதேச சபை முன்னாள் தலைவருமான அமரர் சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரனின் 14 ஆவது நினைவு தினக் கூட்டம் எஸ்.விக்கினராசா தலைமையில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி ஆறு. திருமுருகன் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீபாஸ்கரன் பல்வேறு சமூகப் பணிகளைப் புரிந்தமையால் அவரைப் பலரும் அறிந்துள்ளதுடன் பலருடைய மனத்திலும் அவர் இடம் பிடித்துள்ளார். இவர் ஆசிரியராகப் பாடசாலையிலும் ஆசிரியர் கலாசாலையிலும் கடமையாற்றியுள்ளதுடன் ஆசிரியர் கலாசாலையில் அதிபராகவும் இருந்துள்ளார். இவருடைய குடும்பம் உலகப் புகழ் பெற்ற குடும்பமாகும். இந்தியாவில்கூட ஆஸ்திரேலியாவில் வாழும் அவருடைய சகோதரன் சுசீந்திரனின் கட்டுரைகள் பாடப் புத்தகமாக உள்ளன.

சிறு வயதில் அரசியலில் இறங்கியமையால் தனது பதவிகளைத் துறந்துள்ளார். பின்னர் அரசியலையும் கைவிட்டுச் சுயேச்சையாகமக்களின்சேவைகளைப் புரிந்து வந்துள்ளார். இவர் எந்தவொரு நாட்டின் தூதரகங்களுக்குக் கடிதம் எழுதினாலும் அத்தூதரகங்கள் மதிப்பளித்து பதிலளிப்பதுடன் கேட்டவைகளும் கூடக் கிடைத்து வந்துள்ளன.



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அமரர் செனட்டர் நடேசனின் கார் ஒன்று நிறுத்தப்பட்டு இருந்தது. அதனை அன்றைய பிரதம மந்திரியின் மகனான அனுராபண்டாரநாயக்க யாழ்ப்பாணம் வந்த வேளை கண்டுள்ளார்.

இந்தநிலையில் ஸ்ரீபாஸ்கரன் பாடசாலைக்கு நிகழ்வு ஒன்றுக்கு வந்த வேளை அங்கு குறித்த காரைக் காணாது உடனடியாக விசாரித்து அது தொடர்பில் உயர் இடத்துக்கு கடிதம் எழுதினார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் கடமையாற்றுபவர்கள் காலையில் கடமைக்குச் சென்றால் மாலையில் தான் திரும்ப முடியும். இதன் காரணமாக சிமெந்து தொழிற்சாலையில் கடமையாற்றுபவர்கள் தமது வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிச் செல்வதற்கு வசதி யாக இரவுச் சந்தையை முதன்முதலில் மல்லாகத்தில் ஆரம்பித்த பெருமைக்கு உரியவர் இவர். பல நாடுகளில் இருந்தும் பல்வேறுவகையான நூல்களைப் பெற்றும் பல்கலைக் கழகம் முதல் பாடசாலைகள் வரை தேவைக்கு ஏற்ப அவற்றை வழங்கியும் கல்வி அபிவிருத்திக்கும் ஆற்றலுக்கும் பல வழிகளிலும் உதவிகளைச் செய்துள்ளார்.

மல்லாகம் பல வழிகளிலும் சிறப்புப்பெற்ற ஒரு இடமாகும். அந்த வகையில் மல்லாகம் மகா வித்தியாலயம் அன்று ஒரு சிறந்த ஆங்கிலப் பாடசாலையாகத் திகழ்ந்தது. இந்தப் பாடசாலையில் ஆங்கில கல்வி கற்ற ஒருவரே முதன் முதலாகத் தொழில் நிமித்தம் சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார்.

இதேபோன்று பல கல்வி மான்களும், அறிஞர்களும் மல்லாகம் பகுதியில் வாழ்ந்துள்ளார்கள். இத்தகையவர்களில் ஒருவராக ஸ்ரீபாஸ்கரனும் காணப்பட்டார்.

இந்த வகையில் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானம், கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் எனப் பல பொதுச் சொத்துக்களை உருவாக்கி மக்களுக்கு வழங்கியுள்ளார். இதனை நல்ல முறையில் பாதுகாக்கவும் பராமரிக்கவும் வேண்டிய பொறுப்பும் கடமையும் எதிர் காலச் சந்ததிக்கு உண்டு-என்றார். (த-86)

# சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட ஆறு பேர் கைது

மன்னார், ஒக். 30

மன்னார் நகரை அண்டிய கிராமப் புற மீனவர்கள் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டபோது மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மன்னார் நகர் புறத்தை அண்டிய பனங்கட்டுகொட்டில் கிராமத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் மீன்பிடிக்கான அனுமதிப் பத்திரம் இன்றியும், தடைச்செய்யப்பட்ட சுருக்கு வலை கொண்டும் மீன்பிடியில் ஈடுபட்டபோது மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிவான் செல்வி ஆனந்தி கனகரட்ணத்திடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் தங்கள் குற்றங்களை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து ஆறு மீனவர்களுக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்த நீதிவான், இனிமேல் இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்டால் மன்று கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என மீனவர்களைஎச்சரிக்கைசெய்து கைப்பற்றப்பட்ட வலை களை மீனவர்களிடம் ஒப்ப டைக்கும் படியும் உத்தரவிட்டார். (த-56)

# சைவ பரிபாலன சபையின் பரீட்சை

தென்மராட்சி,ஒக்.30

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் சைவசமய பாடப் பரீட்சைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான பரீட்சை வினாத்தாள்கள் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. பாடசாலை அதிபர்கள் இன்று வினாத்தாள்களைப்பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள் ளார். (வ-9)

# வவுனியாவில் பயனாளிகளுக்கு தானியங்கள்

வவுனியா, ஒக். 30

வவுனியாவில் பயனாளிகளுக்கு விதை தானியங்கள்வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

வவுனியா தெற்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு வாழ்வெழுச்சி திணைக்களத்தின் 6 ஆவது வலயத்தின் வாழ்வாதாரப் பணிப்பாளர் அனுரா எஸ்.வீரரத்தின பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு விதை தானியங்களை வழங்கியுள்ளார்.

இதில் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (த-421)


**யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம்**
**அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்**

முதலாம் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலி இலக்கம் - 11976
2ஆம் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலி இலக்கம் - 12498
3ஆம் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலி இலக்கம் - 3095
ஆறுதல் பரிசுகளாக பின்வரும் இலக்கங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

10353, 10876, 14894, 8511, 11251 அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசுகள் 02.11.2014 அன்று நடைபெற உள்ள பரிசளிப்பு விழாவின் போது வழங்கப்படும். அன்றைய தினம் பரிசில்களைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்கள், அன்றிலிருந்து 10 நாள்களுக்குள் பாடசாலைக் காரியாலயத்தில் உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதனைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(53675)(12.3.6) தலைவர்.



**குறைந்த விலையில் உன்னதமான பயணம்**



London
Perth
New York
Auckland
Doha
Thiruchi
Delhi
Bangkok
Honk Kong
Guangzhou
Narita
Melbourne
Toronto
Sydney
Madurai
Bombay
Singapore
Malaysia
Rome
Dubai

உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

Chennai Rs. 24,100/- upwards
London Rs. 82,500/- upwards
Paris Rs. 61,200/- upwards
Frankfurt Rs. 65,800/- upwards
Zurich Rs. 62,800/- upwards

ஹேலீஸ் டிராவல்ஸ் & டூர்ஸ்
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!



**காணி விற்பனைக்கு**

அச்சுவேலி தெற்கில், ஆஸ்பத்திரிக்கு அருகில் வண்ணக்கன் கிரியும், பிரப்பந் தாழ்வும் 7 பரப்பு 4 ¼ குழி காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 491 1974 (53673)(5.6.3)

**Personal Class** தரம் 3- A/L வரையான மாணவர்களுக்கு English, சிங்களம், Spoken with Grammar (No age Limit) கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (எமது ஆசிரியர் குழாம் அனைத்து பிரதேசத் திற்கும் வருகை தருவார்கள்) (53669) (7.6.3)

தொடர்பு: பிரபா ஆசிரியர், நாவற்குழி, நாவற். 072 599 4951

**பணியாள்கள் தேவை**

செல்வா ரெலிகொமினிக்கேசன்

124, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.(பெருமாள் கோவில் சந்தி)

மேற்படி நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பெண் பணியாள்கள் தேவை. வன்னிப் பகுதியைச்சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 077 719 3173 (53670) (4.6.3)

**வாடகைக்கு**

தட்டாதெருச் சந்திக்கு அருகில் உள்ள பாட்டுரி வாளுடன் கூடிய சோதி மரக் காலை வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 0778175926
077 8030659
(53566)(5.6.3)

**வகுப்புக்கள்**

ஆங்கிலம், கிற்றார், ஓகன் வகுப்புக்கள். வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 077 923 8376 (49776)(45.6.3)



**பனை அபிவிருத்திச் சபை**
**கூறுவிலைகோரல்**

சபையின் பாவனைக்குப் பின்வரும் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளமையால் தகுதிவாய்ந்தவர்கள் அதற்கான தங்களின் ஆகக்குறைந்த கூறுவிலையினை சபையின் தலைமை அலுவலகத்திற்கு 11.11.2014இற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம். மேலும் கூறுவிலை சமர்ப்பிக்கும் கடிதஉறையின் [illegible] இடதுபக்க மேல் மூலையில் விரிவாக்கல் பகுதிக்கான கூறுவிலை எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

1. தையல் இயந்திரம் - கராக்சி - 05 எண்ணிக்கை
2. முட்டி - 3750 எண்ணிக்கை

தலைவர், பனை அபிவிருத்திச் சபை,
முதலாம் மாடி தேசிய வீடமைப்பு செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

(SI17267)(12.3.6)



**பாராட்டி வாழ்த்துக்கள்** **முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்** 30 10 2014



2014ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ்.மத்திய கல்லூரி மாணவனும் திரு.திருமதி இரனியூஸ் ஜெயசீலன் ராஜீ தம்பதியரின் புதல்வர்களான செல்வன் இ.அபிசான் மற்றும் இன்று பிறந்தநாளைக் கொண்டாடும் செல்வன் பகீசான் ஆகிய இருவரையும் அவர்கள் எல்லாம் வல்ல இறைவன் துணையுடன் வாழப் பாராட்டி வாழ்த்துகிறோம்.



அபிசான் பகீசான்

வாழ்த்துவோர்:

அப்பா, அம்மா,அப்பப்பா, அம்மம்மா, அண்ணா - வேணு, அபிசான், தம்பி - பகீ, மாமா - ராகுல், ராசா - அத்தை, மச்சான் - எனோஜன், மச்சாள் - என்சி, எனோ மற்றும் சித்திகள் - கிருசா, றஜீதா (வேணு அபிசான் ஜெயலசும்)

இல.19,வெள்ளவத்தை, யாழ்ப்பாணம்.

Congratulation



**துன்பம் தீர அருள்வாக்கு**



குழந்தைப் பேறில்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், குடும்பப்பிரச்சினைகள், வெளிநாடு செல்லத்தடை, தொழில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் -தீர அருள் வாக்கு கூறப்படும்.

வெள்ளவத்தை பெர்னாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் 01, 02, 03 / 11/ 2014 ஆகிய நாள்களில் யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறவுள்ளார்.

பூசை நேரம்:
காலை 10.30 மணி
மாலை 04.00 மணி

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
ஞான வைரவர் ஆலயம்
கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 077 801 2226

தமிழ் கலாசார உடையுடன் வரவும்.

(45.6.3)(53667)

## யசிந்தனுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30
றெக்ஷயனைக் கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள லண்டன் யசிந்தனுக்கு எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே அவருக்கு மறியல் நீடிக்கப்பட்டது. பிணையில் விடுவிக்கப்பட்டு கொழும்பில் உள்ள கமல் மற்றும் அனித்தாவும் நேற்று முன்தினம் வழக்குக்குச் சென்றிருந்தனர்.
இரண்டாவது குற்றச்சாட்டில் கைதான யசிந்தனே தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல்நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக்ஷயனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டில் இவர்கள் மூன்று பேரும் கடந்த நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். (த-4)



மாதகல் புனித தோமையர் தேவாலயத்தில் நடைபெறும் மாலை நேரப் பாடசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பங்கு தந்தை அருட்திரு ராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் அருட்சகோதரி, பங்கு மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த-86)

## 44 சனசமூக நிலையங்களுக்கு நல்லூர் பிரதேச சபை நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஒக்.30
நல்லூர் பிரதேச சபையால் சபையின் நிர்வாகத்தின் கீழ்வரும் 44 சனசமூக நிலையங் களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு நேற்று திரு நெல்வேலி பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோவில் மண் டபத்தில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில். நடைபெற்றது.
நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும், சிறப்பு விருந்தினராகக் கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனும் கலந்து கொண்டனர்.
முன்னதாக விருந்தினர்கள் ஆலய முன்றலில் இருந்து கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் கோலாட்ட நிகழ்வுடன் மேடைக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டதை அடுத்து பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர் உட்பட நல்லூர் பிரதேச சபைத் தலைவர், சபை உறுப்பி னர்கள், உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள் ஆகியோர் மங்கல விளங்கேற்றினர்கள். அதைத் தொடர்ந்து உரைகள் இடம்பெற்றன.
பிரதம விருந்தினர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனதிராசா, சிறப்பு விருந்தினர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் உட்பட பிரதேச சபை தலைவர் மற் றும் உறுப்பினர்கள் சனசமூக நிலையங்களுக்கான உதவித் தொகைக்குரிய காசோலைகளை நிலையங்களின் பிரதிநிதிகளிடம் வழங்கினார்கள். (த-7)

# உரிய ஆவணங்களைப் பேணி தங்க நகைகள் கொள்வனவு

## நகைக்கடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக் 30
நகைகளைக் கொள்வனவு செய்யும்போது எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் உரிய பதிவு ஆவணங்களைப் பேணிய பின்னர் கொள்வனவு செய்யுமாறு யாழ்.வர்த்தகசங்கத்தின் தலைவர் இ.ஜெயசேகரம் அறிவித்துள்ளார். நகைக்கடை உரிமையாளர் களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். வணிகர் கழகத்தில் நடை பெற்றது.
வர்த்தகர்களின் கோரிக்கைக்கு அமைவாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஜெயசேகரம் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
நகைக் கடைகளில் நகைகள் கொள்வனவு செய்யப்படுவதால் சட்ட நடவடிக்கைகளின்போது களவு நகைகள் கொள்வனவு செய்யப்பட்டதாக நகைக்கடை உரிமையாளர்கள் விசாரணைக்கு அழைக்கப்படுகின்றனர். இதனால் நகைக் கடை உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதால் எவ்வாறான நடைமுறையைப் பின்பற்றவேண்டும் என்பது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் விளக்கம் பெறுமாறு கடந்த கூட்டத்தில் கோரிக்கை விடுத் திருந்தனர். இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருடன் கலந் துரையாடியபோது அவர்கள் சில அறிவுறுத்தல்களை எமக்கு வழங்கியுள்ளார்கள்.



இதற்கமைவாக நகைக் கடைகளில் கமராவில் 3 மாதங்களுக்கான பதிவுகளை ஆவணப்படுத்தி வைத்திருக்க வேண்டும். நகைகளைக் கொள்வனவு செய்யும்போது உரியவரிடம் அடையாள அட்டை பெற்று முழுப்பெயர் மற்றும் முகவரி உள்ளடங்கலான விவரங்களைச் சரியான முறையில் பற்றுச்சீட்டில் பதிவு செய்து ஆவணப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்து நகைகளை விற்பனை செய்பவர்களிடம் அவதானமாக இருப்பதுடன் உரிய ஆவணப்படுத்தல்களை மேற்கொள்வது மட்டுமன்றி முடியுமான வரை கொள்வனவை தவிர்க்க வேண்டும். விற்பனைக்குக் கடைகளில் வைத்திருக்கும் நகைகளின் விவரம், அளவு தரம் என்பவற்றைபேணுவதுடன் பதிவுகள் ஊடாக நாளாந்தம் விற்பனை செய்யப்பட்ட நகைகள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட நகைகளின் விவராங்களையும் வைத்திருத்தல் வேண்டும்.
களவு நகைககள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டு அது குறித்து விசாரணைக்கு வருகை தரும்போது பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் யாழ்.மாவட்டம் தவிர்ந்த வெளி மாவட்டங்களில் இருந்து பொலிசார் விசாரணைக்கு வந்தால் உடனடியாக யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தல் வழங்கி விட்டு அவர்களது ஒப்புதலுடன் விசாரணைக்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும். சிவில் உடையுடன் விசாரணைக்கு வருகை தரும் பொலிசாருக்குப் பதில் அளிக்கத் தேவையில்லை. எனவே இந்த நடைமுறைகளைப் பின்பற்றி குடாநாட்டில் களவு நகைகள் விற்பனை செய்யப்படுவதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது-என்றார். (த-14,ரி)

## மருமகளின் தாக்குதலில் மாமி படுகாயம்

தென்மராட்சி, ஒக். 30
மருமகளின் கொட்டன் அடிக்கு இலக்காகி மாமி படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த 22 ஆம் திகதி இரவு சாவகச்சேரி வடக்கில் இடம்பெற்றது. அவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி வடக்கு மடத்தடியைச் சேர்ந்த பாலச்சந்திரன் திலகவதி (வயது-64) என்பவரே தாக்குதலுக்கு உள்ளாகிக் காயமடைந்தவராவார். (த-9)

## விபத்தில் காயமுற்ற முதியவர் சாவு

தென்மராட்சி, ஒக்.30
கைதடி-நுணாவில் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற சைக்கிள்- மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பயனின்றி யாழ். போதனா மருத்துவமனையில் உயிரிழந்தார் என்று சாவகச்சேரி நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த வேலாயுதர் அம்பலவாணர் (வயது-80) என்பவரே இவ் விதம் உயிரிழந்தவராவார்.
கைதடிப் பாலத்துக்கு அண்மையில் ஏ-9 வீதியில் மோட்டார் சைக் கிள் மோதியதில் இருவரும் காயமடைந்தனர். இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு முதியவர் மேலதிக சிகிச்சையாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனின்றி முதியவர் 6 தினங்களின் பின்னர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து மோட்டார் சைக்கிளோட்டியான யாழ்ப்பாணம், பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி(வயது-44) என்பவர் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டார். (த-9)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய டிராக்டர் பறிமுதல்



கோப்புப் படம்

தென்மராட்சி,ஒக்.30
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரத்தையும் பெட்டியையும் பறிமுதல் செய்யுமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுக் கொடிகாமம் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.
கடந்த ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி அனுமதிபத்திரமின்றி மணல்ஏற்றியமைக்காக உழவு இயந்திரமொன்றின் சாரதி உட்பட மூவ ருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டதுடன் வாக னமும் பிணையில் விடப்பட்டது.
வாகனம் தொடர்பான வழக்கு நேற்று இடம்பெற்றபோது உழவு இயந்திரத்தையும் பெட்டியையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.
வரணிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரின் உழவு இயந்தி ரமும் பெட்டியுமே இவ்வாறு பறி முதல் செய்யப் பட்டதாகும். (த-9)

## யாழ்.அதிபர்கள், ஆசிரியர்கள் 50 பேர் கண்டிக்குக் கல்வி ஆய்வுச் சுற்றுலா

அச்சுவேலி,ஒக்.30
யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் 50பேர் கொண்ட குழுவொன்று கண்டி மாவட்டத்தில் உள்ள பிள்ளை நேயப் பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் கள ஆய்வை மேற் கொள்வதற்குச் சுற்றுலா சென்றுள்ளது.
யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த நல்லூர், கோப்பாய், யாழ்ப்பாணம் கல்விக் கோட்டங்களில் இயங்கும் முன்னோடி ஆரம்பப் பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50 பேர் கொண்ட குழுவொன்றே கடந்த செவ்வாய்க் கிழமை கண்டிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது. அவர்களது இந்தக் கற்றல், கற்பித்தல் கள ஆய்வுச் சுற்றுலாவுக்கான அனுசரணையை யுனிசெப் நிறுவனம் வழங்கியுள்ளது.
மேற்படி குழுவினர் நான்கு தினங்கள் கள ஆய்வுச் சுற்றுலாவை மேற்கொண்ட பின்னர் எதிர்வரும் சனிக்கிழமை திரும்பவுள்ளனர். கண்டி மாவட்டத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் பின்ளை நேயப் பாடசாலைகளின் செயற்பாடுகளை ஆய்வு செய்து அவதானிக்கவுள்ளனர்.
இந்த 50 பேரில் தெரிவு செய்யப்பட்ட ஆரம்பப் பாடசாலை ரீதியாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கோட்ட ரீதியாக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், வலய மட்டத்திலான ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர். (த-11)

குழுவினர் நான்கு தினங்கள் கள ஆய்வுச் சுற்றுலாவை மேற் கொண்ட பின்னர் எதிர்வரும் சனிக்கிழமை திரும்பவுள்ளனர்.

# 4 கோடி ரூபா பெறுமதியான காணிகளை அமைச்சின் பெயரால் அபகரிக்க முயற்சி

## மன்னார் நகர பிதா ஞானப்பிரகாசம் குற்றச்சாட்டு

மன்னார், ஒக். 30
கைத்தொழில்வாணிப அமைச்சின் மாவட்ட அலுவலகம் என்னும் பெயரில் சுமார் 4 கோடி ரூபா பெறுமதியுடைய காணிகளை அபகரிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

மன்னார் நகரில் ரயில் நிலைய வீதியில் இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தின் மன்னார் மாவட்ட தலைமை அலுவலகத்துக்கு அருகாமையில் சுமார் 120 பேர்ச் விஸ்தீரணம் கொண்ட காணியொன்று உள்ளது. அக் காணியில் முன்னர் டிப்போ காரியாலயம் இயங்கிப் பின்னர் கைவிடப்பட்டிருந்தது. பின் னர் சிலகாலம் இதனைப் படையினர் பயன்படுத்தினர்.

கடந்த புதன்கிழமை குறித்த காணிக்குள் அதிகளவான கட்டட நிர்மாணப் பொருள்கள் எடுத்து வரப்பட்டு நகர சபையின் அனுமதியின்றிச் சுற்று மதில் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து குறித்த சுற்றுமதில் நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு மன்னார் நகர சபை உத்தியோகத்தர்களுக்குத் தலைவர் பணித்தார். மன்னார் நகர சபை உத்தியோகத்தர்கள் குறித்த காணிக்குச் சென்று சுற்று மதில் நிர்மாண வேலைகளை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தனர்.



அவ்வேளை குறித்த காணி கைத்தொழில்வாணிப அமைச்சர் றிஸாத் பதியுதீனின் மன்னார் மாவட்ட அலுவலகம் அமைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அங்கு நின்றவர்கள் அது தொடர்பான ஆவணப் பிரதிகளையும் நகர சபை அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர். எனினும் மன்னார் நகர சபையின் முறையான அனுமதி பெறப்படாமையால் கட்டட நிர்மாணப் பணிகள் எதையும் செய்ய வேண்டாம் என நகரசபை உத்தியோகத்தர்கள் உத்தரவிட்டுச் சென்றனர்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மீள்பரிசீலனையில் அமைச்சரின் மாவட்ட காரியாலயத்துக்கு கடந்த 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான 40 பேர்ச் காணித் துண்டொன்று அப்போதைய மன்னார் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள விடயம் வெளிச்சத்துக்கு வந்தது. இந்தக் காணி கட்டடம் எதுவும் அமைக்கப்படாமல் சுற்று மதில் கட்டப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

இவ்வாறு முன்னரும் அமைச்சரின் மாவட்ட காரியாலயத்துக்கென பெறுமதியான காணித் துண்டொன்று பெறப்பட்டுச் சொற்ப காலப் பகுதிக்குள் அதே காரணத்துக்காக மேலும் ஒரு பெறுமதியான காணியை அபகரிக்க முயன்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபைத் தலைவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் கைத்தொழில் வர்த்தக வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த காணி கைத்தொழில் வர்த்தக வாணிப அமைச்சின் வடக்கு மாகாணத் தலைமைக் காரியாலயம் அமைப்பதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட அரச அதிபருக்குக் கடிதம் எழுதிப் பிரதேச செயலாளர் ஊடாகக் குறித்த காணி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எமது அமைச்சினூடாகக் குறித்த காணியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள மன்னார் நகர சபையிடம் அனுமதி கோரி கடிதம் அனுப்பப்படும். மன்னார் மூர் வீதியில் வாடகைக்கு சிலிட்டா என்னும் பெயரில் அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை, கம்பனி களைப் பதிவு செய்தல், சிலிட்டா போன்ற வேலைத்திட்டங்களை ஒரே அலுவலகத்தின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் தற்போது குறித்த காணி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது- என்றார். (த-56)

# 13ஆயிரத்து 500 ரூபா தண்டம்

கிளிநொச்சி, ஒக். 30
மது போதையில் வாகனம் செலுத்தியமை சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்காமை போன்ற குற்றங்களுக்காக வாகனச் சாரதி ஒருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் 13ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்துள்ளது. ஏ-9 சாலையில் பொலிஸாரால் கடந்த 24 ஆம் திகதி கைது செய்யப்பட்ட குறித்த வாகன சாரதி நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மேற்படி தண்டத்தை நீதிவான் ஐ.வகாப் தீன் விதித்தார். இதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய மற்றுமொரு வாகனத்தின் சாரதிக்கு 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்ததுடன் 6 மாத காலத்துக்கு சாரதி அனுமதிப்பத்திரமும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி தருமபுரத்தில் 1 1/4 போத்தல் கசிப்பு வைத்திருந்த பெண் ஒருவருக்கு 20ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாரதிபுரத்தில் 7 போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்ட மற்றுமொரு நபருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித் துள்ளது. (த-18)

# கட்டட நிர்மாணத்துக்கு பயன்படுத்தும் இயந்திரங்களைத் திருடியவர் கைது

வவுனியா, பட்டானிச்சூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கட்டட நிர்மாணத்துடன் தொடர்புடைய இயந்திரங்களைத் திருடிய ஒருவரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.டீ.பி.ஜெயதிலக தெரிவித்துள்ளார்.



கடந்த வாரம் பட்டானிச்சூர் பகுதியில் திருத்த வேலை இடம்பெற்ற வீடு ஒன்றில் இருந்து கட்டட நிர்மாண நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான இயந்திர சாதனங்கள் திருட்டு போயுள்ளதாக வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து திருட்டு போன இயந்திர சாதனங்கள் மீட்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (த-402)

# புனரமைக்கப்படாத குளங்களால் விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு

வவுனியா, ஒக். 30
வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குளங்கள் புனரமைக்கப்படாமையால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா கமநலசேவைகள் திணைக்களத்துக்குட்பட்ட ஆற்றுப்புலம் அணைக்கட்டு மற்றும் இளமருதங்குளம் ஆகியவை கடந்த 2010 ஆம் ஆண்டு உடைப்பெடுத்தன.

எனினும் இதுவரை அவை புனரமைக்கப்படாமையால் அவற்றை நம்பி விவசாயம் செய்து வந்த விவசாயிகள் சுமார் 115 ஏக்கர் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர். தனி மனித முயற்சியால் அணைக்கட்டு உருவாக்கப்பட்டு அப்பகுதி விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சப் பட்டு வந்த நிலையில், அணைக்கட்டு வாய்க்கால் அரசினால் உள் வாங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஆற்றுப்புலம் அணைக்கட்டு பல தடவைகள் உடைப்பெடுத்து விவசாயம் செய்ய முடியாத நிலைமையை ஏற்படுத்தியது.

இந்தச் சந்தர்ப்பங்களில் அப்பகுதி விவசாயிகள் தமது முயற்சியினால் சில திருத்தங்களை மேற்கொண்டு அணையைப் புனரமைத்து விவசாயத்தை மேற்கொண்டு வந்தனர்.

எனினும் தொடர்ச்சியாக அந்த அணையைப் புனரமைக்க முடியாமையால் தற்போது விசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். (த-402)

# முருங்கன் பஸ் நிலையத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

மன்னார், ஒக். 30
முருங்கன் பொதுச் சந்தைக்கு முன்புறம் அமைந்துள்ள பஸ் நிலையம் பிரயாணிகள், தங்குமிடம் என்பவற்றைப் புனரமைத்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முருங்கன் பொது சந்தைக்கு முன்புறம் அமைந்துள்ள பஸ் நிலையம், பிரயாணிகள் தங்குமிடம் என்பன நானாட்டான் பிரதேச சபையினால் 20 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இரண்டரை வருடம் கூட ஆகவில்லை. மழை பெய்தவுடன் இந்தப் பகுதி சிறிய குளம் போல் காட்சியளிக்கின்றது. இங்கு வாகனங்களை நிறுத்த முடியாமல் பயணிகள் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

இது தொடர்பாக வர்த்தகர் சங்க உறுப்பினர்கள் வட மாகாண போக்குவரத்து, கடற்றொழில் வாணிபதுறை அமைச்சர் ப.டெனிஸ்வரனுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். அத்துடன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபையினர் ஆகியோரின் கவனத்துக்கும் இந்த விடயம் கொண்டுவரப்படவுள்ளது.

விரைவில் பஸ் நிலையத்தையும் பிரயாணிகள் தங்குமிடத்தையும் புனரமைக்குமாறு அந்தப் பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். இதன் மூலம் தாம் பெரிதும் நன்மை அடைவார்கள் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (த-402)

# நிரந்தர வீடுகள் இல்லாதோர் கொட்டும் மழையால் அவலம்



கிளிநொச்சி, ஒக். 30
கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர வீடுகள் கிடைக்காத மக்கள் தற்போது பெய்து வரும் மழையினால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுவருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேற்றம் நடைபெற்று 5 ஆண்டுகள் கடந்த நிலையிலும் மீள் குடியேற்றம் நடைபெற்ற ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் கிடைக்காத நிலைமை காணப்படுகின்றது.

நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுவரும் நிலையிலும் புள்ளி அடிப்படை, காணிப் பிணக்கு போன்ற பல்வேறு காரணங்களினால் நிரந்தர வீடுகள் கிடைக்காத குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மீள்குடியேற்றத்தின்போது அமைக்கப்பட்ட தற்காலிக வீடுகள் 6 மாதங்களுக்கே தாக்குப் பிடிக்கும் நிலையில் அமைக்கப்பட்டன. ஆனால் 5 ஆண்டுகள் கடந்தும் தற்காலிக வீடுகளில் வாழ்கின்ற நிலையில் மீள்குடியமர்ந்த மக்கள் உள்ளனர்.

தற்போது பெய்துவரும் மழை தற்காலிக வீடுகளில் வாழ்கின்ற மக்களை குறிப்பாகச் சிறுவர்களைப் பாதித்துள்ள நிலை காணப்படுகின்றது. தற்காலிக வீடுகளைச் சூழ கிளிநொச்சி மாவட்டத்தின் பல இடங்களிலும் வெள்ளம் தேங்கிநிற்கின்றது.

இதன் காரணமாக தொற்று நோய்கள் மற்றும் போக்குவரத்து நெருக்கடிகளை மீள்க்குடியமர்ந்துள்ள மக்கள் எதிர்கொண்டுள்ளதால் விரைவாக நிரந்தர வீடுகளை அமைத்துத் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-18)

# இரணை மடு வான் பாயும் பகுதியில் பாலம் வேண்டும்

பரந்தன் முதலாம் ஒழுங்கை மக்கள் கோரிக்கை



பரந்தன் பகுதியில் இரணைமடுக் குள வான் வெள்ளம் பாய்கின்ற பகுதியில் பாலம் அமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பரந்தன் நகரத்தில் முதலாம் ஒழுங்கைப் பகுதியில் மக்கள் செறிவாகப் போக்குவரத்தில் ஈடுபடும் இப் பாதையில் நீண்டகாலமாகப் பாலம் அமைக்காமையால் பரந்தன் நகரத் துக்குச் செல்வதில் மக்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

இரணைமடு வான்வெள்ளம் பாய்கின்ற காலத்திலும், மழை காலங்களிலும் இந்தப் பகுதியைக் கடந்து ஏ-9 சாலைக் குப் பயணிக்கவேண்டியநிலை உள்ளதால் அதிகாரிகள் குறித்த பகுதியில் பாலமொன்றை அமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-18)

## ரணிலின் வெற்றிக்கு கைகொடுக்கும் சஜித்



கொழும்பு, ஒக்.30
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்றும் - கட்சியின் தலைவரான அவரை ஜனாதிபதி பதவியில் அமர்த்த எந்த அர்ப்பணிப்புக்களையும்மேற்கொள்ள தயார்எனவும்அந்தக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹைட்பார்க்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை ஏற்படுத்த அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கைதெரிவித்துள்ளார்.(ற)

# இனப் பிரச்சினை உண்டென்பதை ஏற்க வேண்டும் பொது வேட்பாளர்

## ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.30
"ஆளுகின்ற அரசு கூட்டணியின் பொது வேட்பாளர் தானே என ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார். அதுபோன்று எதிரணியின் பொது வேட்பாளர் ஒருவரும் உருவாகி வருகிறார். இந்த இரண்டு வேட்பாளர்களை முன்னிறுத்தும் இரண்டு பிரதான கட்சிகளும், இந்த நாட்டில் நிலவும் விலைவாசி, சம்பள உயர்வு, ஊழல், மாணவர் பிரச்சினை, மீனவர் பிரச்சினை, ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற தீர்ப்பு என்ற அனைத்து பிரச்சினைகளையும் பற்றியும் பேசுகின்றன.

இந்த பிரச்சினைகளுடன் இந்த நாட்டில் தீர்க்கப்படாத இனப்பிரச்சினை ஒன்றுள்ளது எனபதையும் இவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இனப்பிரச்சினை தீர்வுக்கான முழுமையான திட்டத்தையும், உடன்படிக்கையும் தம் தேர்தல் அறிக்கைகளில் முன்வையுங்கள் என நான் இவர்களிடம் கோரவில்லை. இப்படி கோரி, இங்குள்ள இனவாதிகளுக்கு சிங்கள மக்கள் மத்தியில் பொய்ப் பரப்புரை செய்ய இடமளிக்கபோவதில்ல. ஆனால், அதற்காக இனப்பிரச்சினையே இல்லை என்பது போல் நாடகமாடுவதை அனுமதிக்க முடியாது"- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் - இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இந்த நாட்டில் தேசிய இனப் பிரச்சினை இருக்கின்றது. இந்த நாட்டின் சிங்கள தலைவர்கள், தமிழ் தலைவர்களுடன் தொடர்ச்சியாக பேச்சு நடத்தினார்கள். அவற்றின் மூலம் பல ஆவணங்கள் உருவாக்கபட்டுள்ளன. இன்றைய ஜனாதிபதி மஹிந்த கூட இப்படியான சர்வ கட்சி மாநாடு நடத்தினார். அதன்மூலம் ஒரு ஆவணம் உருவாக்கப்பட்டது. ஆகவே இல்லாத பிரச்சினை பற்றி பேச இவர்கள் முட்டாள்கள் அல்ல. இவர்களுடன் பேசிய தமிழ் தலைவர்களும் முட்டாள்கள் அல்ல.

இந்த நாட்டில் தீர்க்கப்படாத இனப்பிரச்சினை ஒன்று இருப்பதை மறந்து விட்ட நிலையிலேயே இன்று ஜனாதிபதி தேர்தல் களம் உருவாகி வருகிறதா என்ற சந்தேகம் எழுகிறது. ஆட்சியில் உள்ள அரசு நடைமுறையில் உள்ளமாகாண சபைகளுக்கு உயிரூட்டுவதை தவிர்த்து அவற்றின் அதிகாரங்களை வெட்டிகுறைப்பதில் கவனம் செலுத்துகிறது. இந்த நேரத்தில் எதிரணியில் இனப் பிரச்சினையைப் பற்றி அறவே பேசாமல் இருந்து விட வேண்டும் என்ற மாதிரியான சிந்தனை நிலவுகிறது.

கடந்த சில வாரங்களாக பல கலந்துரையாடல்களில் கலந்து கொண்டுள்ள என்னால் அவதானிக்க முடிகிறது. இனப் பிரச்சினை தீர்வு பற்றி பேசினால் அரசு தரப்பு அதை பயன்படுத்தி சிங்கள மக்களை தூண்டி விட்டு விடும் என்று எச்சரிக்கை விடப்படுகிறது. இதை தமிழ்க் கட்சிகள் உணராமல் இல்லை. பொது எதிரணி வேட்பாளரின் தேர்தல் அறிக்கையில் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பான ஒட்டுமொத்த திட்டமும் வெளிபடுத்தப்பட வேண்டும் என நாம் எதிர்பார்க்கவில்லை. அதை நிறைவேற்று அதிகாரமுறைமையை ஒழித்துவிட்டுவரும்புதியநாடாளுமன்ற அரசு பொறுப்பேற்க வேண்டும்.

ஆனால், அதற்காக் தேசிய இனப் பிரச்சினை என்ற ஒன்று இந்நாட்டில் இன்றளவும் தீர்க்கப்படாமல் இருக்கின்றது என்ற உண்மையைக் கூட ஏற்றுக்கொள்ளாமலும், கணக்கில் எடுக்காமலும், எந்தவொரு பொது வேட்பாளரும் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை எப்படி எதிர்பார்க்க முடியும்?"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## புலிப் பீதியைக் காண்பித்து வெற்றியை பறிக்க முயற்சி

### குற்றஞ்சாட்டுகின்றார் அநுரகுமார



கொழும்பு, ஒக்.30
"அரசு தொடர்ந்தும் புலிப் பீதியை காண்பித்து தேர்தலில் வெற்றியீட்ட முயற்சிக்கின்றது" என்று தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க.

"புலம்பெயர் சமூகத்துடன் அரசு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள பாகிஸ்தானின் முன்னாள் நிதி அமைச்சர் ஒருவருடன் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றது. புலம்பெயர் சமூகத்துக்கு என்ன விலை கொடுத்தும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க முடியுமா என்று பார்க்கவே அரசு முயற்சிக்கின்றது."- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தங்களது தேவைக்காக எவருடனும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளக் கூடியவர்களே இந்த ராஜபக்ஷாக்கள். நாடு முழுவதிலும் பல்வேறு வழிகளில் பரப்புரை நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது. பதாகைகள், சுவரொட்டிகள், காரியாலய அங்குரார்ப்பணம் எனப் பல்வேறு வழிகளில்பரப்புரை செய்யப்படுகின்றது. அரசு நிறுவனங்களின் செலவில் இந்தப் பரப்புரை மேற்கொள்ளப்படுகின்றது.

தற்போதைய ஜனாதிபதிக்கு தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுக்க எந்த வகையிலும் முடியாது. மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவும் ஜனாதிபதிக்கு முடியாது. ஈழக் கோரிக்கையை கைவிட்டால் நிறைவேற்று அதிகாரத்தை செய்வேன் என்ற ஜனாதிபதியின் தர்க்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். பிரபாகரன் கொல்லப்பட்டுள்ளார். இவ்வாறான நிலைமையில் ஈழக் கோரிக்கை தொடர்பான வாதம் அர்த்தமற்றது.

புலிகளிடமிருந்து நாட்டை பாதுகாக்க எனக்கு சந்தர்ப்பம் அளிக்குமாறு ஜனாதிபதி மீளவும் கோர ஆரம்பித்துள்ளார். இவ்வாறான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது"- என்று தெரிவித்துள்ளார்.(ற)



இலங்கையின் துருக்கிக்கான தூதுவர் பாரதி விஜேயரட்ண புதிதாக நியமனம் செய்யப்பட்ட துருக்கி உள்துறை அமைச்சின் துணைச்செயலாளர் செபஹற்றின் ஒஸ்ரேர்க்கினை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தக் கலந்துரையாடலானது துருக்கியின் சட்டமும் - ஒழுங்கும் அமைச்சுக்கும் உள்துறை அமைச்சுக்கும் இடையிலான தொடர்புகள் விதிகள் பற்றி அமைந்திருந்தது. பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் பிரிகேடியர் எஸ்.ஏ.டி.ஏ.டி. குணவர்த்தனவும் தூதுவருடன் இந்தக் கலந்துரையாடலின் போது கலந்து கொண்டார். செபஹற்றின் ஒஸ்ரேர்க் மிகவிரைவில் இலங்கைப் பயணத்துக்கான அழைப்பையும் ஏற்றுக் கொண்டார். (ற)

## ரூ.200 கோடியை ஏப்பமிட தபால் திணைக்களம் தயார்

இலங்கைத் தபால் திணைக்களம் இந்த ஆண்டில் சுமார் 200 கோடி ரூபா அளவில் நட்டத்தை எதிர்கொள்ளும் என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போது அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டில் தபால் திணைக்களம் 330 கோடி ரூபா நட்டமடைந்திருந்தது. கடந்த ஆண்டில் அது 285 கோடி ரூபாவாக குறைந்திருந்தது. எதிர்வரும் ஆண்டில் தபால் திணைக்களம் உத்தேச மதிப்பில் 175 கோடி ரூபாவும், அதற்கடுத்த வருடத்தில் 150 கோடி ரூபா அளவில் நட்டத்தை எதிர்கொள்ளும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தினேஷ் தெரிவித்துள்ளார். (ற)

## ஹெல உறுமய ஸ்ரீ.சு.க. பேச்சு தொடர்கின்றதாம்

ஜாதிக ஹெல உறுமயவுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சு எதிர்வரும் திங்கட் கிழமை வரையில் நடைபெறும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. அதேவேளை, ஜாதிக ஹெல உறுமய முன்வைத்து அரசியல் அமைப்பு யோசனைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு அரசு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் குழுவொன்றை அமைத்துள்ளது. (ற)

# தேர்தல் குண்டே மஹிந்த 'பட்ஜெட்'

## கபீர் ஹாசிம் எம்.பி. கூறுகின்றார்



எதிர்காலத்தைக் கருத்தில் கொள்ளாது தேர்தலை மாத்திரம் குறிவைத்து ஒரு தேர்தல் குண்டாகவே 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதை நம்பி ஏமாறுவதற்கு எமது நாட்டு மக்கள் கொண்டை கட்டியவர்கள் அல்லர். எனவே, அடுத்து நடைபெறவுள்ள தேர்தலில் இந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு உரிய பதிலை வழங்குவார்கள் மக்கள்.


- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றும்போது:

"நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்தை நாட்டு மக்கள் நம்புகிறார்களா? கடந்த காலங்களில் பாடிய பழைய பல்லவியையே இந்த வரவு-செலவுத் திட்டத்திலும் அவர் பாடியுள்ளார். சற்றுவேகமாகப் பல்லவியைப் பாடி சிறியதொரு மாற்றத்தைக் காண்பித்துள்ளார் ஜனாதிபதி. சுருக்கமாகச்சொல்லப்போனால், இந்த வரவு-செலவுத் திட்டம் ஒரு கண்கட்டி வித்தையாகும்.

வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும்போது கிராம மட்டத்தில் பட்டாசுகளைக் கொளுத்துமாறு சிலருக்கு அரசு பட்டாசு வாங்கிக் கொடுத்துள்ளது. ஆனால், மக்கள் அவ்வாறு செய்யவில்லை. நாளடைவில் இந்த வரவு-செலவுத் திட்டம் ஒரு புஸ்வாணம் என்பது அவர்களுக்குத் தெரியும். அத்துடன், ஒருசில தரப்பினரைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே இதில் முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன. செல்வந்தர்களை மேலும் செல்வந்தர்களாக்குவதும், ஏழைகளின் வயிற்றில் அடிப்பதுமே இதன் நோக்கமாகும். தேர்தலுக்காக இது ஒரு பெரிய வரவு-செலவுத் திட்டம் எனக் காண்பிக்கப்பட்டாலும், ஆராய்ந்து பார்த்தால் உள்ளே ஒன்றும் இல்லை"- என்று தெரிவித்தார். (ற)

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!

நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- ☐ பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- ☐ நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- ☐ திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- ☐ பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- ☐ திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- ☐ பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- ☐ பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- ☐ பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- ☐ மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- ☐ திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- ☐ பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- ☐ திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk

C/17187

# மீனவர்கள் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு

## நம்பிக்கை வெளியிடுகிறார் பொன்.ராதாகிருஷ்ணன்



மீனவர்கள் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு ஏற்படும் என்று தான் நம்புவதாக இந்தியமத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச்செல்லும்போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கையில் சிறை வைக்கப்பட்டு வருவது குறித்தும், அவர்களது படகுகள் நீண்ட காலமாக விடுவிக்கப்படாமல் இருப்பது குறித்தும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜைச் சந்தித்துப் பேசினேன். சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரினேன்.

ஏற்கனவே தான் இது குறித்து எடுத்துவரும் நடவடிக்கைகளை அவர் விளக்கினார். உடனடியாக மீனவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையை வெளிவிவகார அமைச்சர் என்னிடம் தெரிவித்தார்.

மேலும், படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். பிரதமர் நரேந்திர மோடியின் முயற்சியாலும், வெளிவிவகார அமைச்சரின் முயற்சியாலும் உடனடியாக இது நடக்கும் என்று நம்புகிறேன்.

தமிழக மீனவர்கள் குறிப்பாக, இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் நீண்ட காலத்தீர்வுத்திட்டத்தை வகுத்து வருவதாக தெரிவித்தார்.

ஆழ் கடலில் மீன்பிடித்தல் மற்றும் மீன் உற்பத்தியைப் பெருக்கவும், மின் பிடிப்புக்குரிய புதிய தேவைகளை உணர்ந்து பல கோணங்களில் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நிரந்தரத் தீர்வு ஏற்படும் வரை இடைக்காலத் தீர்வுக்கு எமது அரசு முயல வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைத்தபோது, அது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறினார். எனவே மிக விரைவில் மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும் என்று நம்புகிறேன்"- என்றுள்ளது. (வ)



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயணம் மேற்கொண்டார். இதன்போது, கந்தளாய் அல்தாரிக் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

## இந்தியாவிலுள்ள அகதிகளில் 67 வீதமானோர் நாடு திரும்ப விரும்பவில்லை



டில்லி, ஒக்.30

இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளில் மூன்றில் இரண்டுபங்கினர் தொடர்ந்தும் அங்கேயே தங்கிவாழ விரும்புவதாக ஆய்வு ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

மும்பாயில் உள்ள டி.ஐ.எஸ்.எஸ். என்ற சமூக தரவுகள் அமைப்பு இந்த ஆய்வை மேற்கொண்டது. இதன்படி இந்தியாவில் தங்கியிருக்கும் சுமார் ஒரு லட்சம் இலங்கை அகதிகளில் 67 சதவீத மானோர் இந்தியாவில் தொடர்ந்தும் இருப்பதையே விரும்புகின்றனர்.

ஆய்வு செய்யப்பட்ட சுமார் 520 குடும்பங்களில் 23 சதவீதமான குடும்பங்களே இலங்கைக்குத் திரும்ப விருப்பம் வெளியிட்டுள்ளன.

மன்னார் மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களே மீண்டும் திரும்பும் விருப்பத்தை வெளியிட்டுள்ளனர். அதிலும் 42 வீதமானோர் ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தின் அனுசரணையுடன் நாடு திரும்பவே விரும்புகின்றனர். 4 சதவீதத்தினர் மூன்றாம் நாடு ஒன்றுக்குச் செல்ல விரும்புகின்றனர்.

இந்தியாவில் 111 முகாம்களில் 67ஆயிரம் இலங்கை அகதிகள் தங்கியுள்ளனர். ஏனையவர்கள் முகாம்களுக்கு வெளியில் தங்கியுள்ளனர். (வ)

## ஆசிரியரை தெளிவுபடுத்த புதிய திட்டம் முன்னெடுப்பு

### புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில்

கொழும்பு, ஒக்.30

புதிய முறைமையின் கீழ், அடுத்தாண்டு நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில் ஆசிரியர்களைத் தெளிவுபடுத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் புதிய திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் பரீட்சைத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாப்பத்திரம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே புஷ்பகுமார தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்குப் பரீட்சை தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுத்தாண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஒரு வினாப்பத்திரமே வழங்கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் மேலும் சுட்டிக் காட்டினார். (வ)

# புனித ஜோன் பொஸ்கோ மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.30

இந்த வருடம் நடைபெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திலிருந்து தோற்றிய 230 மாணவர்களும் 100 புள்ளிகளுக்குமேல் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அவர்களுள் 140 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்குமேல் பெற்றதன் மூலம் இந்தப் பாடசாலை அகில இலங்கையில் 2 ஆம் இடத்தையும், தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் முதலிடத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.



இவ்வாறு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் அரச சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலையின் திறந்த வெளியரங்கில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தைச் சேர்ந்த யாழ். மறைமாவட்ட நிதியியலாளர் அருட்தந்தை ஜே.பி.அன்ரனிதாஸ், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தனர்.

சாதனை அதிபர் அருட் சகோதரி எம்.ஜீவந்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சித்திபெற்ற மாணவர்களும், அதற்காக உழைத்த ஆசிரியர்களும் பாராட்டப்பட்டனர். (வ)

## வறிய பல்கலை மாணவருக்கு புலம் பெயர் வாழ் உறவு உதவி



வவுனியா, ஒக்.30

வறிய நிலையிலும், தந்தையையும் இழந்தும் பட்டப் படிப்பை மிகக் கஷ்ட நிலையில் கற்று வரும் 4 பல்கலைக்கழக மாணவர்களுக்கு லண்டன் வாழ் சண்முகரத்தினம் நிசாந்தன் மூலம் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் ஊடாக வவுனியா பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலாளர் கா.உதயராசா மூலம் நிதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா மகாரம்பைக் குளத்தைச் சேர்ந்த காமாட்சி சுந்தரம் எஞ்சலின், வவுனியா பாரதிபுரத்தைச் சேர்ந்த கணபதி காந்தரூபன், சேமமடுவைச் சேர்ந்த அயந்தன், அதே குடும்பத்தைச் சேர்ந்த மேனகா ஆகியோருக்கே இந்த உதவித் தொகைகள் வழங்கி வைக்கப்பட்டன. (வ-421)

## செல்பி படங்கள் எடுப்பதால் பேன் தொற்றும் அபாயம்

### எச்சரிக்கிறது ரஷ்யா

செல்பி படங்கள் எடுப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு தனது நாட்டுப் பிரஜைகளுக்கு ரஷ்யா அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

பலர் ஒன்றாக இணைந்து செல்பி எடுத்துக்கொள்கையில், அவர்களுடைய முகங்களை நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும், அந்தச் சந்தர்ப்பத்தில் யாருடைய தலையிலாவது பேன் இருக்கும் பட்சத்தில் அது மற்றவர்களுடைய தலைக்கும் பரவுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ரஷ்யா சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் தலையில் பேனிருக்கும் மாணவர்களை பாடசாலைக்கு செல்ல வேண்டாம் என்று ரஷ்ய சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## குற்றங்களும் கைதுகளும்

கொழும்பு

### சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலில் மேலும் இருவர் கைது

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் 2 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கல் செய்திருந்த முறைப்பாட்டையடுத்து சமனலவெவ பொலிஸார் அவர்களைக் கைது செய்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவிக்கின்றது. கைது செய்யப்பட்டவர்கள் பல்கலைக்கழக ஊழியர்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 5 சந்தேகநபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

### சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இந்தியர் தடுத்துவைப்பு

நுழைவு அனுமதி இன்றி கடந்த 19 வருடங்களாக இலங்கையில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இந்தியப் பிரஜை ஒருவரை இந்த மாதம் 31ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அநுராதபுரம் பிரதான நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. கேரளாவைச் சேர்ந்த அவர் 1995ஆம் ஆண்டு இலங்கை வந்து அநுராதபுரம் பரசன்கஸ் வெளி பிரதேசத்தில் தங்கியிருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டார் என்பதுகுறிப்பிடத்தக்கது.

கித்துல்கல

### ரூ.5,000 போலி தாளுடன் பெண் கைது



ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாளுடன் கித்துல்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கினிகத்ஹேன தெளிகம பிரதேசத்தில் பெண் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பிபிலிஓய பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய குறித்த பெண், பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக கடை உரிமையாளரிடம் 5 ஆயிரம் ரூபா நாணயத்தாளைக் கொடுத்துள்ளார்.குறித்த தாள் போலியானது என்று அடையாளம் கண்ட கடையின் உரிமையாளர், பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து, அந்தப்பெண்ணை சந்தேகத்தின்பேரில் கைது செய்ததாக கித்துல்கல பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள பெண்ணை செவ்வாய்க்கிழமை ருவான்வெல்ல நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர். (வ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும்

கொழும்பு அரசு வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்றும் வடக்கு மாகாண சபை வலியுறுத்தி வருகின்றது. 2015ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த நிதி நிலை அறிக்கையில்கூட போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை என்று குற்றஞ்சாட்டுகின்றனர்.

30 வருடங்களாக நடந்த போரால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதி வடக்கு என்ற ரீதியிலேயே இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. ஏற்கனவே இயல்பு நிலையில் இருக்கும் பகுதிகளுக்கு நிகராக, பாதிக்கப்பட்ட பகுதியையும் தரம் உயர்த்துவதற்கு அதிக உதவிகளும் சிறப்புக் கவனமும் தேவை என்பது நிதர்சனமானது. போர் முடிந்ததற்குப் பின்னர் அத்தகைய கரிசனை எதனையும் கொழும்பு அரசு கொண்டிருக்கவில்லை என்பது வெள்ளிடைமலை. மாற்றாந்தாய் மனப்பான்மையிலேயே அது வடக்கு மக்களுடன் நடந்துகொள்கிறது.

இது ஏற்புடையது அல்ல. வடக்கு மாகாணசபையும், வடக்கிலிருந்து மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவானவர்களும் இதனடிப்படையிலேயே கொழும்பு அரசு மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்; உலக நாடுகளிடம் இது குறித்து முறையிடுகின்றனர்.

கொழும்பு உட்பட இலங்கையின் பல பகுதிகள் போரால் பாதிக்கப்பட்டன. ஆனாலும் வடக்கிலுள்ள மாவட்டங்கள்தான் மிக மோசமான பாதிப்புகளை, உயிரிழப்புக்களை, சொத்தழிவுகளை எதிர்கொண்டன. எனவே அதன் மீதான கரிசனை அதிகம் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதும் நியாயமானதே!

அதேசமயத்தில், அதே அளவுகோல் வடக்கின் உள்ளேயும் பொருந்தும். வடக்குக்கு என்று ஓர் அரசு வந்ததன் பின்னர் வடபகுதிக்குள்ளேயே போரால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகள் மீது சிறப்புக் கவனமும் கரிசனையும் செலுத்தப்படவேண்டியது அவசியம். வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களும் போரால் பாதிக்கப்பட்டவைதான் என்றபோதுதிலும், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் மிக மோசமான பாதிப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்தன என்பதும் மறுப்புகளுக்கு அப்பாற்பட்டவை. எனவே அவற்றின் மீது சிறப்புக் கவனம் அவசியமானது.

இந்த விடயத்தில் எங்கோ ஏதோ குறைகள் ஏற்பட்டு விட்டதாகத் தோன்றுகின்றது. மோசமாகப் பாதிக்கப்பட்ட தங்கள் மீது போதிய கரிசனை காட்டப்படவில்லை என்ற ஆதங்கத்தை அந்த மாவட்டங்களின் மாகாண பிரதிநிதிகள் வடக்கு மாகாண சபையின் அமர்விலே எழுப்பியிருக்கிறார்கள். அவர்களின் ஆதங்கங்களின் பின்னால் உள்ள நியாயங்கள் கூர்ந்து கவனிக்கப்பட்டு, நிலைமைகள் சரி செய்யப்படவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின் குரலுக்கு உடனடியாகச் செவிசாய்த்து தீர்வைப் பெற்றுக் கொடுப்பது வடக்கு அரசு என்ற முறையில் சபையின் கடமையும்கூட. அதிலிருந்து தவறக்கூடாது. அதை வடக்கு முதலமைச்சரும் அமைச்சர்களும் செய்வார்கள் என்று நிச்சயம் நம்பலாம். மாவட்டங்கள் இடையே பேதங்கள் பார்க்கும் நோக்கம் முதலமைச்சருக்கு இருந்திருந்தால், அமைச்சுப் பங்கீட்டின்போதும், பதவிப் பிரிப்பின் போதும் மாவட்டங்களுக்கான ஒதுக்கீடு குறித்து அவர் அக்கறை எடுத்திருக்கத் தேவையில்லை. எனவே அத் தகைய வீண் சந்தேகங்களை, குற்றச்சாட்டுக்களை மாகாண சபை உறுப்பினர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன் தமது ஜனநாயக உரிமையை அனுபவிப்பதற்குத் தமக்குள்ள வரையறைகளையும் நாகரிகத்தையும் கூட வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பேணுவது அவசியம். உணர்ச்சிக் கூச்சல்களும், எழுந்தமானமான குற்றச்சாட்டுக்களும் ஆக்கபூர்வமான பணிக்கு உதவப் போவதில்லை. தமது மக்களின் குறைகளை உரிய முறையில் சபையில் முன்வைத்து நாகரிகமாக விவாதித்து அவற்றுக்கான தீர்வைப் பெறும் முறைமையை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். வடக்கு மாகாண சபை புதிதாக உருவானது என்றாலும், பல விடயங்களில் அது மிகச் சிறப்பான முன்னுதாரணங்களை உருவாக்க வேண்டிய பெரும் பொறுப்பையும் கொண்டிருக்கிறது. அதனைச் சாதிப்பதற்கு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பது மிகமிக அவசியம். தமிழ் மக்கள் சபையின் ஒவ்வொரு நுண் அசைவுகளையும் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள் என்பதை உணர்ந்து சிறந்த நாகரிக முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டும்.

# கட்சியின் பிரதிநிதிகளை ராஜபக்ஷ அவமதித்தாரா?

## பெரும் கடுப்பில் ஹெல உறுமய

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

கடந்த வாரம் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித் தலைவர்கள் கூட்டத்தில், ஜாதிக ஹெல உறுமய கட்சி தனது 11 ஆவது வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள் அடங்கிய 3பக்க ஆவணத்தை முதலில் மேல் எழுந்தவாரியாக நோட்டமிட்டார். ஜனாதிபதி அந்த ஆவணத்தைப் பெரும்பாலும் படித்து முடித்த வேளையில் அந்தக் கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தமது கட்சியின் நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கத் தொடங்கினார். முதல் ஐந்து ஆண்டுக் காலத்தில், அரசின் செயற்பாடுகள் தொடர்பாக திருப்தி தெரிவித்த தேரர் 2010 இல் இருந்து 2014 வரையிலான முன்னணியின் செயற்பாடுகளில் தங்களுக்கு மனநிறைவு கிடையாது என்று அறிவித்தார். உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் மற்றும் பொருளாதார விடயங்களிலும் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கியிருப்பதாக அவர் தெரிவித்தார். அரசு பெரும் எடுப்பில் செலவுகளை செய்கிறது. ஆனால் மக்களுக்கு அதனால் பயன் கிடைப்பதாய் இல்லை. எமது கட்சி இது பற்றி பெருமளவில் பேசிவிட்டது. ஆனால் ஒன்றும் நடந்ததாக இல்லை என்றார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. ஊழல்களை ஒழிப்பதற்கான சுயாதீனமான ஒரு பொறிமுறை இல்லை. தேர்தல் ஆணையம் சுயாதீனமாக இயங்க வேண்டும். நீதித் துறையின் சுயாதீனத்தை உறுதி செய்ய செயற்பாடுகள் இருக்க வேண்டும். தகவல் அறியும் சட்டம் அமுலாகவேண்டும். கொழும்பில் பெருமளவில் போதைப்பொருள் பிடிபட்டபோது நாம் பலத்த கண்டனம் வெளியிட்டிருந்தோம். கசினோக்கள் ஆரம்பிக்கப்படவிருந்தபோதும் எதிர்ப்புத் தெரிவித்தோம். எமது குரலுக்கு செவிசாய்க்கப்படவில்லை. அதனால் தான் நாங்கள் சில சீர்திருத்தங்களை வலியுறுத்தி சில ஆலோசனைகள் அடங்கிய பொதியை முன்வைத்துள்ளோம் என்றார்.

ஏற்கனவே ஹெல உறுமயவின் வண ரத்ன தேரர் தங்களின் கோரிக்கைகளை ஏற்காவிட்டால் ஜனாதிபதித் தேர்தலின்போது ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்கு தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வார்கள் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ஜனாதிபதி விளக்கம் தருகையில், கால அவகாசம் போதாமல் இருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அரசமைப்பு திருத்தங்களை செய்வதற்கு கால அவகாசம் போதாது என்றார். மேலும் இதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சம்மதம் என்றால் அதனை பின்னரொரு சமயம் செய்யலாம் என்றார்.

ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் பிரகடனம் ஒன்றை ராஜபக்ஷ நவம்பர் 20ஆம் திகதி விடுப்பார் என்று அரச வட்டாரங்கள் கூறுகின்றன. டிசெம்பர் முதல் வாரத்தில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படக் கூடுமெனவும், ஜனவரியில் 7,8 அல்லது 9ஆகிய ஏதாவது ஒரு திகதியில் வாக்களிப்பு இடம்பெறலாம் என்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். இதில் ராஜபக்ஷவின் விருப்பத்துக்குரிய 8ஆம் திகதி பெரும்பாலும் வாக்களிப்பு இடம்பெறலாம் என்கிறார்கள் அவர்கள். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் அவரது பிறந்த நாளான நவம்பர் 17ஆம் திகதி நடைபெற்றது. அதேபோல் 2010ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இவைகளில் வரும் இரு இலக்கங்களையும் கூட்டினால் 8 எண் வருகின்றது. சோதிடர்களின் ஆலோசனைப்படி ஜனாதிபதியின் தேர்தல் காலம் ஜனவரி 23ஆம் திகதி வரை மிக அதிர்ஷ்டகரமாக இருக்கும் என்பதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

அன்றைய கூட்ட நிகழ்ச்சிகளின் போக்கு ராஜபக்ஷவுக்கு திருப்தியாக இருக்கவில்லை. அவருக்கு கோபம் ஏற்பட்டு விட்டது. கதிரையில் இருந்து எழுந்தார். மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறியவர், தமக்கு வேறு ஒரு பணி இருப்பதாகக்கூறி வெளியேறினார். கூட்டத்தை தொடர்ந்து நடத்தும்படி ஏனையவர்களிடம் கூறினார். கதிரையில் இருந்து நகரும் போது வண.ரத்ன தேரரைப் பார்த்து நீங்களும் நானும் ஒரே கிராமத்திலிருந்து வருபவர்கள் என்றார். ஜனாதிபதித் தேர்தலில் தம்மைத் தோற்கடிக்கப் போவதாகக் கூறப்பட்டதற்கு தனது மகிழ்ச்சியின்மையை வெளிப்படுத்தினார். மாத்தறை மாவட்டத்தில் கம்புறுப்பிட்டிய தேர்தல் தொகுதியிலுள்ள பலாத்துவ என்ற இடம்தான் ராஜபக்ஷவின் பிறந்த ஊர். அதுதான் அவரது தாயார் பலத்துவாவே தோன நந்தின சமரசிங்க திஸாநாயக்க அம்மையாரின் கிராமம். வண.ரத்ன தேரர் அதற்கு அடுத்துள்ள அதுருலிய கிராமத்தில் பிறந்தவர். ஜாதிக ஹெல உறுமய குழுவினர் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடனும் அவரது வேறு இரு சகாக்களுடனும் சிறிது நேரம் கலந்தாலோசனைகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஹெல உறுமய கட்சியினரின் ஆலோசனைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவிடம் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டதன் பின்னர் செயல்படுத்தப்படலாம் என்று அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பின்னர் தெரிவித்தார். ஹெல உறுமய குழுவினர் அங்கிருந்து வெளியேறியபோது மகிழ்ச்சியுடன் சென்றதாகத் தெரியவில்லை. அவர்களின் இறுதி எச்சரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாமல் போவது ஒருபுறமிருக்க, கூட்டத்திலிருந்து ஜனாதிபதி ராஜபக்ஷ எழுந்து சென்ற முறையானது பெரிதும் மனத்தாக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியிருந்தது. மிகவும் மோசமான அவமதிப்பு என்று அந்தக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் கூறினார். அடுத்த நாள் புதன்கிழமை ராஜபக்ஷ வண.ஓமல்பே சோபித தேரரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாம் அன்று கூட்டத்தில் இருந்து வெளியேறியமை எந்த விதத்திலும் மறுதரப்பினரைப் புண்படுத்தியிருக்குமானால் அதற்காகக் கவலைப்படுவதாகத் தெரிவித்துள்ளார். வேண்டுமென்று அவ்வாறு செய்யப்படவில்லை. ஹெல உறுமய குழுவின் வண.தேரர்களை அவமதிக்கும் நோக்கமும் இருக்கவில்லையென்று அவர் தெரிவித்துள்ளார். இருந்தாலும் அந்தக் கட்சியினர் அதற்குப் பின்னர் கூடி சில நடவடிக்கைகள் பற்றி ஆலோசித்துள்ளனர். அநேகமாக இந்த வாரத்தில் அவர்கள் தங்களது நிலைப்பாடு குறித்து அறிக்கையொன்றை வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் மற்றுமொரு பங்காளியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்பது பற்றி இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை. இது பற்றி விரிவாக ஆராயப்படவிருப்பதாக அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியிருக்கிறார். அந்தக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் இந்த விடயம் பரவலாக எதிரொலிக்கும் என்று கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் கூட தேர்தல் தொடர்பாக ஆர்வம் கொண்டிருந்தாலும், அதனது உள் விவகாரங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதிலேயே கவனத்தை அதிகம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாஸாவுக்குமிடையில் அண்மையில் மீண்டும் ஒரு சந்திப்பு நடந்துள்ளது. பிரேமதாஸா தாம் முன் வைத்துள்ள கோரிக்கைகள் ஏற்கப்படவேண்டும் என்று வற்புறுத்துவதாகவும், அதற்கு ரணில் சம்மதிக்காமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த நிலைமையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு பிரிவினர் விடுத்துள்ள கோரிக்கையில், எதிர்க்கட்சிகள் அனைத்தையும், சிவில் சமூகங்களையும் ஒன்றிணைத்து சகலருக்கும் ஏற்ற பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்ய முயலும்படியும், அவர் வெற்றி பெறும் நிலையில் பிரதமர் பதவியை ஏற்றுப் பணியாற்ற தயாராகும்படியும் கேட்கப்பட்டுள்ளது. அந்த நிபந்தனையுடனேயே பொது வேட்பாளர் நியமனம் இடம்பெற வேண்டும் என்பது அவர்களின் நோக்கம். இந்த வித முயற்சியில் எக்சத் பிக்கு பெரமுன என்ற அமைப்பே தீவிரமாக செயற்படுகிறது.

இந்த அமைப்பானது உண்மையில் ஐ.தே.கவின் பௌத்த பிக்குகளின் பிரிவு என்று கருதப்படுகின்றது. எக்சத் பிக்கு பெரமுன புதன்கிழமை நீண்ட நேரம் கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளர் ஒரு வருக்கு இடம்கொடுத்து தேர்தலில் போட்டியிடாமல் இருக்குமாறு கேட்பது என்று முடிவு செய்தது. ரணிலை அதற்குச் சம்மதிக்க வைக்கச் சென்ற பிக்குகள் குழுவில் அமரபுர நிக்காயவைச் சேர்ந்த வண.கிராம்பே ஆனந்த தேரரும் இருந்தார். வண.ஆனந்த தேரர் ரணிலுடன் பேசும் போது தங்கள் குழு நாட்டைப் பற்றியே கவலை கொண்டிருக்கிறது என்றும், அந்தவகையில் நாட்டைக் காப்பாற்றுவது அவரது கடமையாகும் என்றும் சுட்டிக் காட்டினார். அவர் அதிக பங்களிப்பை வழங்க வேண்டும், குறைந்த பட்ச பொது திட்டம் ஒன்று தொடர்பாக சகல எதிர்க்கட்சி களோடும் அவர் பேசவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தன்னைத் தவிர வேறு ஒருவர் போட்டியிடுவதை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொள்வாரானால், வேறொரு பிரச்சினையை அவர் எதிர்கொள்ள நேரிடும். ஏனென்றால் கட்சியின் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதித் தேர்தலில் கட்சித் தலைவர் ரணில் போட்டியிடாது விட்டால் தாமே போட்டியிடுவார் என்று ஏற்கனவே அறிவித்திருப்பதாகும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள திகதிகளில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமானால் அநேகமாக அதற்கு இன்னமும் 10 வாரங்களே எஞ்சியிருக்கின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முழுவீச்சில் தேர்தல் பர்ப்புரையில் இறங்கியுள்ளது.

# சிறைத் தண்டனையில் வேறுபாடு தேவைதானா?

## குற்றவாளிகள் குற்றவாளிகள்தான்




ராஜராஜன்

குற்றம் புரிந்தவர்களைத் தண்டிக்கும் பொருட்டே சிறைத் தண்டனை வழங்கும் முறை ஏற்படுத்தப்பட்டது. தண்டனை பெற்றவர்கள் மீண்டும் குற்றங்களைப் புரியாத வகையில் சிறையில் அவர்கள் கடுமையாக நடத்தப்பட்டனர். இவர்களுக்குத் தரமான உணவுகள் வழங்கப்படுவதில்லை. சிறைக்குள்ளேயே கடுமையான வேலைகளைச் செய்வதற்கு இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். உறவினர்கள், நண்பர்களைச் சந்திப்பதற்கும், சுதந்திரமாக நடமாடுவதற்கும் தடைகள் விதிக்கப்பட்டன. மேலும் தமது அடிப்படை வசதிகளை நிறைவேற்றிக் கொள்வதிலும் சிறைக் கைதிகள் இடர்களை எதிர்கொண்டனர். வெளிச்சம் புகமுடியாத இருண்ட அறைகளில் அடைத்து வைக்கப்பட்டவர்களும் உண்டு. இதனால் சிறைவாசம் என்பது நரகத்தைவிடக் கொடுமையானதாகக் காணப்பட்டது.

மேலும் மோசமான குற்றவாளிகள் தொலை தூரத்தில் அமைந்துள்ள மனித சஞ்சாரமற்ற இடங்களில் சிறை வைக்கப்பட்டனர். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த குற்றவாளிகள் இவ்வாறுதான் அன்றைய கால கட்டத்தில் பழங்குடியின மக்களை மட்டுமே கொண்டிருந்த, இங்கிலாந்திலிருந்து வெகு தூரத்தில் அமைந்திருந்த ஆஸ்திரேலியாவில் சிறைவைக்கப்பட்டனர். பின்னாளில் இவர்களே ஆஸ்திரேலியர்களாக மாற்றம் பெற்றனர். அங்கு பூர்வீகமாக வாழ்ந்த பழங்குடியின மக்களின் நிம்மதியான வாழ்வு இவர்களாலேயே சிதைத்து அழிக்கப்பட்டது.

இதைப்போன்றுதான் இந்தியாவைச் சேர்ந்த குற்றவாளிகளில் ஒருசிலர் அந்தமான் தீவிலுள்ள சிறைகளில் அடைக்கப்பட்டனர். தற்போது அந்தமான் தீவு ஆளுநர் ஒருவரின் ஆட்சியின் கீழ் உள்ளது. அந்தத் தீவுக்கும் தாய் நிலப்புரப்புக்குமிடையே கடல் மற்றும் ஆகாயமார்க்கமான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அன்றைய காலகட்டத்தில் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்தவர்களை அவர்கள் சார்ந்த சமூகம் இலகுவில் ஏற்றுக் கொள்வதில்லை. சிலவேளைகளில் இத்தகையவர்களை அவர்களது குடும்பத்தினரே ஒதுக்கி வைப்பதும் உண்டு. அவர்களுக்குத் தொழில் வழங்குவதற்கும் எவரும் முன் வருவதில்லை. இதனால் முன்னாள் சிறைக் கைதிகளின் வாழ்க்கை சிறையிலிருந்து வெளிவந்த பின்னரும் நரகமாகத்தான் விளங்கியது.

ஆனால் காலமாற்றம் எல்லாத்துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது போன்று, சிறைக் கைதிகள் விடயத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. என்னதான் பெரிய குற்றங்களைப் புரிந்தாலும், குற்றம் புரிந்தவர்களின் அந்தஸ்துக்கு ஏற்ற வகையில் சிறையில் வசதிகளை ஏற்படுத்துவதும் வெளியே இருக்கும் அவர்களது ஆதரவாளர்கள் அவர்களைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடுவதும் வழக்கமான நிகழ்வுகளாகிவிட்டன. இதற்கு ஓர் உதாரணமாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயலலிதாவின் சிறை வாழ்க்கையைக் குறிப்பிட முடியும். வருமானத்துக்கு மேலாகச் சொத்துக் குவித்ததாக அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகளின் முடிவில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபா தண்டமும் அவருக்கு விதிக்கப்பட்டது. இதனால் ஜெயலலிதா தமது முதலமைச்சர் பதவியை இழந்ததுடன், சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் துறக்க நேரிட்டது. மேலும் அவர் 10ஆண்டுகள் காலத்துக்கு எந்த வகையான தேர்தலிலும் போட்டியிட முடியாதவாறு தடையும் விதிக்கப்பட்டது. இதனால் ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலமே சூனியமாகியது. பெங்களூரிலுள்ள சிறையொன்றில் அவர் அடைக்கப்பட்டார். ஆனால் அங்கு அவர் ஒரு சிறைக் கைதிபோன்று நடத்தப்படவில்லை. குளிர்சாதன வசதி உட்பட அவருக்குத் தேவையான அனைத்து வசதிகளும் அங்கு வழங்கப்பட்டதாகவும், வெளியிலிருந்து உணவு தருவிக்கப்பட்டு அதனை அவர் உண்டதாகவும் செய்திகள் தெரிவித்தன. மேலும் வழக்கமாகக் கைதிகள் அணியும் ஆடை கூட அவருக்கு வழங்கப்படவில்லை. சிறையில் இருந்தவாறு அவர் பத்திரிகைகளைப் படித்தார், தொலைக்காட்சி பார்த்தார், நடைப் பயிற்சியில் ஈடுபட்டார், தொலைபேசியில் வேண்டியவர்களிடம் உரையாடினார், ஆட்சி தொடர்பான உத்தரவுகளை விடுத்தார், தினமும் தேவையானவர்களை சிறை வளாகத்தினுள் வைத்துச் சந்தித்து உரையாடினார், உரிய மருத்துவ சிகிச்சை களைப் பெற்றுக்கொண்டார், இவ்வாறு சிறைக்குள் அவருக்கு எந்தக் குறையும் இருக்கவில்லை. இதைவிட அங்குள்ள சிறைச்சாலை ஆணையாளர் தினமும் அவரது உடல்நலம், தேவைகள் தொடர்பாகவும் விசாரித்து அறிந்து கொள்ளத் தவறவில்லை.

ஜெயலலிதா ஏதோ பொது நலன்சார் போராட்டத்தில் கலந்து கொண்டதால், சிறையில் அடைக்கப்படவில்லை. சொத்துக் குவிப்புத் தொடர்பான மோசடிக் குற்றச்சாட்டின் பேரிலேயே அவருக்குச் சிறைத் தண்டனையும் , பெருமளவு தண்டமும் விதிக்கப்பட்டது. ஆனால் அவர் சிறையில் அடைக்கப்பட்டதை அறிந்தும் சுமார் 150 இற்கும் மேற்பட்டவர்கள் தமது உயிரை ஏதோ ஒரு வகையில் மாய்த்துள்ளனர். தமிழ் நாட்டின் இயல்புநிலை முற்றாக முடங்கியது. வாகனங்கள் தீயிடப்பட்டு அழிக்கப்பட்டன. வர்த்தக நிலையங்கள் நிர்ப்பந்தத்தின் பேரில் மூடப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவர்களின் வீடுகளும் தாக்குதல்களுக்கு உள்ளாகின. ஜெயலலிதாவின் உத்தரவின்பேரில் முதலமைச்சராக ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் புதிய அமைச்சர்களும் தமது பொறுப்புகளை ஏற்றுக்கொண்டனர். ஆனால் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் சொரிந்த நிலையில் அவர்கள் அனைவரும் காணப்பட்டனர். ஆண் அமைச்சர்கள் தமது தாடியை மழிக்காத நிலையில் காணப்படுகின்றனர். அம்மா, அம்மா என்ற மந்திரத்தை அவர்களின் வாய் உச்சரித்துக் கொண்டிருக்கின்றது. ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் இம்முறை தீபாவளியைக் கொண்டாடவில்லை. முதலமைச்சர் வாழ்த்துச் செய்தியை விடுக்கவில்லை. இந்த நிலையில் ஜெயலலிதாவுக்குப் பிணை கிடைத்து சிறையிலிருந்து அவர் வெளியே வந்ததும் நடந்த சம்பவங்கள் தான் மெய் சிலிர்க்க வைக்கின்றன. லட்சக்கணக்கானவர்கள் அவரை வரவேற்பதற்குச் சிறை வளாகத்துக்கு முன்பாகத் திரண்டதும், அவரை ஏற்றிச் சென்ற வாகனத்தின் மீது மலர் சொரிந்து வாழ்த்தியதும், அவரது வாசஸ்தலத்துக்கு முன்பாகப் பெருமளவில் திரண்டு வாழ்த்தொலி எழுப்பியதும் ஜெயலலிதாவின் செல்வாக்கையும், மக்கள் ஆதரவையும் எடுத்துக் கூறின. இவையெல்லாவற்றுக்கும் மேலாக முன்னணி சினிமா நடிகரான ரஜினிகாந்தும், இந்திய மத்திய அமைச்சரான மேனகா காந்தியும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்தமை பலரையும் வியப்பில் மூழ்கடித்தது. நீதிமன்றத்தினால் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட ஒருவருக்கு சிறையில் மட்டுமல்ல வெளியிலும் வழங்கப்பட்ட ஆதரவு எதிர்காலத்தில் செல்வாக்குப் படைத்தவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கும் தூண்டும் எனச் சிந்திக்க வைக்கின்றது.

குற்றம் இழைத்த அனைவருமே குற்றவாளிகள்தான். இதில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேச்சுக்கே இடமில்லை. சிறைக் கைதிகள் அனைவரும் ஒரேவிதமாகவே கருதப்பட்டுத் தண்டனையை அனுபவிக்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும். தண்டனை வழங்கிய பின்னர் பதவி, அந்தஸ்து ஆகியவற்றைப் பார்ப்பது மனித நீதிக்கு உகந்ததல்ல. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவாக இருந்தாலென்ன, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியாக இருந்தாலென்ன அல்லது ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தாலென்ன இவர்கள் குற்றவாளி என்கின்ற முத்திரை குத்தப்பட்டால் உரிய தண்டனையை உரிய வகையில் அனுபவித்தே தீர வேண்டும். இதைவிடுத்து ஜெயலலிதா விடயத்தில் நடந்தது போன்று நடந்து கொண்டால் நீதிமன்றங்கள் தீர்ப்புக்களை வழங்குவதில் அர்த்தமே இருக்காது. என்னதான் அந்தஸ்து வேறுபாடுகள் இருந்தாலும் குற்றவாளிகள் என்ற வட்டத்தினுள் அடங்கும்போது அனைவருமே ஒரே அந்தஸ்தைப் பெற்று விடுகிறார்கள். இதுதான் ஜனநாயகமும் கூட. ஆனால் இது நடைமுறைக்கு வருமா என்பதுதான் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

---

**வாசகர் திருமுகம்**

## தம்பாட்டி கிராம வீதி எப்போது புனரமைக்கப்படும்?

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உள்ள தம்பாட்டி கிராமத்துக்குச் செல்லும் வீதி மக்கள் பயணிக்க முடியாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வீதியூடாகப் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பயணம் செய்கின்றனர். அத்தோடு விற்பனை நிறுவனங்களின் வாகனங்கள், கடலுணவு கொள்வனவு செய்யும் வாகனங்கள் என அதிகளவான வாகனங்கள் பயணம் செய்கின்றன. மேலும் இந்த வீதியினூடாக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களும் தமது சேவையை வழங்கும் பணியில் ஈடுபடுகின்றன.

இந்த வீதி, மழை காலங்களில் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு சேறும் சகதியுமாக இந்த வீதி காணப்படும் பட்சத்தில் இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்து சேவையை வழங்க மறுக்கும் நிலையும் ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு இ.போ.ச. பஸ் சேவை தடைப்படுமானால் பாடசாலை மாணவர்கள் தொடங்கி பல்கலைக்கழக மாணவர்கள் ஈறாக பொதுமக்கள் அனைவரும் பெரும் இன்னல்களை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படும்.

தம்பாட்டி கிராமம் படிப்படியாக முன்னேறி வருகின்ற நிலையிலும் இந்த வீதி இன்னமும் முன்னேற்றம் காணாமலேயே இருக்கின்றது. இது தொடர்பாக பல்வேறு தரப்பினரிடம் தெரிவித்திருந்தும் வீதி இன்னமும் சீராக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகவே காணப்படுகிறது. எனவே இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வரும்படி பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

*பாதிக்கப்பட்ட நபர்*

# இந்தியா-வியட்நாம் இடையே ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

டில்லி, ஒக்.30

இந்தியா-வியட்நாம் இடையே கல்வி, அறிவியல் தொழில்நுட்பம், பாதுகாப்பு, வர்த்தகம், சுற்றுலா உட்பட பல துறைகளில் 7 ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கைச்சாத்தாகின.

வியட்நாம் பிரதமர் நுகுயென் டான் டங், அரசு முறைப் பயணமாக செவ்வாய்க்கிழமை இந்தியா வந்திருந்தார். பீகார் மாநிலம் புத்தகயாவில் உள்ள மகாபோதி கோயிலுக்கு நேற்று முன்தினம் அவர் தனது மனைவியுடன் சென்று வழிபட்டார். புதுடில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை, டான் டங் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். அப்போது அறிவியல் தொழில்நுட்பம், பண்பாடு, கல்வி, சுற்றுலா, கடல் பாதுகாப்பு உட்பட பல துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது தொடர்பாக 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின.

வியட்நாமின் ராணுவத் தரப்பின் கொள்வனவுக்கு இந்தியா ரூ.613 கோடி கடனுதவி அளிக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவிடம் இருந்து 4 கடற்படைரோந்துப் படகுகளைவியட்நாம் கொள்முதல் செய்யும். மேலும் வியட் நாமுடன் வர்த்தக உற வுகளை வலுப்படுத்த இந்தியா ரூ.1838 கோடி கடன் அளிக் கிறது. 2020ம் ஆண்டுக்குள் இருதரப்பு வர்த்தகத்தை ரூ.91 ஆயிரம் கோடியாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 21 ஆம் திகதியை சர்வதேச யோகா தினமாக அறிவிக்க வேண்டும் என்று ஐ.நா.வில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு, வியட்நாம் ஆதரவளித்ததற்கு மோடி நன்றி தெரிவித்தார். தென் சீன கடல் பகுதியில் இந்தியாவுக்கு மேலும் 2 எண்ணெய் கிணறு ஒப்பந்தங்களை வழங்கியுள்ள வியட்நாம், ஏற்கனவே உள்ள எண்ணெய் கிணறு ஒப்பந்தத்தை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

வியட்நாமின் 5 எண்ணெய் வள பகுதியில் இந்தியா



ஆய்வு மேற்கொள்ளவுள்ளது. சீனாவின் எதிர்ப்பையும் மீறி இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்புக்கு பின் பேட்டியளித்த பிரதமர் மோடி கூறியதாவது:

"இந்தியா-வியட்நாம் இடையே பண்டைய காலம் முதல் ஆன்மிகம் மற்றும் பண்பாடு பிணைப்பு உள்ளது. அமைதி மற்றும் இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதில் இரு நாடுகளும் நம்பிக்கை வைத்துள்ளன. விண்வெளித் துறையில் வியட் நாமுக்கு ஒத்துழைப்பு அளிக்க இந்தியா சம்மதம் தெரிவித் துள்ளது. வியட்நாம் ராணு வத்தை நவீனப்படுத்துவதில் இந்தியா உதவி செய்யும்" இவ்வாறு மோடி கூறினார்.

தெற்கு சீனகடல் பகுதியில் வலுவான கடற்படை தளத்தை அமைக்க வியட்நாம் விரும்புகிறது. அங்கு பாதுகாப்புப் பணியை மேற்கொள்ள ரஷ்ய தயாரிப்பு நீர்மூழ்கி கப்பல்களை வியட்நாம் பயன்படுத்துகிறது. அவற்றை இயக்க வியட்நாம் கடற்படையினருக்கு இந்தியா ஏற்கனவே பயிற்சி அளித்து வருகிறது. தற்போது, சுகாய் ரக போர் விமானங்களை இயக்க வியட்நாம் விமானப்படை விமானிகளுக்கு இந்தியா பயிற்சி அளிப்பதற்கான பேச்சும் நடைபெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### சீனாவுக்கு வெறுப்பு

இந்தியாவுக்கு வியட்நாம் ஒதுக்கியுள்ள எண்ணெய்க் கிணறு பகுதிகள் அனைத்தும் தெற்கு சீனக் கடல் பகுதியில் உள்ளது. இது சீனா-வியட்நாம் இடையே எல்லை பிரச்சினை நிலவும் பகுதி. அங்கு இந்தியா ஒப்பந்தம் செய்வதற்கு சீனா ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்தது. அதையும் பொருட்படுத்தாமல் வியட்நாமுடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. மேலும் தெற்கு சீன கடல் பகுதியில் ரோந்து மேற்கொள்ளத்தான், இந்தியாவிடம் கடற்படை படகுகளை வியட்நாம் வாங்குகிறது. இதனால் இந்தியா-வியட்நாம் இடையே ஏற்பட்டுள்ள இந்த ஒப்பந்தங்கள் சீனாவுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது. (வ)

## சுரங்கம் அமைத்து வங்கியில் கொள்ளை

அரியானா மாநிலத்தில் திரைப் படங்களில் இடம் பெறுவது போன்ற கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

125 அடி நீள சுரங்கமொன்றைத் தோண்டி வங்கியொன்றில் கோடிக் கணக்கான பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர்.

அரியானா மாநிலம் சாப் தேசிய வங்கியிலேயே கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருப்பினும் இந்தச் சம்பவம் குறித்த தகவல்கள் தற்போது தான் வெளியே தெரியவர ஆரம்பித்துள்ளன.

கொள்ளையர்கள் கட்டடத்தின் 3 அறைகளில் சுரங்கம் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அது யாருக்கும் தெரியாமல் நீண்ட நாள்களாக நடைபெற்றிருந்திருக்கவேண்டும் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (வ)

## 627 பேரின் கறுப்புப் பணம் பட்டியல் உச்சநீதிமன்றத்தில்

டில்லி, ஒக்.30



வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப் பணம் பதுக்கி வைத்துள்ள 627 பேரின் பட்டியலை, மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

இந்தப்பட்டியலை 3 தொகுப்புகளாக நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்துள்ளது. பட்டியலில் உள்ளவர்களின் பெயர்கள் இரகசியமாக வைக்கப்படும் என்று மத்திய அரசு உறுதி கூறியுள்ளது. கறுப்புப் பணம் பதுக்கிய 3 பேரின் பெயர்கள் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது கறுப்புப் பணம் பதுக்கியுள்ளோரின் முழுப்பட்டியலையும் தாக்கல் செய்ய நீதிபதிகள் அதிரடி உத்தரவு பிறப்பித்தனர். அதனையடுத்து நேற்று புதிய பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கறுப்புப் பண விவகாரத்தில் வெளிநாடுகளுடன் மத்திய அரசு செய்து கொண்ட 7 ஒப்பந்த நகல்களும் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளன. விசாரணையின் தற்போதைய நிலை குறித்த அறிக்கையையும் மத்திய அரசு தாக்கல் செய்துள்ளது. வழக்குத் தொடர்பாக நவம்பர் மாத முடிவில் சிறப்புப் புலனாய்வுக் குழு அறிக்கை தர ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விசாரணையை 2015 மார்ச் மாதத்துக்குள் முடிவுக்குக் கொண்டு வரவும் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. கறுப்புப் பணம் வைத்திருப் போர் பட்டியல் சிறப்பு புலனாய்வுக் குழுவிடம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கறுப்புப் பணம் பதுக்கி வைத்துள்ளவர்களின் பெயர்கள், கணக்கு எண், தொகை ஆகிய விவரங்கள் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

### மத்திய அரசு விளக்கம்

கறுப்புப் பண வழக்குத் தொடர்பாக மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. பிரான்சில் உள்ள ஹெச்.எஸ்.பி.சி வங்கியில் கறுப்புப் பணம் வைத்துள்ளோரின் முழுப்பட்டியல் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் முகுல் ரோத்தகி தகவல் தெரிவித்துள்ளார். அடுத்த ஆண்டு ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்குள் விசாரணையை முழுமையாக முடிக்க கெடு விதிக்கப்பட்டுள்ளது. (வ)



ஹைதராபாத் மாளிகையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தின்போது இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள வியட்நாம் பிரதமர் நுகுயென் டான் டங்குக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கைலாகுகொடுத்து வரவேற்றபோது....

## பாகிஸ்தான் வழியாக அனுப்ப அனுமதி கோருகிறது இந்தியா

### ஆப்கனுக்கு கோதுமை ஏற்றுமதி

டில்லி, ஒக்.30

பாகிஸ்தான் நிலப்பகுதி வழியாக ஆப்கானிஸ் தானுக்கு கோதுமை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு அனுமதிகோரி உள்ளது. இதற்கு பாகிஸ்தானின் மாவு மில் உரிமையாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பல லட்சம் தொன் கோதுமையை ஆப்கனுக்கு ஏற்றுமதி செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளது. இதற்காக பாகிஸ்தான் நிலப்பகுதி வழியாக கோதுமையை அனுப்பி வைக்க அந்தநாட்டு அரசிடம் அனுமதி கோரி உள்ளது. இந்த நிலையில் இதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று பிரதமர் நவாஸ் ஷெரிப் தலைமையிலான அரசுக்கு உள்ளூர் கோதுமை மாவு மில் உரிமையாளர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். அவ்வாறு அனுமதி வழங்கினால் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் 1 தொன் கோதுமை விலை பாகிஸ்தான் ரூபா மதிப்பில் ரூ.2,900 ஆக இருக்கிறது. அதேநேரம் பாகிஸ்தான் கோதுமை விலை ரூ.3,400 ஆக உள்ளது.

இந்த விலை வித்தியாசம் காரணமாக, பாகிஸ்தானிலிருந்து ஆப்கனுக்கு ஏற்றுமதியாகும் கோதுமை மாவுக்கான சந்தை பாதிக்கப்படும் என்று அவர்கள் கருதுகின்றனர். இதன் காரணமாகவே, பாகிஸ்தான் வழியாக கோதுமை ஏற்றுமதி செய்ய இந்தியாவுக்கு அனுமதி வழங்க அவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது. (வ)

## மே. வங்கத்தில் தீவிரவாத முகாம்களை அழிக்குக

### ராஜ்நாத் சிங் உத்தரவு

டில்லி, ஒக்.30

மேற்கு வங்கத்தில் இயங்கி வரும் ஜமாத்-உல்- முஜாஹிதீன் பயங்கரவாத அமைப்பின் முகாம்களை அழிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் உத்தர விட்டுள்ளார்.

மேற்கு வங்க மாநிலம், பர்த்வான் மாவட்டத்தில் உள்ள இல்லத்தில் கடந்த 2 ஆம் திகதி குண்டுவெடிப்பு இடம்பெற்றது. இது தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பினர் விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணையில், இந்தச் சம்பவத்தில் வங்கதேசத்தில் இயங்கி வரும் ஜமாத்-உல்-முஜாஹிதீன் என்ற பயங்கரவாத அமைப்புக்கு தொடர்பிருப்பது தெரியவந்தது.



குண்டுவெடிப்பு நடைபெற்ற வீட்டை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் கடந்த திங்கட்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அந்த ஆய்வுக்குப் பின்னர், மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை அஜித் தோவல் சந்தித்தார். அப்போது, இந்த விவகாரத்தில் பயங்கரவாதிகளின் தொடர்பு, விசாரணையின் தற்போதைய நிலை உள்ளிட்டவை குறித்து ராஜ்நாத் சிங்கிடம் விளக்கமளித்தார்.

இந்தச் சூழலில், ஜமாத்-உல்-முஜாஹிதீன் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 20 முதல் 30 குழுக்கள் நாடு முழுவதும் பரவியிருப்பதாக பர்த்வானில் விசாரணை மேற்கொண்டு வரும் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக, மேற்கு வங்கம், அஸ்ஸாம், தென் பகுதிகளில் அவர்களது குழுக்கள் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. (வ)

# சுரங்கம் இடிந்ததில் 19 பேர் சிக்கினர்

இஸ்தான்புல், ஒக்.30
துருக்கியில் நேற்று முன்தினம் நிலக்கரிச் சுரங்கமொன்று இடிந்து விழுந்ததில் அங்கு பணியாற்றிய சுமார் 19 தொழிலாளர்கள் சுரங்கத்துக்குள் சிக்கியுள்ளனர்.

துருக்கியின் மத்திய தரைக் கடலோரத்தில் இருந்து சுமார் 110 கி.மீ. தொலைவில் உள்ள காரமான் மாகாணம், எர்மனெக் நகரில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தின் மேற்பகுதி நேற்று முன்தினம் திடீரென இடிந்து விழுந்தது. இதனால் அதற்குள் சிக்கிக்கொண்ட தொழிலாளர்களை மீட்பதற்காக மீட்புப் படையினர் மற்றும் மருத்துவக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.



சுரங்கத்தினுள் தேக்கி வைக்கப்பட்டிருந்த தண்ணீர், தொழிலாளர்கள் உள்ள பகுதிக்கு உடைந்து சென்றதால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. 25 தொழிலாளர்கள் மீட்கப்பட்டதாகவும், 19தொழிலாளர்கள் உள்ளே சிக்கியிருப்பதாகவும் முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துருக்கியில் இதுபோன்று சுரங்க விபத்து அதிகமாக இடம்பெற்று வருகின்றனமை வழமை. உலகின் மிகப்பெரிய தொழிற்சாலை விபத்து அங்கு நடைபெற்றுள்ளது. கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் சோமா நகரில் ஏற்பட்ட சுரங்க விபத்தில் 301தொழிலாளர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## மே.ஆபிரிக்க நாட்டினருக்கு ஆஸியில் விசா நிறுத்தம்

### எபோலா நோய் எதிரொலி

சிட்னி, ஒக்.30
எபோலா நோய்க்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் ஆஸ்திரேலியா, முதற்கட்டமாக மேற்கு ஆபிரிக்க நாட்டினருக்கு விசா வழங்குவதை ரத்து செய்துள்ளது.

ஆபிரிக்காவின் மேற்கு பகுதி நாடுகளான லைபீரியா, சியாரா லியோனே, கினியா உள்ளிட்ட நாடுகளில் எபோலா நோய் வேகமாகப் பரவி வருகிறது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் பரவிவரும் இந்த நோய்க்கு, இதுவரை சுமார் 5 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். இதனால் அதிர்ச்சியடைந்து வரும் உலக நாடுகள், எபோலா தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தி வருகின்றன. அந்த வகையில் எபோலாவுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் ஆஸ்திரேலியா, முதற் கட்டமாக மேற்கு ஆபிரிக்க நாட்டினருக்கு விசா வழங்குவதை ரத்து செய்துள்ளது.

இந்த நாட்டினரிடம் இருந்து வரும் விசா விண்ணப்பங்களை பரிசீலிக்க முடியாது என்று ஆஸ்திரேலிய குடியேற்றத்துறை அமைச்சர் ஸ்காட் மாரிசன் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறுகையில், மேற்கு ஆபிரிக்க நாட்டினருக்கான நிரந்தரமற்ற அல்லது தற்காலிக விசா ரத்துச் செய்யப்படுவதுடன், ஆஸ்திரேலியாவுக்கு இன்னமும் வந்துசேராத நிரந்தர விசாதாரர்கள், இனிமேல் தகுந்த மருத்துவ சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார். (வ)

## எபோலாவை அறிவியல் ரீதியாக அணுக கோரிக்கை

### ஐ.நா.எபோலா வைரஸ் தடுப்பு அமைப்பு வலியுறுத்து

நியூயோர்க், ஒக்.30
எபோலா வைரஸ் பரவுவதை தடுக்கும் பணிகளை அறிவியல் பூர்வமாகவே அணுக வேண்டும் என்று ஐ.நாவின் எபோலா வைரஸ் தடுப்பு அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

எபோலா வைரஸால் பாதிக்கப்பட்ட சியராலியோன், லைபீரியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து திரும்புபவர்களிடம் எபோலா வைரஸ் தாக்கம் இல்லாவிட்டாலும் கட்டாயம் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா அரசு தெரிவித்தது.

இதற்கு பலரும் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், எபோலா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் பணிகளை அறிவியல் பூர்வமாகக் கையாள வேண்டும் என்று ஐ.நாவின் எபோலா வைரஸ் தடுப்பு அமைப்பு தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

எபோலா வைரஸ் பரவலை தடுக்கும்பணிகளை உணர்ச்சிவசப்பட்டு மேற்கொள்வது, வைரஸால் பாதிக்கப்பட்ட நாடுகளில் பணியாற்றும் வெளிநாட்டு மருத்துவர்களை உளவியல் ரீதியாக பாதிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் பரவி வரும் இந்த நோய்க்கு, சுமார் 5 ஆயிரம் பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

இதனால் அதிர்ச்சியடைந்து வரும் உலக நாடுகள், எபோலா தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. (வ)

## ஐ.எஸ்-யை முந்த வேண்டும்

### அல்குவைதாவின் மாபெரும் திட்டம்

பக்தாத், ஒக்.30
ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை ஐ.எஸ்.ஐ.எஸ் கைப்பற்றியுள்ளதால், அவர்களை வீழ்த்த அல்குவைதா அமைப்பினர் திட்டம் தீட்டியுள்ளனர்.

ஈராக்-சிரியாவில் ஆதிக்கத்தை நிலைநாட்டி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் தங்களது அராஜக ஆட்சியால் பல அட்டூழியங்களை அரங்கேற்றி வருகின்றனர்.



இந்தநிலையில் உலகளவில் ஐ.எஸ்.ஐ.எஸ். பெரும் வளர்ச்சி பெற்றதால், அவர்களை முந்திச் செல்லும் நோக்கில் அல்குவைதா அமைப்பினர் திட்டமிட்டனர்.

அதன்படி தற்போது அல்குவைதா தீவிரவாத அமைப்பின் கூட்டாளி அமைப்பான நுஸ்ராபிரண்ட் என்ற அமைப்பு, வடக்கு சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் உள்ள பலான், கன்சப்ரா, அப்லின், அப்திதா, முகரா, மஷுன் ஆகிய கிராமங்களைக் கைப்பற்றியுள்ளது.

குறித்த கிராமங்களை சிரிய ஜனாதிபதி அல் அசாதுக்கு எதிராகப் போராடி வரும் சிரிய புரட்சிப் படையினரிடமிருந்து தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.

அந்தப்பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளும் முன்னேறி வருவதால் அவர்களுக்கு முன்பாக இத்லிப்பைப் பிடிக்க அல்குவைதா மும்முரமாக இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## வெடித்துச் சிதறியதுஅமெ. ரொக்கெட்

சர்வதேச விண்வெளி நிலையத்துக்குத்தேவையானபொருள்களை எடுத்து சென்ற பெயரிடப்படாத அமெரிக்காவின் சரக்கு ரொக்கெட் ஒன்று ஏவிய சில நிமிடங்களில் வெடித்துச் சிதறியது.



5,055 பவுண்ட்ஸ் எடை கொண்ட அறிவியல் சோதனைகள் மற்றும் உபகரணங்களோடு சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு 6.22 மணிக்குப் புறப்படத் தயாராயிருந்தது. கிழக்கு வெர்ஜினியாவில் நாசா ஏவுதளத்திலிருந்து புறப்பட்ட இந்த ரொக்கெட், புறப்பட்ட சில நிமிடங்களில் தீப்பிழம்புகளுடன் வெடித்துச் சிதறியது. இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. ரொக்கெட் ஏவுதளத்துக்கு குறிப்பிடத்தக்க வகையில் சேதம் ஏற்பட்டுள்ள தாக அதிகாரிகள் தெரிவித்த னர். இதுகுறித்து தீவிர விசாரணைக்கு நாசா உத்தரவிட் டுள்ளது. (வ)


## ரஷ்ய ஏவுகணை விண்ணுக்கு பறந்தது வெற்றிகரமாக

விண்வெளிக்குப் பொருள்களைக் கொண்டு செல்வதற்காக ரஷ்யாவால் தயாரிக்கப்பட்ட ஆளில்லா ரொக்கெற் வெற்றிகரமாக நேற்று விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது. சேயுஸ் எம்-25 என்ற ரொக்கெற் கஜகஸ்தான் ஏவுதளத்தில் இருந்து விண்ணுக்கு செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாசாவால் விண்ணுக்கு செலுத்தப்பட்ட ரொக்கெற் வெடித்துச் சிதறியிருந்த நிலையில், ஒத்த தொழில்நுட்பமுடைய ரொக்கெற்றை ரஷ்யா வெற்றிகரமாக விண் ணுக்குச் செலுத்தியுள்ளது. (வ)



## ஜாம்பியா ஜனாதிபதி மிச்சைல் காலமானார்



ஜாம்பியா நாட்டின் ஜனாதிபதி மிச்சைல் சதா (வயது 77) இரகசிய நோய் காரணமாக லண்டனில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவர் சிகிச்சை பயனின்றி மாரடைப்பால் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

எமது அன்புக்குரிய தலைவர் மரணம் குறித்து அறிவிக்க எனக்கு கடினமான இதயம் வேண்டும் என்று அமைச்சரவை செயலாளர் ரோலண்ட் மிசிச்கா தெரிவித்தார். அடுத்த ஜனாதிபதி குறித்து ஜாம்பியன் நாட்டு அமைச்சரவை கூடி முடிவு எடுக்கிறது.

அவர் இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்புதான் ஜாம்பியா நாட்டின்50ஆவதுசுதந்திரதினத்தைப் பிரிட்டனில் வைத்து கொண்டாடினார். (வ)

## சோடாவைப் போன்று சாற்றை உமிழும் அப்பிள்




லண்டன், ஒக்.30
உலகிலேயே முதல் முறையாக வாயில் வைத்தவுடன் சோடாவைப் போன்று இனிப்புச்சாற்றை உமிழும் அப்பிள் வகை ஒன்றை லண்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கிறார்கள். இதற்கு 'ஸ்பார்க்கிளிங் அப்பிள்' என்று பெயரிட்டுள்ளனர்.

இந்த அப்பிளை நாம் கடித்தவுடன் அதிலுள்ள செல்கள் விரிவடைந்து, தேக்கி வைத்திருக்கும் இனிப்புச் சாற்றை சோடாவைப் போல எமது வாய் முழுவதும் நிரப்பிவிடுகிறது. கிழக்கு ஜேர்மனியில் மிகவும் பிரபலமான உணவுவகையான அப்பிளை மரபணு மாற்றம் செய்து உருவாக்கப்படுகிறது இந்த வகை அப்பிள். எனினும், முழுமையாக சோதனை செய்யப்பட்ட பின்னரே இது விற்பனைக்கு வரும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

மேலும், 'சாப்பிடக் கூடிய அப்பிள் பழங்களில் இது போன்ற ஒன்றை இதற்கு முன்னர் நாம் பார்த் திருக்க முடியாது. அதிலுள்ள பெரிய செல்கள் அப்பிளைக் கடித்ததுமே இனிப்புச் சாற்றையும், அமிலத்தையும் உமிழ்ந்து எமக்கு தித்திப்பை உண்டாக்கும். ஒரு இனிப்புச் சோடாவை பருகுவதைப் போன்றஅனுபவத்தைக்கொடுக்கிறது இந்த அப்பிள்' என்கிறார்கள் விஞ்ஞானிகள். (வ)

# கடலுக்கடியில் விற்பனைக் காட்சியறை




ஜப்பானைச் சேர்ந்த பிரபல மின்னியக்க நிறுவனமான சொனி தனது புதிய 'எக்ஸ்பீரியா ஆகுவாடெக்' காட்சியறையை டுபாயில் கடலுக்கடியில் அமைக்கும் புதிய வணிக முயற்சியில் இறங்கியுள்ளது. இந்தக் காட்சியறையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் சோனி நிறுவனம் தனது புதிய அறிமுகமான தண்ணீரால் பாதிப்பு ஏற்படாத 'வாட்டர் ரெசிஸ்டண்ட் ஸ்மார்ட் போன்', ரப்லட் மற்றும் ஏனைய சாதனங்களையும் விற்பனைக்கு வைக்க இருக்கிறது. இந்த நவீன தொழில் நுட்பம் மற்றும் புதுமையான வியாபார உத்தி, சந்தையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. கடலுக்கு அடியில் அமைய உள்ள உலகின் முதல் 'எக்ஸ்பீரியா ஆகுவாடெக்' காட்சியறை நிச்சயமாக வாடிக்கையாளருக்கு ஒரு புதிய அனுபவத்தைத் தரும் என்றும், இது அவர்களது வாழ்க்கையில் மறக்கவே முடியாத ஒரு தருணமாக அமையும் என்றும் சொனி நிறுவனத்தின் பிராந்திய துணைத்தலைவர் ருயிடீகொ் ஓடென்பேச் தெரிவித்தார்.

நீச்சல் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றில் திறம்பட பயிற்சி பெற்ற வல்லுநர்களால் வாடிக்கையாளர்கள் கடலுக்கு அடியில் உள்ள காட்சியறைக்கு பொருள்களை வாங்குவதற்கு அழைத்து வரப்படுவரா்கள் எனவும், மேலும் இந்த 'ஆகுவாடெக் ஷோரூமில்' அவர்களால் வழக்கம்போல இயல்பாக மூச்சுவிடவும், கடல்தரையில் எளிதாக நின்று பொருள்களைப் பார்வையிடவும், வாங்கவும் இயலும் என்றும் அதற்கேற்ப விற்பனைமுறை, பாதுகாப்பு வசதி மற்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் சொனி நிறுவனம் தெரிவித்துள்ளது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | | | | | |
| 5 | | 3 | | 4 | 8 | | | 9 |
| | 1 | | | 7 | 3 | | 4 | |
| 9 | | 7 | | | 2 | 3 | 6 | |
| 2 | | | 3 | 1 | 9 | | | 8 |
| | 3 | 4 | 6 | | | 2 | | 5 |
| | | | 1 | 3 | | | 2 | |
| 7 | | | 8 | 2 | | 1 | | 6 |
| | | | | | 6 | | | |

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3x3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 3 | 6 | 5 | 8 | 1 | 2 | 4 | 7 |
| 1 | 8 | 4 | 2 | 6 | 7 | 9 | 5 | 3 |
| 5 | 7 | 2 | 4 | 3 | 9 | 1 | 6 | 8 |
| 6 | 2 | 5 | 3 | 9 | 8 | 4 | 7 | 1 |
| 3 | 9 | 7 | 1 | 4 | 2 | 5 | 8 | 6 |
| 8 | 4 | 1 | 7 | 5 | 6 | 3 | 2 | 9 |
| 7 | 5 | 9 | 8 | 1 | 4 | 6 | 3 | 2 |
| 4 | 1 | 8 | 6 | 2 | 3 | 7 | 9 | 5 |
| 2 | 6 | 3 | 9 | 7 | 5 | 8 | 1 | 4 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### வாக்கின் ஆற்றல்

மன அழுத்தமும் பரபரப்பும் நிறைந்த இன்றைய நமது உலக வாழ்வால் நமது நரம்புகள் மென்மையை உணரும் தன்மையை இழந்து கடினமாகிவிட்டது. வயதானவர்களாக ஆகுந்தோறும், உலகால் பந்தாடப்படுந்தோறும் கடினமானர்களாகி விடுகிறோம். அதன் காரணமாக நம்மைச்சுற்றி தெள்ளத் தெளிவாக, நிரந்தரமாக நடைபெறுபவற்றைக் கவனிக்காமல் போகின்ற நிலைக்கு நாம் வந்துவிடுகிறோம். எனினும் சிலவேளைகளில் மனிதத்துவம் தன் இயல்பை நிலைநாட்டுகிறது. அப்போது இந்த அன்றாட நிகழ்ச்சிகளுள் சிலவற்றைப் பற்றிச் சிந்திக்கவும் வியந்து நிற்கவும் செய்கிறோம். இவ்வாறு வியந்து நிற்பதுதான் ஆன்மிக ஒளி பெறுவதற்கான முதற்படியாகும். வாக்கின் தத்துவரீதியான, மத சம்பந்தமான உயர்ந்த மதிப்பைத் தவிர ஒலிச் சின்னங்கள் மனித வாழ்க்கை நாடகத்தில் முக்கிய இடம் வகிப்பதை நாம் காணலாம். நான் உங்களோடு பேசிக் கொண்டிருக்கிறேன். உங்களை நான் தொடவில்லை. நான் பேசுவதால் காற்றில் ஏற்படுகின்ற அதிர்வுகள் உங்கள் காதுகளில் நுழைந்து, நரம்புகளைத் தொட்டு உங்கள் மனத்தில் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. உங்களால் இதைத் தடுக்க முடியாது.

இதைவிட வியப்புக்குரியது என்ன இருக்க முடியும்? ஒருவன் மற்றவனை முட்டாள் என்று அழைக்கிறான். விளைவு? இவன் எழுந்து அவன் மூக்கில் ஓங்கி ஒரு குத்துவிடுகிறான். வாக்கின் சக்தியைப் பாருங்கள்! ஒருத்தி துன்பத்தால் அழுது கொண்டிருக்கிறாள். இன்னொருத்தி அங்கு வருகிறாள். அவளிடம் மென்மையான சில வார்த்தைகளை பேசுகிறாள், உடனே இவளது வளைந்திருந்த உடம்பு நிமிர்ந்து நேராகிறது. முகத்தில் புன்னகை அரும்ப ஆரம்பிக்கிறது. வாக்கின் ஆற்றலை எண்ணிப் பாருங்கள்! உயர்ந்த தத்துவங்களிலும் அதுபோலவே அன்றாட வாழ்விலும் அவை ஒரு மாபெரும் சக்தியாக விளங்குகின்றன. நாம் சிந்தித்துப் பார்க்காமல், ஆராய்ந்து பார்க்காமல் இரவும் பகலும் இந்த ஆற்றலைக் கையாண்டு கொண்டிருக்கிறோம். இந்தச் சக்தியின் இயல்பைத் தெரிந்து கொள்வதும், அதைச் சிறப்பாகப் பயன்படுத்துவதும் கூட கர்ம யோகத்தின் ஒரு பகுதியாகும்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: தொழில் செய்பவர்கள் கவனமாகச் செயற்படுவதுடன் எச்சரிக்கையாக இருப்பதும் நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை ஏற்பட்க்கூடும்.



**இடபம்**: குடும்பத்தில் அமைதி நிலவ குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவது நல்லது.



**மிதுனம்**: எதிலும் தேவையற்ற வீண் கவலை உண்டாகும். பயணங்கள் செல்ல நேரிடலாம். கடன் விடயங்களில் கவனம் தேவை. குறிக்கோளற்ற வீண் அலைச்சல் உண்டாகலாம்.



**கடகம்**: காரியதாமதம் ஏற்படும். அடுத்தவர்களுக்காக எந்த உத்தரவாதமும் கொடுக்காமல் இருப்பது நல்லது. வீண்கவலை ஏற்படும். நண்பர்கள் மூலம் கிடைக்க வேண்டிய உதவிகள் தாமதப்படும்.



**சிங்கம்**: தொழில் வியாபாரம் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உழைக்க வேண்டி இருக்கும். சம்பளம் தாமதப்படலாம். அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.



**கன்னி**: குடும்பத்தில் ஏதாவது பிரச்சினை இருந்து வரும். பிள்ளைகளின் நடவடிக்கைகள் மனதில் கவலையை ஏற்படுத்தும். பக்குவமாக அவர்களிடம் பேசுவது நல்லது.



**துலாம்**: மற்றவர்களுக்காக எந்த உத்தரவாதங்களும் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களின் உதவியால் காரிய அனுகூலம் உண்டாகும். பகைகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட தூரப் பயணங்களால் லாபம் உண்டாகும்.



**விருச்சிகம்**: மனதில் தைரியம் பிறக்கும். வாக்கு வன்மை ஆதாயத்தை பெற்றுத் தரும். உயர் மட்டப் பதவியில் உள்ளவர்களின் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். உங்களது உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.



**தனுசு**: மனதில் தைரியம் பிறக்கும். வாக்கு வன்மை ஆதாயத்தைப் பெற்றுத் தரும். உயர் மட்டப் பதவியில் உள்ளவர்களின் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். உங்களது உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.



**மகரம்**: தொழிற் போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கக் கூடும். மறைமுகமாக இருந்த எதிர்ப்புகள் விலகி மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள்.



**கும்பம்**: பிள்ளைகள் நலனில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். மற்றவர்களால் இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். குடும்பத்தில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும்.



**மீனம்**: தொழில் வியாபாரம் சற்று மந்தமாக காணப்பட்டாலும் பணம் வருவது தடைப்படாது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப்பளு இருந்தாலும் சக ஊழியர்கள் ஒத்துழைப்பால் அது குறையும்.

## நாளை

**ஐப்பசி-14 வெள்ளிக்கிழமை | 31.10.2014**

திதி: அட்டமி மா.06.23 வரை
நட்சத்திரம்: திருவோணம்
பி.இ.12.33 வரை

சுபநேரம்:06.03-07.33 வரை
இராகுகாலம்:10.33-12.03 வரை

# சுவிந்தன், கரசன் சிறப்பான ஆட்டத்தால் இறுதிக்குள் நுழைந்தது மத்திய அணி

### இந்துவின் போராட்டத்துக்கு பயனில்லை



யாழ்ப்பாணம், ஒக். 30
சுவிந்தன், கரசன் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தி இறுதியாட்டத்திற்குள் நுழைத்தது யாழ். மத்திய கல்லூரி அணி
வடமாகாண ரீதியாக யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் பொன் விபுலனந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான 19 வயதுப் பிரிவு கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆண்கள் பிரிவு அரையிறுதி ஆட்டம் யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் செவ்வாய்கிழமை இடம்பெற்றது.
இரு அணியினரும் கடுமையாக மோதிக் கொண்டதால் ஆட்டத்தில் விறுவிறுப்பு. காணப்பட்டது. முதல் கால் பாதி ஆட்டத்தில் இந்துக் கல்லூரியின் கை ஓங்கியிருந்தது. அது 10 புள்ளிகளையும் மத்திய கல்லூரி 5 புள்ளிகளையும் பெற்றன. அடுத்த பாதி ஆட்டத்தில் மத்தியின் கை ஓங்கியது. அது 18 புள்ளிகளைப் பெற்றது. இந்துக் கல்லூரி அணி 9 புள்ளிகளையே பெற்றது.
மூன்றாம் கால்பாதி ஆட்டத்தில் பலத்த போட்டி நிலவியது. இரு அணியினரும் விட்டுக் கொடுக்காமல் ஆடினர். மத்தி 14 புள்ளிகளையும் இந்து 13 புள்ளிகளையும் பெற்றது. நான்காம் கால்பாதி ஆட்டமும் விறுவிறுப்பான கடும் போட்டியாகவே அமைந்தது. மத்திய ஆதிக்கம் செலுத்த முயன்றபோதும் இந்து கடுமையான போட்டியை வழங்கியது. முடிவில் இந்து 14 புள்ளிகளையும் மத்தி 15 புள்ளிகளையும் பெற்றது.
ஆட்ட முடிவில் யாழ். மத்திய கல்லூரி அணி 52 : 46 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டதிற்கு தகுதி பெற்றது.

(உ-23)

## துப்பாக்கி சுடும் பயிற்சியாளராக தமிழச்சி அமெரிக்கா பயணம்

வடமராட்சி,ஒக்.30
இலங்கைப் பாடசாலைகள் துப்பாக்கி சுடும் விளையாட்டுச் சங்கத்தினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட போட்டித் தொடரில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட நெல்லியடி மத்திய கல்லூரி மாணவி செல்வி தயானிஸ்ரீ சிதம்பரலிங்கம் துப்பாக்கி சுடும் பயிற்றுவிப்பாளர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு மேலதிக பயிற்சிகளைப் பெறுவதற்காக ஐக்கிய அமெரிக்கா செல்லவுள்ளார்.
தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 6 பேர் கொண்ட பயிற்றுவிப்பாளர் அணியில் இடம் பெறும் ஒரேயொரு தமிழ் வீராங்கனை இவராவார்.
எதிர்வரும் 2017ஆம் ஆண்டு இலங்கையில் நடை பெறவுள்ள ஆசிய இளைஞர் விளையாட்டில் பங்குபற்றவுள்ள தேசிய அணி வீரர்களுக்கான பயிற்றுவிப்பாளராக பணியாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இவருக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.
இவரும் இன்னொரு மாணவ வீராங்கனையான செல்வி பிரதீபா குமாரவேல் என்பவரும் எதிர்வரும் நவம்பர் மாதம் போலந்து நாட்டில் நடைபெறவுள்ள பாடசாலை மட்ட சர்வதேச துப்பாக்கி சூடும் போட்டியில் இலங்கை அணி சார்பில் பங்குகொள்ளவுள்ளனர்.

(உ-173)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 30
பொன் விபுலனந்தன் கிண்ண கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதி ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெறவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. 6 மணிக்கு மின் ஒளியில் இடம் பெறும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

(உ-23)

# முதல் புற்றரை ஆடுகளம் நேற்று பற்றிக்ஸில் திறப்பு

### சனத், முரளிதரனின் ஆட்டங்களுடன் கோலாகல ஆரம்பம்









யாழ்;ப்பாணம், ஒக். 30
வடக்கில் முதல் முதலாக அமைக்கப்பட்ட புற்றரை ஆடுகளம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் நேற்று புதன் கிழமை சம்பிரதாய முறைப்படி யாழ். மறை மாவட்டஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தால் விளையாட்டுவீரர்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.
ஆடுகளத்தில் முதல் ஆட்டம் இலங்கை தேசிய கிரிக்கெட் அணியித் தலைமைத் தேர்வாளரும் பிரதித் தபால் துறை அமைச்சருமான சனத் ஜெயசூரிய மற்றும் சுழல்பந்து மன்னன் முரளிதரன் ஆட்டத்தால் களைகட்டியது.
இலங்கை கிரிக்கெட்டின் செயலாளார் நிசாந்த ரணதுங்க, யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, முன்னாள் தேசிய வீரர்கள் முத்தையா முரளிதரன், பிரமோதய விக்கிரம சிங்க, உப்புல் சந்தன, நிரோஷன் பண்டார, திலக்கொ லங்க சில்வா, ரவீந்திர புஸ்பகுமாரா ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்.
விருத்தினர்கள் பாடசாலையின் நுழைவாயிலில் வைத்து தமிழ் முறைப்படி ஆராத்தி எடுக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். நாதஸ்வர வாத்திய இசை மற்றும் பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு விருந்தினர்களுக்கு சிகப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.
இராணுவ பான்ட் வாத்தியக் குழவினால் தேசிய கீதம் இசைக்கப்பட்டதனை தொடர்ந்து யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகை புற்றரை ஆடுகளத்தை ஆசீர்வதித்து பாவனைக்குக் கையளித்தார். தொடர்ந்து வடக்கு - கிழக்கு இணைந்த 23 வயதுப் பிரிவு அணிக்கும் தேசிய அணியின் முன்னாள் வீரர்கள் அணிக்கும் இடையில் நட்பு ரீதியிலான 11 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டம் இடம்பெற்றது.
ஆட்டத்தில் முன்னாள் இலங்கை வீராகளைக்கொண்ட அணி ஐந்து விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.
பூவா தலையா போட்டதில் வெற்றி பெற்ற வடக்கு கிழக்கு மாகாண தெரிவு அணியானது முதலில் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டது. வட மாகாண அணி 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது. தயாபரன் ஆட்டமிழக்காது 26, திரோசன் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களை பெற்றனர்.
உப்புல் சந்தன ஒரு பந்துப்பரிமாற்றம் பந்து வீசி ஒரு ஓட்டத்துக்கு ஒரு இலக்கும், புஸ்பகுமார ஒரு பந்துப்பரிமாற்றம் பந்து வீசி 06 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கும், முத்தையா முரளிதரன் 02 பந்துப்பரிமாற்றம் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கும், சனத் ஜெயசூரியா 02 பந்துப்பரிமாற்றம் பந்து வீசி 16 ஒட்டங்களுக்கு ஒரு இலக்கும் வீழ்த்தினர்.
தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை முன்னாள் வீரர்கள் 11.1 பந்துப்பரிமாற்றங்களில் 05 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தனர். சனத் ஜெயசூரியா மூன்று ஆறுகள் இரண்டு நான்குகளுடன் 36, எரிக் உமாசாந்தா 18, டி சில்வா 11 ஓட்டங்களைப் பெற்றனர்.
இந்த புற்றரை ஆடுகளத்தை அமைப்பதற்கும் மைதானத்தை தயார் செய்வதற்கும் 80 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் தெரிவித்துள்ளது. ஆடுகளத்தைத் தயார் செய்வதற்கு 30 லட்சம் ரூபாவும் மைதானத்தை செம்மைப்படுத்துவதற்கு 50 லட்சம் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. தவிர தேவையான மனித வள உதவியை இராணுவத்தினர் வழங்கியுள்ளனர்.
நிகழ்வுக்கு வந்திருந்த முன்னாள் தேசிய வீரர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் 'ஆட் -டோகிராப்' பெற்றுக்கொள்ளவும் சிறுவர்கள் முண்டியடித்தனர்.

(உ-23)



## சிக்கலில் டோனி, ரெய்னா

இந்திய அணித் தலைவர் டோனி, இவரது நண்பர் அருண் பாண்டே மற்றும் ரெய்னாவிடம், ஐ.பி.எல். சூதாட்டம் குறித்து முத்கல் தலைமையிலான குழு விசாரணை நடத்தியது.
இந்த வாரக் கடைசிக்குள் முத்கல் குழு இறுதி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இதனால், விசாரணை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.
இதன் முதற்கட்ட அறிக்கையில் இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் சீனிவாசன் மற்றும் இந்திய அணித் தலைவர் டோனி, ரெய்னா உட்பட 13 பேர் பெயர்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.
கடந்த 11ஆம் திகதி, மேற்கிந்திய அணிக்கு எதிராக இரண்டாவது ஒருநாள் போட்டியில் பங்கேற்க, இந்திய அணி டில்லி சென்றது.
அப்போது, விசாரணைக்கு முன்னிலையாகுமாறு, ஐ.பி.எல். தொடரில் சென்னை அணித் தலைவராக இருக்கும் டோனி, ரெய்னா மற்றும் இரு வீரர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது.
இதைத் தொடர்ந்து டோனியிடம் மட்டும் நான்கு மணி நேரம் விசாரணை நடந்ததாம். அடுத்து ரெய்னா மூன்று மணி நேரம் விசாரிக்கப்பட்டுள்ளார்.
இதனிடையே, முன்னாள் நடிகர் மற்றும் விளையாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஆஷிம் கேதர் பால், டோனியின் நண்பர் மற்றும் மேலாளராக உள்ள அருண் பாண்டேயிடமும் சமீபத்தில் விசாரணை நடந்துள்ளது. (த)

## டெஸ்ட் தர வரிசையில் சங்ககார முன்னிலை



சர்வதேச டெஸ்ட் போட்டியின் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் குமார் சங்ககார தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார்.
ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இரண்டு இன்னிங்ஸ்களிலும் சதம் அடித்த பாகிஸ்தான் வீரர் யூனிஸ்கான் 4 இடங்கள் முன்னேறி 7 ஆவது இடம் பிடித்துள்ளார்.
ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்ணர் 4ஆவது இடத்துக்கு முதல் முறையாக முன்னேறியுள்ளார்.
இந்நிலையில் டிவில்லியர்ஸ், சந்தர்போல், வோர்ணர், மத்தியூஸ், ஹசிம் அம்லா, யூனிஸ்கான், ரொஸ் டெய்லர், ஜோ ரூட், மைக்கல் கிளார்க் ஆகியோர் முதல் 10 இடத்தைப் பிடித்துள்ளனர்.
பந்து வீச்சாளர்கள் தரவரிசையில், டேல் ஸ்ரெய்ன், ரியான் ஹரிஸ், ரங்கனா ஹேரத், மிட்செல் ஜோன்சன், ஜேம்ஸ் அண்டர்சன், வெர்னன் பிலாண்டர், ரிம் சௌத்தி, பிராட், கிமார் ரோச், சயீட் அஜ்மல் ஆகியோர் முதல் 10 இடங்களில் உள்ளனர்.
அதேபோல் சகலதுறை வீரர்கள் தரவரிசையில் இந்திய அணியின் சகலதுறை வீரர் அஸ்வின் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். மிட்செல் ஜோன்சன், ஸ்டூவர்ட் பிரட்டை பின்னுக்குத் தள்ளி 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். (த)



## இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியில் பாலியல் லஞ்சம்

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியில் வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டதில் பாலியல் லஞ்சம் நடைபெற்றதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
இந்தக் குற்றச்சாட்டை அடுத்து இதை விசாரிக்க இலங்கைக் கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது.
இதற்காகத் தலைமைத் தெரிவுக் குழுத் தலைவர் சனத் ஜெயசூரியா, செயலாளர் நிஷாந்த ரணதுங்க, உதவிச் செயலாளர் கிரந்தா பெரேரா, மோகன் டி சில்வா ஆகியோர் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழு பாலியல் லஞ்சம் தொடர்பாக ஆதாரங்களைத் திரட்டுவற்கான விசாரணையை நாளை தொடங்கவுள்ளது. (த)

## பின் தள்ளப்பட்ட கோஹ்லி

சர்வதேச ஒருநாள் துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் கோஹ்லி பின்னடைவைச் சந்தித்துள்ளார்.
சர்வதேச ஒரு நாள் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐ.சி.சி., வெளியிட்டது. தென்னாபிரிக்கா- நியூஸிலாந்து அணிகள் இடையிலான ஒருநாள் போட்டி தொடர் முடிந்ததை தொடர்ந்து இந்த தரவரிசைப்பட்டியல் வெளியிடப்பட்டு இருக்கிறது.
இதன்படி துடுப்பாட்ட தரவரிசையில் தென்னாபிரிக்க வீரர் டிவில்லியர்ஸ் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.
தென்னாபிரிக்க வீரர் ஹசிம் அம்லா ஒரு இடம் முன்னேறி 2ஆவது இடத்தை பிடித்து இருக்கிறார்.
இந்திய வீரர் விராட் கோஹ்லி ஒரு இடம் பின் தங்கி 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.
இந்திய அணித் தலைவர் டோனி 6ஆவது இடத்தில் தொடருகிறார். ஷிகர் தவான் இரு இடம் சரிந்து 9வது இடம் பெற்றுள்ளார்.
பந்து வீச்சாளருக்கான தரவரிசையில் முதலிடத்தில் பாகிஸ்தானின் சயீத் அஜ்மல் உள்ளார். மேற்கிந்திய தீவுகளின் நரைன், தென் ஆபிரிக்காவின் ஸ்டைன் 2,3வது இடத்தை வகிக்கின்றனர்.
இந்தியாவின் சுழல் வீரர் ஜடேஜா, வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர் முறையே 6,7ஆவது இடத்தில் நீடிக்கின்றனர். (த)



## காதலியை போட்டுத் தாக்கிய மரடோனா



ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணியின் முன்னாள் ஜாம்பவான் மரடோனா, தனது காதலி ரோசியோ ஒலிவாவை சரமாரியாக அடிக்கும் காணொலி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
இந்தக் காணொலியில் ஒரு சோபாவில் மரடோனா அமர்ந்திருக்கிறார். அவருக்கு எதிர் புறச் சோபாவில் ரோசியோ உட்கார்ந்திருக்கிறார்.
இவரது கையில் கமெரா செல்போன் உள்ளது. அவர் அதில் எதையோ பார்த்துக் கொண்டிருக்கிறார். அப்போது திடீரென எழுந்து சென்ற மரடோனா, தனது காதலியை நோக்கிச் சென்று அவரை அடிக்கிறார்.
மேலும், தனது காதலியைப் பார்த்து ஸ்பெயின் மொழியில் உன் போனையே பார்த்துக் கொண்டிரு, உன் போனையே பார்த்துக் கொண்டிரு என்று கோபமாகவும் மரடோனா சத்தம் போடுகிறார்.
மரடோனாவின் செயலால் அதிர்ச்சி அடைந்த ரோசியோ, உனக்கு என்னாச்சு, பைத்தியம் பிடித்து விட்டதா, அடிக்காதே நிறுத்து.. நிறுத்து என்று அலறுகிறார்.
இந்தக் காட்சியை ரோசியோ வீடியோவில் படமாக்கியுள்ளார்.
ஒக்ரோபர் மாதத் தொடக்கத்தில் டுபாயிலிருந்து பியூஸ் அயர்ஸ் திரும்பியிருந்தார் மரடோனா. அந்தச் சமயத்தில் தான் அவரது வீட்டில் வைத்து இந்தத் தாக்குதல் நடந்திருக்கலாம் என்று தெரிகிறது.
இந்தக் காணொலி காட்சி இப்போது தான் முதன்முறையாக வெளியாகியுள்ளது. இதை தென் அமெரிக்காவின் ரி.வி ஒன்று ஒளிபரப்பியுள்ளது.
இதுபற்றி மரடோனா கூறுகையில்; நான் ரோசியோ வைத்திருந்த போனைத் தட்டித்தான் விட்டேன். என் பிள்ளைகள் மீது சத்தியமாகக் கூறுகிறேன், நான் ஒரு பெண்ணை அடிக்கும் அளவுக்கு மோசமானவன் இல்லை என்று கூறியுள்ளார். தற்போது ரோசியோவை விட்டு மரடோனா பிரிந்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



## இந்தியாவுக்கு பின்னடைவு பாகிஸ்தான் முன்னேற்றம்

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசையில் மிஸ்பா உல் ஹக் தலைமையிலான பாகிஸ்தான் அணி, இந்தியாவை 6 ஆவது இடத்துக்குப் பின்னுக்குத் தள்ளி, 5 ஆவது இடத்துக்கு முன்னேறியது.
டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை கடந்த திங்கட்கிழமை, டுபாயில் வெளியிட்டது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. இதன் மூலம் பாகிஸ்தான் 5 ஆவது இடத்துக்கு முன்னேறியது. டுபாய் டெஸ்டில் பாகிஸ்தான் வெற்றி பெற்றதன் மூலம், ஆஸ்திரேலியா முதலிடத்துக்கு முன்னேறுவது தடைப்பட்டது. தற்போது ஆஸ்திரேலியா 2 ஆவது இடத்தில் உள்ளது. ஒருவேளை, பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என முழுமையாக ஆஸ்திரேலியா வென்றிருந்தால், முதலிடத்தில் உள்ள தென்னாபிரிக்காவைப் பின்னுக்குத் தள்ளி முதலிடத்துக்கு முன்னேறி இருக்கும். அபுதாபியில் நடைபெறவுள்ள 2ஆவது டெஸ்டில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றால், 2 ஆவது இடத்தில் நீடிக்கும். ஒருவேளை பாகிஸ்தான் வெற்றி பெற்று 2-0 என தொடரை வென்றால், இங்கிலாந்து, இலங்கையைப் பின்னுக்குத் தள்ளி 3 ஆவது இடத்துக்கு முன்னேற வாய்ப்புள்ளது. பாகிஸ்தான் தோல்வி அடைந்தால் தொடர்ந்து 5 ஆவது இடத்திலேயே நீடிக்கும். (த)

# முரளிக் கிண்ணத்துக்காக இன்று மோதும் அணிகள்

முரளி நல்லுறவு வெற்றிக்கிண்ணத்திற்கான 19 வயதுப்பிரிவு ஆண்கள் 23 வயதுப்பிரிவு பெண்களுக்கான ரி-20 கிரிக்கெட் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் காலை 9.50 மணிக்கு கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து மெறட்டுவ பிறின்ஸ் ஒவ் வேல்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. மதியம் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இணைந்த அணியை எதிர்த்து சாவதேச பாடசாலை இணைந்த அணி மோதவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் காலை 9.50 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் காலி றிஸ்மோன் கல்லூரி அணியை எதிர்த்து கறன்தெனிய மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது. மதியம் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு இணைந்த அணியை எதிர்த்து பண்டாரவளை சென்.தோமஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.50 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொழும்பு சென். பீற்றஸ் கல்லூரி அணியை எதிர்த்து சினி கம இணைந்த அணி மோத வுள்ளது.

மதியம் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு இணைந்த பாடசாலை அணியை எதிர்த்து மொனறாகலை, பதுளை இணைந்த பாடசாலை அணி மோதவுள்ளது.

ஒட்டுசுட்டான் மகா வித்தியலாய மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் ரத்கம்தேவபதிராஜா கல்லூரி அணியை எதிர்த்து நீர் கொழும்பு மரியஸ்லெரா கல்லூரி அணி மோதவுள்ளது. மாங்குளம் மகா வித்தியலாய மைதானத்தில் இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலன்னறுவை மகளிர் அணியை எதிர்த்து வடக்கு கிழக்கு இணைந்த மகளிர் அணி மோதவுள்ளது. 11.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநாகலை வை.சி.சி. மகளிர் அணியை எதிர்த்து மாத்தளை மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. மதியம் 2.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்தி மகளிர் ஏ அணியை எதிர்த்து பதுளை மக ளிர் அணி மோதவுள்ளது. (உ-23)

# வடக்கு லீக் உதைபந்து மிக விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம். ஒக். 30

வட மாகாணத்தில் உள்ள உதைபந்தாட்ட லீக்குகளுக்கு இடையே சிறப்புப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

லீக் மட்டத்தில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. புள்ளிகள் அடிப்படையில் அதில் முதலிடம் பெறும் எட்டு அணிகள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படவுள்ளன. எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் உரிய கழகங்கள் இந்தப் போட்டித் தொடருக்கு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வடமராட்சி வலிகாமம், தீவகம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய லீக்குகள் உள்ளன.

(உ-86)

## தொடர்ச்சிகள்

### வடமாகாண

காரங்களையும் நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்துக் கொண்டு, தந்ததையும் பிடுங்கிக் கொண்டிருக்கின்றது. இது தான் வடக்கின் நிலைமை - யாழ்.மாவட்டத் துக்கு வருகை தந்துள்ள ஆஸ்திரேலிய அரசின் தென் ஆசியாவுக்கான ஆலோசகர் மைக் ஹில்மனிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று இவ்வாறு எடுத்துரைத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, சி.சிறீதரன் மற்றும் மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் ஆஸ்திரேலியக் குழுவினரைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா 'உதயனுக்குத்' தெரிவிக்கையில்,

"எமது மக்களின் உடனடிப் பிரச்சினைகளை சுட்டிக்காட்டினோம். இராணுவத்தினரால் எமது மக்களின் நிலங்கள் கபளீகரம் செய்யப்பட்டுள் ளது. அந்த நிலங்களில் குடி கொண்டுள்ள இராணுவத்தி னர் விவசாயம் மேற்கொள் கின்றனர். எமது மக்களின் நிலங்களைப் பறித்து வைத்துள்ளமை மாத்திரம் அல்லா மல், எமது மக்களின் வாழ் வாதாரத்திலும் கைவைக்கின்றனர்.

வடக்கு மாகாண சபையை ஒரு விசேட மாகாண சபையாக இந்த அரசு கருதவில்லை. போரால் பாதிக்கப்பட்டு மிகவும் பின்தங்கி யுள்ள நிலையிலுள்ள எமது மாகாண சபைக்கு விசேடமாக அரசு எதனையும் வழங்கவில்லை. வடக்கு மக்களின் தீர்ப்புக்கும் இந்த அரசு மதிப்பளிக்கவில்லை. அழிந்து சின்னாபின்னமாகப் போன எமது தேசத்தை கட்டியெழுப்ப உதவிகள் செய்யவில்லை.

சர்வதேச நாடுகள் எமக்கு உதவி செய்யும் என்று தெரிவித்த சூழ்நிலையில் அதனைத் தடுக்கும் வகையில் கொழும்பு அரசு செயற்படுகின்றது. மக்களுக்கும், மாகாண சபைக்கும் இடையில் இடைவெளியை ஏற்படுத்தி, மாகாண சபையைப் பலவீனப் படுத் தும் நடவடிக்கைகளில் கொழும்பு அரசு ஈடுபட்டு வருகின்றது என்பதைச் சுட்டிக்காட்டினோம்.

எமது அரசியல் தீர்வு தொடர்பிலும் பேசினோம். 2011 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும் எங்களுக்கும் இடையே பேச்சு இடம்பெற்றது. அந்தப் பேச்சின் போது, தமிழ் மக் களின் தீர்வுத் திட்டத்தை நாம் முன்வைத்தோம். அதற்குப் பதிலளிக்காத அரசு, பேச்சிலிருந்து தானாகவே விலகிக் கொண்டது.

மேலும் எதிர்வரும் வருடத்தில் கொழும்புத் திட்டத்தினை ஆஸ்திரேலிய அரசே தலைமை தாங்கி நடத்தப் போகின்றது. அந்தத் திட்டத்தின் போது எமது வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு பெருமளவு உதவிகள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் திட்டங்களை வடக்கு மாகாணசபையுடன்இணைந்தே இனங்காண வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம்"- என்றுஅவர் தெரிவித்தார். (ற-5)

### 400 பேர்

உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதி கரிக்கலாம் என்று அஞ்சப்படும் நிலையில் மலையகம் சோக மயமாகியுள்ளது.

நேற்றுகாலை திடீரென ஏற்பட்ட மண்சரிவால், பெரியோர் முதல் சிறி யோர்வரை செய்வதறியாது பெரும் அல்லோலகல்லோலப்பட்டுள்ளனர். தாய், தந்தை, பிள்ளைகள், சகோதரர்கள் என தமது உறவினர்களை இழந்தவர்கள் கதறியமுதனர். அத்துடன், தமது உறவினர்கள் தொடர்பில் தகவல் இல்லாததால், பெரும்பாலானோர் பேரச்சம டைந்துள்ளனர். இந்த திடீர் மண் சரிவு இடரால் மலையகமே சோகத்தில் மூழ்கியுள்ளது.

**திடீரென சரிந்துவந்த மலைப்பகுதி**

மீரியபெத்தையில் நேற்றுக் காலை 7 மணியளவில் இந்த மண்சரிவு இடம்பெற்றுள்ளது. மீரியபெத்தையில் ஆற்று பள்ளத்தாக்கை அண்மித்த 7, 8, 9, 10, 11, 12 ஆம் இலக்க லயன் குடியிருப்புக்களே மண்ணில் புதையுண்டுள்ளன. அத்துடன், கோயில் ஒன்றும் புதையுண்டுள்ளது.

இரண்டு பால் சேகரிக்கும் நிலையங்கள் , வாகனங்கள் திருத்தும் இடம், இரண்டு கடைகள், மருத்துவமாது குடும்பம் தங்கியிருந்த விடுதி, சாரதியின் வீடு, சிகிச்சை நிலையம் என்பனவும் மண்ணில் புதையுண்டுள்ளன. இவற்றில் தங்கியிருந்தவர்களும் நிலத்தில் புதையுண்டுள்ளனர். பாடசாலை செல்லும் மாணவர்களுள் பெரும்பாலானோர் மண்சரிவு ஏற்படுவதற்கு முன்னரே பூநாகலை, கொஸ்லந்தை பாடசாலைகளுக்குச் சென்றுள்ளனர் இதனால், அவர்கள் இந்த அனர்த்தத்திலிருந்து தப்பியுள்ளனர் என எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இதேவேளை, தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஏனைய பணியிடங்களுக்கு செல்வோர் வேலைக்காக தயாராகிக் கொண்டிருக்கும்போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. இதனால், மேற்படித் தரப்பினர் அனைவரும் மண்ணில் புதையுண்டுள்ளனர். அத்துடன், இந்த 140 குடும்பங்களிலுமுள்ள பெரியவர் முதல் சிறியவர் என அனை வரும் மண்ணில் புதையுண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

**மக்கள் அல்லோலகல்லோலம்**

காலை வேளையில் திடீரென ஏற்பட்ட இந்த மண்சரிவால், மக்கள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டுள்ளனர். பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் தொழிலுக்குச் செல்வோர் என அனைவரும் அச்சமடைந்து உயிரைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அங்குமிங்கும் ஓடித் திரிந்துள்ளனர். அத்துடன், தாய்மார்கள் தமது கைக் குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு உயிர்பிழைப்பதற்காக ஓடியதாகவும் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர் என எமது செய்தியாளர் தெரிவித்தார்.

மேலும், பலர் மண்ணில் புதையுண்டு, பெரும் கஷ்டப்பட்டு மீண்டு வந்துள்ளனர். அத்துடன், மண்ணில் புதையுண்ட பலரை துரித கதியில் மீட்புப் பணியில் ஈடுபட்ட தரப்பினர் காயங்களுடன் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

**மீட்புப் பணியில் முப்படையினர்**

மண்சரிவில் சிக்குண்டுள்ளவர்களை மீட்கும் பணியில் இராணுவம், பொலிஸ், விமானப் படை என முப்படையினரும் விசேட ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். மேலும், பதுளை, பண்டாரவளை உள்ளிட்ட பிரதான வைத்தியசாலைகளின் வைத்தியர்கள், தாதியர், மருத்துவ குழு மற்றும் நோய்காவு வண்டிகளும் அப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் சரத் லால் குமார தெரிவித்தார். (ற-சி)

### யாழ். பல்கலை

தோன்றியுள்ளது என்று தெரிவிக் கப்படுகின்றது.

பல்கலைக் கழகச் சூழலில் இராணுவத்தினரின் கண்காணிப்புத் தொடர்பில் கடந்த மே மாதம் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், இராணுவக் கட்டளைத் தளபதி ஆகியோருக்கும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தோருக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று நடந்தது. அதில் பல்கலைக் கழகச் சூழலில் இராணுவத்தினர் நிறுத்தப்படமாட்டார்கள் என்று தமக்குத் தெரிவிக்கப்பட்டது என்று பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தோர் கூறியிருந்தனர்.

அவ்வாறிருக்கையில், நேற்று முன்தினம் தொடக்கம் பல்கலைக் கழகத்தின் பிரதான நுழைவுவாயில் பக்கமாகவுள்ள சிவன்கோயில் வாசலுக்கு முன்பாகவும், மருத்துவ பீடம் முன்பாகவும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

எந்தவிதக் காரணமும் இல்லாது இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருப்பது தமக்கு அச்ச உணர்வை ஏற்படுத்துகின்றது என்று மாணவர்கள் கூறுகின்றனர். நவம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் வேண்டும் என்றே ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் இராணுவத்தினர் இவ்வாறு செயற்படுகின்றனரா என்றும் அவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

அதேவேளை, பல்கலைக் கழகச் சூழலில் இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டிருப்பதற்கு பல்கலை ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த நடவடிக்கை மாணவர்களின் சுயமான கற்றல் செயற்பாடுகளுக்குப் பாதகமான செயல் என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ற-4.21)

### இலங்கை

இலங்கை தொடர்பான அறிக்கையில் சுட்டிக்காட்டப்படவுள்ளது. கடுமையான போர் இடம்பெற்றதனை ஒப்புக்கொள்கின்ற போதிலும் தொடர்ந்தும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடிக்கப்படுகின்றமை வருத்தமளிக்கின்றது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழுவின் தலைவர் நைஜல் ரொட்லி தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை தொடர்பில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் மனித உரிமைக்குழு செயற்படுகின்றது என்று தெரிவித்த இலங்கை அரசின் குற்றச்சாட்டுக்களை யும், நைஜல் மறுத்துள்ளார். ற-5)

### சட்டத்தின்

வந்திருந்த ஐ.நா.பயங்கரவாத எதிர்ப்புக் குழு ஆராய்ந்துள் ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை களை மேற்கொள்ளும் போது சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகளுக்கு முக்கியத் துவமளிக்கப் பட வேண்டும். இவற்றுக்கான முழுமையான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கைக்கு வலியுறுத்தும் நோக்கில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் வேண்டுகோளுக்கிணங்க பயங்கரவாத எதிர்ப்புக் குழுவினர் இலங்கைக்கு மூன்று நாள் பயணமாக நேற்று முன்தினம் வருகை தந்தி ருந்தனர்.

இந்தக் குழுவினர் நேற்றுக் காலை யாழ்.மாவட்டத்திற்கு வருகை தந்தனர். வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்தித்த குழுவினர், அதன் பின்னர் யாழ்.மாவட்டச் செயலகத்தில் வைத்து, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன் ஆகியோரைச் சந்தித்தனர். வடக்கின் எஞ்சிய மாவட்டங்களான மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு சிங்களவர்கள் அரச அதிபராக உள்ளனர். அவர்கள் இதில் பங்கெடுக்கவில்லை.

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் பல்லூடக வைப்பினூடாக விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. போரின் பின்னரான் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தனர்.

போரின் பின்னர் வடக்கில் சிவில் நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகின்றது?, பொலிஸ் நிர்வாகம் எவ்வாறு நடக்கின்றது?, குற்றம் புரிந்தவர்கள் நீதிமன்ற நடவடிக்கையினூடாக தண்டிக்கப்படுகின்றார்களா? தமிழ் மக்கள் தமது உரிமைகளை எந்தளவிற்கு அனுபவிக்கின்றார்கள்?, மக்கள் சுதந்திரமாக தமது செயற்பாட்டினை முன்னெடுக்கின்றனரா? என்பது தொடர்பில் விரிவாகக் கேட்டறிந்து கொண்டுள்ளனர். எனினும் இதற்கு அரச அதிபர்களால் வழங்கப்பட்ட பதில்கள் தொடர்பில் எதுவும் [illegible] தெரிவிக்கப்படவில்லை. (ற-5)


## மரண அறிவித்தல்



### சின்னையா-சுப்பிரமணியம்

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், 773, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா-சுப்பிரமணியம் 28.10.2014 செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-செல்லாச்சி தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், பத்மாவதி (ஜேர்மனி), மனோகரன் (நோர்வே), மவுலேசன் (லண்டன்), சுமதி (ஜேர்மனி), கோமளா (லண்டன்), கோகிலா (ஜேர்மனி), கோசலா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமாரானந்தம் (ஜேர்மனி), சங்குபதி (நோர்வே), மாலினி (லண்டன்), தியாகராசா (ஜேர்மனி), சுவர்ணசிங்கம் (லண்டன்), தங்கேஸ்வரன் (ஜேர்மனி), சிவரூபன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சின்னத்தங்கம், பூலோகம், சரஸ்வதி மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர் கந்தசாமி (மட்டக்களப்பு), நடராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராசபூபதி (கொழும்பு), கந்தராசா (ஜேர்மனி), செல்வ ரட்ணம் (வவுனியா), திலகவதி (கொக்குவில்), காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் வசந்தாதேவி (ஆசிரியை-கொழும்பு), மீனாம்பிகை (ஆசிரியை-கொழும்பு), விஜயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிரோசா, நிதுபா, நிதுசன், மகிந்தன், நொயின்சன், மோனிசா, பவிசா, யபிசா, கீர்த்தனா, கீர்த்திகன், ரஜிக்கா, கேனுத், சஞ்சு, லக்சனா, கபிலன், நவிந்தன், தர்னிஸ், தனுஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2014) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மம்மில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 773, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.**

T.P: 024 324 6721, 077 0315 245 (53689) (10)

தகவல்: **மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

# விவசாய பிரதிநிதிகளுக்கு பயிற்சிப் பட்டறை

தேசிய உரச் செயலகத்தினால் மட்டக்களப்பு மாவட்ட கமநல அமைப்புக்களின் விவசாயப் பிரதிநிதிகளுக்கான பயிற்சிப் பட்டறை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வந்தாறுமூலை கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி பட்டறையில், சேதனப் பசளையின் முக்கியத்துவம், வினைத்திறன் மிக்க இரசாயனப் பசளையின் பாவனை, பசளைப் பிரயோகம் செய்ய வேண்டிய காலம் உள்ளிட்ட விவசாயம் சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விழிப்புணர்வூட்டல்; இடம்பெற்றதாக விவசாய அமைச்சின் தேசிய உரச் செயலக மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.எல்.எம். சிறாஜுன் தெரிவித்தார். (த-10)


## மணமகள் தேவை

யாழ்.இந்து லண்டன் குடியுரிமையுடைய 1982இல் பிறந்த, அத்த நட்சத்திரம், லக்கின சூரியன் 7இல் செவ்வாய் 29 பாவம் உள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: 077 266 3902 (53678) (7.6.3)

## நாய்க்குட்டி விற்பனை

45 நாள்கள் நிரம்பிய Black, Coffee brown நிற பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (53676)

தொடர்பு : 077 883 6525 (யாழ்ப்பாணம்) (7.6.3)


## கண்ணீர் அஞ்சலி



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

**சிவானந்தராஜா - விஜயராணி**

தம்பதியரின் செல்வப்புதல்வி

### கார்த்திகா

27.10.2014 திங்கட்கிழமை கனடா (ரொறன்ரோ) வில் காலமானார்.


அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்: (53681) (12.3.6)

| | |
|---|---|
| இரத்தினம் குடும்பம் | (நீர்வேலி) |
| செல்லத்துரை குடும்பம் | (கோப்பாய்) |
| அப்புத்துரை குடும்பம் | (கைதடி) |
| சுப்பிரமணியம் குடும்பம் | (அரியாலை) |
| யோகரத்தினம் + சரஸ்வதி குடும்பம் | (கோப்பாய்) |
| கனகலிங்கம் + லட்சுமி குடும்பம் | (கோப்பாய்) |
| மகேஸ்வரி + சத்தியவாடிவேல் குடும்பம் | (கோப்பாய்) |

## மரண அறிவித்தல்

### புஷ்பமலர் சோதிமுத்து



உடுவில், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புஷ்பமலர் சோதிமுத்து காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செலஸ்டின்-தங்கம்மா தம்பதியரின் புதல்வியும், சோதிமுத்துவின் மனைவியும், பாக்கியரட்ணம், மகிழ்மலர், சுவந்தமலர், பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஞானரட்ணம் மற்றும் அரியரட்ணம், முத்துத்தம்பி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற ஹேமச்சந்திரன் மற்றும் ஜீவதாரணி ஆகியோரின் சிறிய தாயும், காலஞ்சென்ற தேவதாஸன் மற்றும் ரஞ்சா ஆகியோரின் மாமியாரும், ஹரேஷ் தேவதாஸன், மேரி தேவதாஸன், கிருஷ்ணச்சந்திரன் ஹேமச்சந்திரன், பிரகாஷ் ஹேமச்சந்திரன் ஆகியோரின் பேர்த்தியும் ஜிண்டா இந்திராவின் மாமியாரும், யோசுவா ஹரிஸ், லில்லி ரோஷ் ஹரிஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 5ஆம் ஒழுங்கை, மானிப்பாய் றோட் உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, 01.11.2014 சனிக்கிழமை அடக்கத்துக்காக பண்டத்தரிப்பு கிறிஸ்தவ சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் ஒழுங்கை,
மானிப்பாய் றோட்,
உடுவில்.

தகவல்: ஜீவதாரணி தேவதாஸன் ,
M.R. இராஜேந்திரம்
071 433 1362, 011 247 2711
திருக்குமரன் 077 498 5643

(இ/17269) (7.6.3)

# சிங்கள கடும்போக்கு அரசியலினால் ஆபத்து

## சொல்கிறார் பஷீர் சேகுதாவூத்

வந்தாறுமூலை, ஒக். 30

இலங்கையின் அரசியலிலே சிங்கள கடும்போக்குவாத அரசியல் என்பது மற்றவர்களின் வெறுப்பின் மீது கட்டி எழுப்பப்படுகின்ற ஒரு உறுதியான சிங்கள பௌத்த தேசியவாதமாக வளர்ச்சியடைந்திருக்கின்ற காலகட்டம் இது என உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

வந்தாறுமூலை விஷ்ணு வித்தியாலயத்தில் இந்து இளைஞர் மன்ற அநெறிப் பாடசாலை நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சாதனையாளர் கௌரவிப்புநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில்அறத்தை மறுத்து வந்த அரசியலே ஆட்சி செய்திருக்கின்றது. அறநெறிக்குள்ளும்புகுந்து அரசியல்செய்ய வேண்டியிருக்கின்றது. இது இந்தநாட்டுக்கோ அல்லது நாட்டு மக்களுக்கோ ஒருபோதும் நன்மை தரப்போவதில்லை. இதனைத் தடுப்பதற்கான முயற்சிகளில் இன, மத பேதம் பாராது நாம் எல்லோரும் இப்பொழுதே நடவடிக்கையில் இறங்க வேண்டும். அடுத்த பரம்பரையை அழுக்கு அரசியல் சகதியில் விளையாட விட்டு ஆபத்துக்களில் தள்ளுகின்ற நிலைமையை நாம் தடுத்தாக வேண்டும். சரியான உத்தி, புதிய அரசியல் அணுகுமுறைகள், தேசிய நல்லிணக்கம் என்பவற்றை நோக்கிய முற்போக்கு சக்திகளை அணிதிரட்டிய பாதையில் நாம் பயணிக்க வேண்டும்.

இன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதிமன்றத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான தடையை நீக்குவதற்கான தீர்ப்புவெளிவந்ததன் பின்பு, சிறுபான்மை மக்களுக்கு நாட்டின் ஜனாதிபதியை தீர்மானிக்கிற பலம் இருக்கிறதா அல்லது மீண்டும் சிங்களக் கடும்போக்குவாதத் தேசியவாதிகளிடம் அந்தப் பலம் சென்றுவிட்டதா என்று சிந்திக்கின்ற ஒரு காலமாக தற்போதைய காலகட்டம் உள்ளது. சிறுபான்மை இனங்கள் தான் தீர்மானிப்பவர்கள் என்று நாம் எண்ணிக்கொண்டிருந்த நிலைப்பாட்டிலும் மாற்றம் வரத் தொடங்கியிருக்கின்றது. சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து சிங்களவர்களே ஆட்சியின் தலைவர்களாக இருந்திருந்திருக்கின்றார்கள். ஆரம்பத்தில் ஆட்சி செய்தவர்கள் அரைக் கிறிஸ்தவர்களாகவும் அரை பௌத்தர்களாகவும் இருந்தவர்கள்தான் ஆட்சி செய்யக் கிடைத்தது. இப்பொழுது அதற்கு வாய்ப்பில்லை. தனி பௌத்தர்களாக இருந்தால்தான் ஆட்சி செய்யமுடியும் என்பது சமகாலத்தில் ஏற்பட்டிருக்கின்ற நிர்ப்பந்தம். - என்றார். (த-10)

# அஷ்ரப் ஞாபகார்த்த பூங்காவின் பெயர்ப் பலகை மீது தாக்குதல்

சாய்ந்தமருது, ஒக். 30

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகதலைவரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் 66ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமினால் சாய்ந்த மருதில் கடந்த வியாழக் கிழமை திறந்து வைக்கப்பட்ட தலைவர் அஷ்ரப் ஞாபகார்த்த பூங்காவின்பெயர் பலகை மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் பெயர்ப் பலகை சேதமடைந்துள்ளது. அத்துடன் பூனை ஒன்று அடித்துக்கொலைசெய்யப்பட்டு குறித்த பெயர்ப் பலகை அமைந்துள்ள பூங்காவின் பிரதான நுழைவாயிலில் போடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான தகவல் வெளியானதும்கல்முனைமாநகர சபைஉறுப்பினர்களான ஏ.ஏ.பஷீர், எம்.ஐ.எம். பிர்தௌஸ், மாநகர முதல்வரின் செயலாளர் ரீ.எல். எம்.பாரூக் உள்ளிட்டோர் ஸ்தலத்துக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்ததுடன் கல்முனைப் பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளனர். தற்போது பூங்கா திறந்து வைக்கப்பட்ட போதிலும் நிர்மாணப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணத் தொகுதிகள் உள்ளிட்ட இன்னும் சில நவீன வசதிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் பணிகள் அனைத்தும் நிறைவுற்றதும் எதிர்வரும் நவம்பர் மாத இறுதியிலேயே கல்முனை மாநகர சபையிடம் பூங்காவை ஒப்படைக்க திட்டமிட்டிருப்பதாகவும் அதன் நிர்மாண ஒப்பந்தகாரர் தெரிவித்துள்ளார். (த-10)

## மரண அறிவித்தல்



### தம்பு சுப்பிரமணியம்

(C.T.B. மணியம்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சுப்பிரமணியம் (C.T.B மணியம்) 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பு- சடைச்சி தம்பதியரின் மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், சாந்தி, ஜெயந்தி, வரதராஜா, ஜெயராஜா, பிரேமராஜா, சிவராஜா, ஆனந்தி நிசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜேந்திரன், ஜெயசங்கர், மங்களேஸ்வரி, கவிதா, வித்திரா, குமுதினி, சத்தியசீலன், தனேந்திரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.10.2014) வியாழக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

(53679) (10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
021 223 0839

## மரண அறிவித்தல்

### திருமதி கோகிலாம்பாள் (பகவதி) திருச்செல்வம்



யாழ். அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், இத்தாலி, சுவிஸ், அச்சுவேலி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கோகிலாம்பாள் திருச்செல்வம் 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா-சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையா- பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருச்செல்வத்தின் அன்பு மனைவியும், தில்லைவாசன் (ரூபன்-சுவிஸ்), திருவருளாம்பாள் (ரூபி-இத்தாலி), திருமகள் (யசி-சுவிஸ்), திருமகன் (சிங்கப்பூர்-சுவிஸ்), திருராஜா (குயின்தன்- கட்டார்), திருமுகுந்தன் (முகுந்தன்-இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும், பாலசிங்கம், அம்பாள் துணை, காலஞ்சென்றவர்களான பாலாம்பிகை, சிவன் செயல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான குபேந்திரன், சந்திரசேகரம் மற்றும் அகிலம், தனவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற விஜி, சந்திரரெட்ணம், காலஞ்சென்ற மதுரநாயகம், லதா, கஜந்தி ஆகியோரின் பாசமிகு மாமியும், மயூரன், மகுணன், மதுளன் மனோச்சி, தினோட், தினேஸ், திலக்சன், சபிராமி, வினோஜன், சியான், தருண், ரிதன், ஆரியன், ஆதுஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி பத்தமேனியில் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
விமானநிலைய வீதி, பத்தமேனி,
அச்சுவேலி.

(47912) (10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
071 5811 737

## அரச சேவை ஓய்வூதியர்கள் கூட்டம் இன்று

அரச சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் இறப்பு மானியத்தை உடன் வழங்குவது தொடர்பான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் ஜி.ஏ.ஜே.சில்வெஸ்டர் தலைமையில் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும். நீண்ட காலமாக வழங்கப்படாதிருக்கும் உதவித்தொகைகளை வழங்கவும் பிரிவுச் சங்கங்கள் இவ்வாறான கொடுப்பனவுகளை உடன்வழங்கக் கூடியதான செயற்பாடுகளை மேற்கொள்வதுமே இன்றைய கூட்டத்தின் நோக்கமாகும் என்று கூறப்பட்டுள்ளது. (த-7)

## இலங்கை அதிபர் சேவைக்கு புதிதாகப் பிரமாணக் குறிப்பு

அச்சுவேலி, ஒக். 30

நீண்டகாலமாக இழுபறியில் இருந்து வந்த இலங்கை அதிபர் சேவைக்கான புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு கடந்த புதன் கிழமை விசேட வர்த்தமானி மூலம் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

புதிய சேவைப் பிரமாணக்குறிப்பு 2008ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி முதல் நடை முறைக்கு வருகின்றது. 2011 ஜனவரியில் இருந்து சம்பள உயர்வு தொடர்பான நிலுவைகள் வழங்கப்படவுள்ளன. அதிபர் சேவை வகுப்பு தர நிலை மூன்றாகக் குறைக் கப்பட்டுள்ளது. பதவி உயர்வு ஏற்பாடுகள் டிசம்பர் 31 க்கு முன்னர் செய்து முடிக்கப்படும்.

இலங்கை அதிபர் சேவையின் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் தற்பொழுது நடைமுறையில் உள்ள அதிபர் சேவையின் வகுப்பு நிலை மூன்றாகக் குறைக்கப்படுகின்றது. (த-11)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆயத்தமாகியது ஐ.தே.க



கொழும்பு, ஒக். 30

அடுத்த ஆண்டு ஜனவரியில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆரவாரமாக ஆரம்பித்தது.

தனது தேர்தல் ஆயத்தப் பணிகளின் முதற்கட்டமாக, நாடளாவிய ரீதியில் தனது தேர்தல் பிரதிநிதிகளுக்கான முதலாவது கூட்டத்தினை கட்சித் தலைமை ஹைட் பார்க் மைதானத்தில் ஆரம்பித்தது.

தேர்தலுக்கு முன்பதாகக் கட்சியை ஒருமைப்படுத்தி ஒட்டுமொத்த பலத்தையும் ஒன்றுபடுத்தவேண்டியது மிகவும் அவசியமாகிறது. அந்த வகையில் நாடளாவிய ரீதியில் பணியாற்றும் எமது தேர்தல் பிரதிநிதிகளை கொழும்பில் ஒன்று திரட்டி எமது வேலைத்திட்டம் குறித்தும், அவர்கள் ஆற்ற வேண்டிய முக்கியபங்கு குறித்தும் விரிவாக விளக்க மளித்திருக்கிறோம், என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், அரசின் தேர்தல் மோசடிகள் குறித்தும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியிருப்பதுடன் அவற்றினை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்தும் விளக்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உப-தலைவர் ரவி கருணாநாயக்க, பொதுச் செயலாளர்திஸ்ஸ அத்த நாயக்க, கரு ஜயசூரிய, கபீர் காசிம், யோசப் மைக்கல் பெரேரா, ஹரின் பெர்ணாண்டோ மற்றும் லக்ஸ்மன் கிரியெல்ல போன்ற முன்னணித் தலைவர்கள் ஒரே மேடையில் ஒன்றாகத் தோன்றி கடந்த காலத்தில் கட்சித் தலைமைத்துவத்தில் ஏற்பட்டிருந்த பிணக்குகள் களையப்பட்டிருப்பது போன்ற ஒரு உணர்வினைத் தோற்றுவித் திருந்தனர்.

அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே களமிறங்குவார் எனக் கட்சி அறிவித்திருக்கின்ற போதிலும், ஏனைய எதிர்க் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமலேயே இந்த முடிவு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

போர் முடிவடைந்து சுமார் ஐந்தரை வருடங்களின் பின்னர்கூட தேர்தல்களத்தில் விடுதலைப் புலிகளை துரும்புச் சீட்டாகவே ஐ.தே.கவும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் பிரசாரங்களை யும், மறுப்புப் பிரசாரங்களையும் மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. (த)


## மரண அறிவித்தல்

### கந்தவனம் இரத்தினசபாபதி

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)



உச்சில், கரவெட்டி மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், பால்நிலா, மந்திரிமடம், வதிரி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி நேற்று (29.10.2014) புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம்-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கனகசபை, கனகம்மா ஆகியோரின் சகோதரரும், குணரட்ணத்தின் அன்புக் கணவரும், பாஸ்கரன், நாகலோஜினி, தவேஸ்வரன், பத்மலோஜினி, இராஜலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராணி, கோபாலகிருஷ்ணன், கவிதா, நந்தபவான் ஆகியோரின் அன்பு மாமனாரும், றிபேக்கா, பானுஷா, மிதுர்சன், வசீனா, சபீனா, சுதர்சனா, சந்தோஷ், வின்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2014) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பால்நிலா, மந்திரிமடம், வதிரி, கரவெட்டி.
077 6110919

தகவல்:
குடும்பத்தினர்.

(61985)(6.8.3)

2 மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

### வேலை ஆள்கள் தேவை

கொழும்பில் தங்கி நின்று பஸ் புக்கிங் செய் வதற்கு ஆள்கள் தேவை.

- ★ தங்குமிடவசதி உண்டு.
- ★ உணவு வசதி உண்டு.
- ★ லைசன்ஸ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 5736003

### வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு அளவான, நல்ல நிலையிலுள்ள வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. யாழ் நகரை அண்டிய பகுதியில் விரும்பத்தக்கது.

தொடர்பு: 078 2845123 / 077 389 5395



## தொடர்ச்சிகள்

### தோள்களில்

இன்றும்கூட, தமது பூர்வீக நிலபுலங்களுக்குத் திரும்ப முடியாமல் அகதி முகாம்களிலும், தற்காலிக கூடாரங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நெறி தவறிய இந்தப் போர் எமது மக்களுக்கு ஏற்படுத்திய இழப்புகள், அவலங்கள் தொடர்பில் இந்த அரசின் புரிதல்கள் தான் என்ன? இவை தொடர்பில் இந்த அரசு எதை விளங்கிக்கொண்டுள்ளது?

நெஞ்சை அழுத்தும், அபத்தமான – அருவருப்பான, போரின் எச்ச சொச்ச சாட்சியங்களாக, துயரக் காட்சிகளாக, இனியும் இழப்பதற்கு தம்மிடம் எதுவுமற்றவர்களாக எமது மக்கள் ஊழிக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். போரினால் உடல், உளம், பொருளாதார ரீதியாக மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள எமது மக்கள் மீது, இந்த அரசு கொண்டுள்ள கரிசனை தான் என்ன?

**விவசாயிகளின் பாதிப்பு**

வன்னி பெருநிலப்பரப்பில் எமது விவசாயிகள் தன்னிறைவு பொருளாதாரத்தோடு பெருவாழ்க்கை வாழ்ந்தவர்கள். வன்னி பிரதேச விவசாய விளைநிலங்களின் இன்றைய நிலைமை என்ன? விவசாயத்தை தமது ஜீவனோபாய தொழிலாக கொண்டுள்ள மக்களின் நிலைமை தான் என்ன? தத்தமது பூர்வீக நிலபுலங்களில் உழுது உண்டு பசியாறி உறங்கி களித்திருந்த எமது மக்களின் வாழ்தலுக்கான மூலங்களை பெயர்த்து பிய்த்தெறிந்து, செழுமை மிகுந்த விவசாய விளைநிலங்களை இராணுவ தேவைகளுக்காக ஆக்கிரமித்து, வறுமை, பசி, பட்டினிச் சாவுக்குள் சிக்க வைக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு இந்த வரவு - செலவுத் திட்டம், என்ன பரிகாரம் சொல்லுகிறது?

**நட்டஈடு எங்கே?**

இறுதிப் போரில் ஏற்படுத்தப்பட்ட இலட்சக்கணக்கான உயிர் இழப்புகளுக்கும், பில்லியன் கணக்கான சொத்தழிவுகளுக்கும் ஐந்தாண்டுகள் கடந்தும் நட்டஈடுகள் வழங்கப்படவில்லை. தமது வாழ்விடங்களிலிருந்து எமது மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பின்னர், மக்களுக்கு உரித்துடைய விவசாய உபகரணங்கள், மீன்பிடி உபகரணங்கள், ஆலை இயந்திரங்கள், பட்டறை இயந்திரங்கள், கனரக வாகனங்கள், பாரஊர்திகள், சிற்றூர்திகள் முழுமையாகவோ, அன்றி பகுதியாகவோ தென்னிலங்கைக்கு கடத்திக்கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. பெருந்தொகையான உழவு இயந்திரங்களும், உழவு மற்றும் பசு மாடுகளும் இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டன. ஆனால் அவற்றுக்குரிய இழப்பீட்டை வழங்குவதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்திலும் வழிவகை செய்யப்படவில்லை. நீதியைக்கொன்று, சமத்துவத்துக்கு சவக்குழி வெட்டி, தனி மனித உரிமைகள், சுயகௌரவ வாழ்வைப் புதைத்து, இராணுவ அடக்குமுறைகளுக்குள்ளும், முற்றுகைக்குள்ளும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு, இந்த வரவு செலவு திட்டம் இன்னுமொரு இடியாக தலையில் இறங்கியுள்ளது. இது எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட வஞ்சிப்பு வரவு-செலவுத் திட்டம் இதுவாகும். வன்மத்தின் உச்சகட்ட வரவு-செலவுத் திட்டம் இதுவாகும். இனக் குரோதத்துக்கு நல்ல எடுகோளாகும்.

**ஜனாதிபதி தேர்தலை நோக்காக கொண்டது**

தற்போது ஜனாதிபதி தேர்தலை நடத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுகின்றது. அதற்கு ஆதாரமாகவும் இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. உண்மையில் வாக்கு சுவீகரிப்பை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் தான் இது என்பது மறுப்பதற்கில்லை. எமது மக்களை ஏறி மிதித்த, ஏய்த்துப் பிழைத்த வரவு-செலவுத் திட்டமே இதுவாகும்.

சிங்கள பௌத்தர்கள் அல்லாத சமூகங்களை நசுக்கி, ஒடுக்கி அடக்கி ஆளும் அரசுகள் தான், இன்றுவரைக்கும் ஆட்சியில் இருந்து வந்துள்ளன. இனவாதத்தையும், வன்முறையையும் தோற்றுவித்து, அதனை ஊக்குவித்து, சர்வாதிகார ஆட்சியை நடத்திக்கொண்டிருப்பவர்கள், இப்போதும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக தான் இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். தேசிய இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வை காண்பதற்கான உரையாடல்களில் ஈடுபடுவதற்கான தத்தமது பொறுப்பைக்கூட மறுதலிப்பவர்கள் தான், இன்றைய ஆட்சியாளர்களாகவும் உள்ளனர்.

**ஆதிக்க அரசியல்**

தமிழ் மக்களின் இருப்புக்கான அடையாளம் சார்ந்த பிரச்சினைகளை, வாழ்வுரிமை விவகாரத்தைப் பயங்கரவாதமாகச் சித்திரித்து காட்டும் ஆதிக்க அரசியலை தான் காலம் காலமாக செய்துகொண்டிருக்கின்றது. இந்த ஆதிக்க அரசியலின் ஆணிவேர் தான், இந்த வரவு-செலவுத் திட்டத்திலும் மையமாக இழையோடியுள்ளது.

பிரித்தானியர் ஆட்சியில் இலங்கை இருந்தபோது, வீதி வசதிகள், போக்குவரத்து வசதிகள், மின்சார வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள் முழுமைப்படுத்தப்பட்டிருந்தன. அன்று இந்த சேவைகள், வசதிகள் எல்லாம் இருந்த போதிலும்கூட, அவர்களிடமிருந்து விடுதலையைக் கோரினீர்கள். இன்று நாம் அடக்கு முறை, ஒடுக்குமுறை எனும் அடிமைச் சகதிக்குள்ளிருந்து, ஆதிக்க அரசியலிருந்து விடுதலை கோரும்போது மட்டும், வீதி வசதிகள், போக்குவரத்து வசதிகள், மின்சார வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகளை காரணம் காட்டுவது எப்படி நியாயமாகும்?

**சுயாட்சிக்கான வாக்கெடுப்பு**

ஸ்கொட்லாந்து மக்களின் விடுதலை வேட்கைக்கான மனவிருப்பறியும், பொதுவாக்கெடுப்புக்குச் சந்தர்ப்பம் வழங்கிய ஜனநாயகத்தின் உச்ச மதிப்புத் தன்மையை வெளிப்படுத்திய பிரிட்டன் போன்ற நாடுகளை விமர்சிப்பதற்கு, இலங்கை அரசுக்கு எந்த யோக்கியதையும் கிடையாது. ஜனநாயகத்தின் மிகச் சிறந்த பண்புகளை மாசு மறுவற்று வெளிப்படுத்த இலங்கை அரசு அவர்களிடமிருந்து கற்றுத் தேறவேண்டியுள்ளது.

அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு ஈழத்தமிழர்களின் சுயாட்சி உரிமைக்கான பொதுசன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதே, உலகெல்லாம் பரந்து வாழும் தமிழ் மக்களின் ஒருமித்த வலுவான கோரிக்கையாகும்.

இலங்கை ஒற்றையாட்சி நாடாகவும், மத்தியப்படுத்தப்பட்ட அதிகாரத்தை உடையதாகவும், இருக்க வேண்டும் என்பதற்காக, சமஷ்டி அரசியல் பற்றிய பேச்சுக்குக்கூட, தவறான அர்த்தம் போதிக்கப்படுகின்றது - என்றார். (த-5)

### ஜனாதிபதித்

வழங்கும் நிகழ்வு சபையின் தவிசாளர் பா.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. நேற்றுப் புதன்கிழமை திருநெல்வேலி பழம்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது:-

இன்றையதினம் (நேற்று) இங்கே வருகை தந்த அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் நாங்கள் பேசியுள்ளோம். எமது நிலங்களைப் பறித்து எமது மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் குடியேற முடியாமல் உள்ள நிலையில் அந்த நிலங்களில் இராணுவத்தினரைக் குடியமர்த்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் எமது இனத்தின் அடையாளங்களை மாற்றி அதனை அழித்துவிட முனையும் ஒரு ஆட்சி இங்கே நடக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளோம். மந்திரிமனையைத் தொல்பொருள் திணைக்களத்திடம் கையளிக்கவேண்டும் என மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கோரியுள்ளார். நல்லூர் எமது தலைநகராக இருந்தது. இந்தப் பகுதியில் உள்ள தமிழ் மக்களது வரலாற்றுச் சின்னங்களை அழிக்கும் முயற்சிகளுக்கு எதிராக மாகாண சபை குரல் கொடுத்துள்ளது. எமது கோரிக்கைகள் எதற்குமே பதில் சொல்லாத ஜனாதிபதி இங்கே வருகைதந்தபோது எமது பெண்கள் அவருக்குப் பொட்டு வைத்தும் கைகளைப் பிடித்தும் வரவேற்றார்களாம். எதற்காக அவர்கள் இப்படி நடந்துகொண்டார்கள் என்பது தெரியவில்லை. வெளிநாடுகளில் உள்ள எம்மவர்கள் எந்த உணர்வோடு இருக்கிறார்களோ அந்த வகையில் எமது விடுதலையிலும் உரிமைகள் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். அந்த நாடுகளில் உள்ள எமது மூன்றாவது சந்ததியினர் எப்படி இருக்குமோ என்று நாம் ஆதங்கப்பட்டாலும் அவர்கள் எமது கலாசாரங்களைப் பேணுவதிலும் எமது மண் வாசனையுடனும் இருக்கிறார்கள்.

புலிகளை அழித்துவிட்டோம் என்று பேசிய ராஜபக்ஷவுக்கு இன்று ஜனாதிபதி தேர்தலில் வெல்வதற்காக விடுதலைப் புலிகள் தேவைப்படுகிறார்கள். அதனால்தான் புலிகள் பற்றிப் பேசி சிங்கள மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார். இதனை புத்திஜீவிகளும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் புரிந்துகொண்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களை விட பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அந்தப் பிரதேசத்தை வளர்ப்பதற்கான அதிகாரங்கள் கூடுதலாக உண்டு. நல்லூர் பிரதேச சபை நிர்வாகத்தை எமது கட்சியிடம் வழங்கிய இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிக்காக அவர்கள் சிறப்பான பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்- என்றார். (த-7)

### சாட்சிகள்

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முன்பாக சாட்சியமளித்த சில குடும்ப பெண்களும் மற்றும் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் பலரும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றமை குறித்தும் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் ஐ.நா. அதிகாரி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸிடம் கூறினார் எனவும் தெரியவருகின்றது.

### வைத்தியசாலை

இருந்தபோதும் உணவு வகைகள் மூடாமல் திறந்த நிலையில் வைத்து விற்பனை செய்யப்பட்டன. இதனையடுத்தே அவை சிற்றுண்டிச்சாலை நடத்துநரின் உதவியுடன் அழிக்கப்பட்டன.

நோயாளர் மற்றும் நோயாளர்களை வைத்தியசாலையில் தங்கி நின்று பார்வையிடுபவர்கள் மாத்திரமன்றி வைத்தியசாலையில் பணிபுரியும் பல பிரிவுகளையும் சேர்ந்த, மிகக்குறைந்த சம்பளம் பெறுபவர்கள் சிற்றுண்டிச்சாலையிலேயே தமது உணவை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)

### வீடுகள்

கிறது. இதன் மூலமாக பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என பசுப்பாலை நுகர வேண்டிய தேவையுடைய அனைவருக்கும் அது கிடைப்பது இலகுபடுத்தப்பட்டுள்ளது.

பாலைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் எமது நிறுவனத் தலைமையகத்துடன் தொடர்பு கொள்வதன் மூலமாக உடனடியாக உடன் பாலைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் செய்யப்படும். அரச, தனியார் அலுவலகம் சார்ந்த ரீதியில் பாலைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகளையும் வழங்கக் கூடியதாகவிருக்கும்.

இவ்வாறான பால் விநியோகிக்கும் பணியில் பகுதி நேரமாக ஈடுபட விரும்புபவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கவும் நிறுவனம் தயாராகவுள்ளது.

இந்தத் திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்புவர்கள் யாழ்கோ நிறுவன தலைமையகத்துடன் 0213212926 என்ற தொலைபேசி இலக்கம் வாயிலாக நிறுவனப் பொது முகாமையாளரைத் தொடர்புகொண்டு, தூய பசுப்பாலை வீட்டுவாசலில் பெற்றுக்கொள்ள முடியும்-என்றார். (த-4)

### வடக்கு

இதேவேளை, வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டங்களை விரைவில் உருவாக்குவதற்கு சட்ட ஆலோசகர் குழு அமைக்கப்படவேண்டும் என்று அமைச்சர் டெனீஸ்வரன் மீளவும் வலியுறுத்தினார். (த-5)

### சமுதாய

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கடன்களாகவும் அதன் வட்டியாகவும் திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய 60 பில்லியன் ரூபாவை, அரச பங்காக மாற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதனூடாக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை இலாபங்களை உறுதிப்படுத்திக் கொள்வதுடன், அதன் சொந்த நிதியிலேயே கருத்திட்டங்களைச் செய்ய முடியும்.

வீட்டுப் பாவனைக்கான குடிதண்ணீர், முதல் 25 அலகுகள் வரைக்குமான கட்டணத்தை 10 சதவீதத்தினால் குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

கடந்த வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுக்கு அமைய தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களமொன்று ஆரம்பிக்கப்பட்டது. சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு விசேட முக்கியத்துவம் வழங்கி இந்தத் திணைக்களத்தின் கீழ் சமுதாய நீர் வழங்கல் திட்டங்களைப் புனரமைப்பதற்கும் புதிய திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும், 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்று முன்மொழியப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### கொழும்பு

கணைப் பகுதியில் கல் வீச்சுக்கு உள்ளாகியது.

சம்பவத்தில் பஸ்ஸின் கண்ணாடிகள் உடைந்த போதிலும் பயணிகளுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை. அதன் பின்னர் மக்கள் பிறிதொரு பஸ்ஸில் ஏற்றப்பட்டுக் கொழும்பு நோக்கிப் பயணமாகினர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

### ராணுவ

பயனுள்ளதாக அமைந்திருந்தது என்று தெரிவித்த அவர், இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாட முடிந்தது என்றும் கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கான தனது பயணம் குறித்துக் கூறிய அவர், வடக்கில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது என்றார். ஆயினும் சில விடயங்களில் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் இலங்கை அரசிடம் கேட்டுக்கொண்டார்.

அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விடயத்தில் அரசு நல்ல முன்னேற்றத்தை வெளிப்படுத்தி வருகின்றது என்று தெரிவித்த அவர், வடக்கில் வாழும் மக்களின் நலன்புரி சேவைகள் தொடர்பிலும் இந்த அக்கறை காண்பிக்கப்பட வேண்டும் என்று தான் விரும்புகின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அபிவிருத்தியையும், செழிப்பையும் நோக்கமாகக் கொண்ட முயற்சிகளுக்கு, நிரந்தர ஒற்றுமையூடாக அமைதியை நிலைநாட்டுவது இன்றியமையாதது என்றும் அவர் வலியுறுத்தினார். அதுமாத்திரமன்றி வடக்கு மக்கள் தமது பிரதிநிதிகளாக தெரிவு செய்துள்ளவர்களதும், மக்களதும் அதிகாரங்களை வலிமைப் படுத்துகின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதும் அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பெரும் தடையாக இருக்கும், நடமாட்டங்களை கண்காணிக்கும் நடைமுறை முழுமையாக கைவிடப்பட்டு சுதந்திரமான நடமாட்டத் திற்கு இடமளிக்கப்பட வேண்டும் என்றும் சர்மா இலங்கை அரசை கேட்டுக்கொண்டதுடன், மக்களின் அன்றாட வாழ்க்கையில் தலையிடும் இராணுவத்தினரின் தலையீடுகளும் படிப்படியாக குறைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அது மாத்திரமன்றி தற்போது எழுந்துள்ள இந்த சூழலை வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்களும் சரிவர பயன்படுத்தி, வளங்களை முழுமையாக மக்களுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்ட சர்மா, இலங்கையிலுள்ள தேர்தல் ஆணையாளர் அலுவலகம் முழுமையான சுதந்திரத்துடன் செயற்படவில்லை. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலையும் பொதுநலவாய நாடுகள் அமைப்பு கண்காணிக்கும் என்று கூறினார்.

இலங்கையின் தேர்தல் ஆணையம் முழுச் சுதந்திரத்துடன் செயற்படாமை குறித்து பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கவனம் செலுத்தியுள்ளனர் என்றும், பொதுநலவாய நாடுகள் அமைப்பில் முழு உறுப்புரிமை கொண்ட நாடொன்று சுதந்திரமான தேர்தல் ஆணையகத்தை எவ்வாறு வழிநடத்துவது என்ற அனுபவங்களை நாம் இலங்கையுடன் பகிர்ந்து கொள்வோம் என்றும் அவர் தெரிவித்தார். (ற)

### போருக்கு

டப்பட்டது.

பாரிசவாத நோய்த் தடுப்பு தொடர்பான விழிப்பூட்டும் செய்தியாளர் சந்திப்பு நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது. அதன்போதே மருத்துவ நிபுணர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மன உளைச்சலால் ஏற்படும் நோய்களில் பாரிச வாதமும் ஒன்றாகும். மன உளைச்சல் காரணமாக இளைஞர்கள், குடும்பத் தலைவர்கள் எனப் பலரும் மதுப் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். அதன் காரணமாகவும் நோய்கள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. நேரமுகாமைத்துவம் தவறுதல், உடற் பயிற்சி செய்யாமை போன்றனவும் இந்த நோய் ஏற்படக் காரணமாக அமைகின்றன - என்று அவர்கள் தெரிவித்தனர்.

இந்த சந்திப்பில் யாழ்.மருத்துவ சங்கத் தலைவர் முரளி வல்லிபுரநாதன், சமுதாயத் துறை மருத்துவரும் செயலாளருமான ஆர்.சுரேந்திரகுமாரன், உபதலைவரும் மருத்துவ நிபுணருமான நளாயினி ஜெகதீசன், நரம்பியல் நிபுணரும் பத்திராதிபருமான திருமதி அஜந்தா கேசவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-4)

மரங்களை நடுவதற்கான மிகச் சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்.
- சீனப் பழமொழி.

## ஒரே ஜனாதிபதி வேண்டாம்; மக்கள் கூறுகின்றனர்

கொழும்பு, ஒக்.30
இலங்கையில் ஜனாதிபதி ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிக்க கூடாது என 44 வீதமான இலங்கையர்கள் கருதுவது ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. மாற்றுக்கொள்கை நிலையத்தின் சமூக குறிகாட்டி பிரிவு மேற்கொண்ட ஆய்வின்போதே இது தெரியவந்துள்ளது
70 வீதமான முஸ்லிம்களும், 59 வீதமான மலையக தமிழர்களும், 53 வீதமான தமிழர்களும், 37 வீதமான சிங்களவர்களும் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 2 தடவைகளாக அரச அமைப்பு கட்டுப்படுத்த வேண்டும் என விருப்பம் வெளியிட்டுள்ளனர்.
இதே வேளை 37.8 வீதமான இலங்கையர்கள் அரசியலில் பௌத்த மதத்தின் தாக்கத்தை அளவிற்கு அதிகமானது என வர்ணித்துள்ளனர். தமிழர்களே இவ்வாறான கருத்தை அதிகம் கொண்டுள்ளனர். (ற)

# பெண்கள் வழங்கும் பங்களிப்பு இலங்கை அரசியலில் குறைவு

## உலக பொருளாதார பேரவை அறிக்கை

கொழும்பு, ஒக்.30
இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் வரையறுக்கப்பட்ட வகையில் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. பால் நிலை சமத்துவ இடைவெளி தொடர்பில் உலக பொருளா தார பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.
பெண்களின் அரசியல் வலுவூட்டல் தொடர்பில் இலங்கை 50ஆம் இடத்தை வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் பதவி வகித்தல் குறித்த சுட்டியில் இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படு கின்றது.
142 நாடுகளைக் கொண்ட பட்டியலில் இலங்கை இந்த வகையீட்டில்136ஆம் இடத்தை வகிக்கின்றது. பொருளாதாரத் தில் பெண்களின் பங்களிப்பு தொடர்பிலான வகையீட்டிலும் இலங்கை 109ஆம் இடத்தை வகிக்கின்றது.
அரசியல், பொருளாதாரம், ஊழியப்படை போன்ற துறைகளில் இலங்கை பாரிய பின்னடைவு எதிர்நோக்கிய போதிலும், பெண்கள் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் சிறந்த நிலையில் காணப்படுவதாக உலக பொருளாதார பேரவை தெரிவித்துள்ளது. (ற)

## வாஸின் பிணை மனு நிராகரிப்பு

கொழும்பு, ஒக்.30
முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட ஐவரால் கொழும்பு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக, தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை, பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் நேற்று நிராகரித்துள்ளனர். அத்துடன், காலத்தை கடத்தாது ட்ரையல்-அட்-பார் விசாரணையை ஒவ்வொரு நாளும் நடத்துமாறு உயர் நீதிமன்றத்துக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. (ற)

# மின்சாரமற்ற நிலையில் வடக்கில் 164 கிராமங்கள்

## அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.30
வடக்கு மாகாணத்தில் மின்சார வசதிகள் அற்ற நிலையில் 164 கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமங்களுக்கான மின்சார இணைப்புடனான வசதிகளை எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்பதாக பெற்றுக் கொடுக்கப்படும் என்று தெரிவித்தார் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அமர்வின் போது வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரமான சஜித் பிரேமதாஸவால் எழுப்பப்பட்டிருந்த கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அங்கு 164 கிராமங்களுக்கு மின்சார வசதிகள் இல்லை. இதன்படி யாழ். மாவட்டத்தில் ஐந்து கிராமங்களும் வவுனியா மாவட்டத்தில் 23 கிராமங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 68 கிராமங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 49 கிராமங்களும் மன்னார் மாவட்டத்தில் 12கிராமங்களும் இவ்வாறு மின்சார வசதிகளற்ற கிராமங்களாக இருந்து வருகின்றன. அந்தக் கிராமங்களுக்கான மின்சார வசதிகள் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் நிவர்த்திக்கப்படும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## சப்ரகமுவ தாக்குதல்: சந்தேக நபர்களுக்கு பிணை



கொழும்பு, ஒக்.30
சப்ரகமுவ பல்கலைகழக மாணவர்கள் சிலர் மீது தாக்குதல் நடத்தி சத்தியாகிரக மேடையை சேதப்படுத்திய சம்பவம் தொடர்பான 7 சந்தேக நபர்களுக்கும் நேற்றுப் பிணை வழங்கப்பட்டது. பலாங்கொடை நீதிவான் லலித் கன்னங்கர முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே அவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.
இதன்போது, ஒருவருக்கு தலா இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் சரீர பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்துள்ளார். இதனிடையே, வழக்கு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி மீண்டும் விசாரனைக்கு எடுத்து கொள்ளப்படவுள்ளது. (ற)



இடர் முகாமைத்துவம் மற்றும் முதலுதவி தொடர்பில் மாத்தறை மாவட்டத்தின் அனைத்து ஊடகவியலாளர்களுக்குமான கருத்தரங்கு நேற்றுமுன்தினம் மாத்தறை மாவட்ட செயலாளர் இ.ஏ.சி.விதானகமச்சி தலைமையில் மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மாத்தறை மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் உதவிப்பணிப்பாளர் மேஜர் சமன் பாலசூரிய, மற்றும் பல உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற)

# பலாலி விமான நிலையம் புனரமைப்புச் செய்யப்படும்

பலாலி தேசிய விமான நிலையம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு விமான நிலையங்களின் புனரமைப்புக்கும், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் புதிய விமான நிலைய நிர்மாணிப்புக்கும் அடுத்து வரும் இரு வருடங்களுக்கு 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
அடுத்த ஆண்டுக்கு முன்மொழியப்பட்ட வரவு – செலவுத் திட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து தொடர்பில் தெரிவிக்கப்பட்ட முன்மொழிவிலேயே மேற்படி விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த வருட வரவு – செலவுத் திட்டத்திற்கு அமைய புதிய 400 சிறிய பஸ்கள் இந்த வருடம் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. கிராமிய சேவைகளை மேலும் விரிவாக்குவதற்கு 500 சிறிய பஸ்களை இந்த ஆண்டு இறக்குமதி செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.
இலங்கை போக்குவரத்துச் சபையின், பஸ் தொகுதியை 2 ஆயிரம் பஸ்களாக அதிகரிக்கும் நோக்கில் போக்குவரத்துச் சபைக்கு ஆயிரம் மில்லியன் ரூபா அரச முதலீடாக வழங்கப்படவுள்ளது.
அரச சேவை சம்பளக் கட்டமைப்பினை பெறுகின்ற ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பளங்களை ஒத்ததாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்களின் சம்பளங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.
பலாலி, இரத்மலானை, திருகோணமலை, அநுராதபுரம், மட்டக்களப்பு போன்ற தேசிய விமான நிலையங்களை புனரமைப்பதற்கும் பாதைப் போக்குவரத்தை இலகுபடுத்தி உள்நாட்டு போக்குவரத்து மற்றும் சுற்றுலாவினை ஊக்குவிக்கும் வகையில் கண்டி மற்றும் நுவரெலியாவில் புதிய விமான நிலையங்களை உருவாக்குவதற்கும், 2015 – 2017 ஆண்டு வரையில் 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ற-5)




# நீர்வழங்கல் திட்டங்களுக்கு 750 மில்லியன் ரூபா நிதி

சமுதாய நீர் வழங்கல் திட்டங்களை புனரமைப்பதற்கும், புதிய திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் 750 மில்லியன் ரூபா அடுத்த ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்டுள்ளது.
அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நீர் வழங்கல் சபைக்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கடன்களாகவும் அதன் வட்டியாகவும் திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய 60 பில்லியன் ரூபாவை, அரச பங்காக மாற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இதனூடாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை இலாபங்களை உறுதிப்படுத்திக் கொள்வதுடன், அதன் சொந்த நிதியிலேயே அபிவிருத்திட்டங்களைச் செய்ய முடியும்.
வீட்டுப் பாவனைக்கான குடிதண்ணீர், முதல் 25 அலகுகள் வரைக்குமான கட்டணத்தினை 10 சத வீதத்தால் குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.
கடந்த வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுக்கு அமைய தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களமொன்று ஆரம்பிக்கப்பட்டது. சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு விசேட முக்கியத்துவம் வழங்கி இந்தத் திணைக்களத்தின் கீழ் சமுதாய நீர் வழங்கல் திட்டங்களை புனரமைப்பதற்கும் புதிய திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும், 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்று முன்மொழியப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## விபத்துகள்

### கட்டுப்பாட்டை இழந்து ஒட்டோ விபத்து: 4 பேர் காயம்

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஒட்டோ மின் கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த நால்வர் காயமடைந்தனர். இந்த விபத்து நேற்று மாலை களுவாஞ்சிக்குடியில் மட்டக்களப்பு கல்முனை வீதியில் இடம்பெற்றது. இதில் முச்சக்கர வண்டியின் சாரதியான தம்பிலுவிலைச் சேர்ந்த எஸ். ரவிராஜ் வயது (45) அவரது உறவினர்களான தம்பிலுவிலைச் சேர்ந்த பி. யசோதரன் வயது ( 15), எம். மகேஸ்வரி வயது ( 60) மற்றும் எஸ்.திலகவதி வயது ( 65) ஆகியோர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர். (ற)

### வாகன விபத்தில் ஒருவர் சாவு


கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதியில் மாபோல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொழும்பில் இருந்து நீர்கொழும்பு நோக்கி சென்ற லொறி ஒன்று அதே திசையில் பயணித்த துவிச்சக்கர வண்டியில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த துவிச்சக்கர வண்டியை ஓட்டிச் சென்ற நபர் ராகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். குறித்தலொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட உள்ளார். (ற)

### மின்னல் தாக்கி விவசாயி சாவு

இமாவரல்ல பொலிஸ் பிரிவிலுள்ள ஆதலுவகொரட்டுவ எனுமிடத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த 55 வயதான அழகபெரும வித்தானகே பிரேமசிறி என்பவர் மின்னல் தாக்கியதில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கடும் காயமடைந்த அவர், வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்ட பின்னர் இறந்தார்(ற)









வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி கடைசி நாளான நேற்று இடம்பெற்ற சூர சம்ஹாரம் இது. இந்த சூரசம்ஹாரத்தைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு திரண்டிருந்தனர். (த-21-17)

## தீக்காயத்தால் பெண் சாவு

வடமராட்சி, ஒக். 30

இரவு நேர உணவைத் தயார் செய்யும் போது தீக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று புதன்கிழமை காலை உயிரிழந்தார்.

நல்லூர், பருத்தித்துறைவீதியைச் சேர்ந்த திருமதி ஜெயசிங்கம் றெஜிவதனி (வயது-51) என்ற 2 பிள்ளைகளின் பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் இரவுஉணவைமண்ணெண்ணெய் குக்காரில் தயாரித்துக் கொண்டிருந்போது உடுப்பில் தீப்பற்றியதைத் தொடர்ந்து உடலில் தீக்காயங்குள்ளானார். உடனடியாக இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தவேளை சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுக் காலை 9 மணியளவில் உயிரிழந்தார். (த-173)

## மதுபானம் குடிக்காதீர்கள் ! கைதிகளின் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக். 30

மது ஒழிப்பு தினத்தையொட்டி 'மது குடிக்காதே' என்று வலியுறுத்திப் பனம் பானமும் வழங்கி இளைஞர் சேவைகள் மன்றத்தினரும் சிறைச்சாலையிலுள்ள திரிசாரணர்களும் இணைந்து நேற்று விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

யாழ். சிறைச்சாலை முன்பாக நேற்றுக் காலை தொடக்கம் மதியம் 12 மணிவரை இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

மதுபாணம் குடித்துவிட்டு வெளிக்காட்டும் நடத்தைகளைத் தெரியாமல் செய்வது போன்று காட்டினாலும் அவை யாவும் தெரிந்து கொண்டே செய்கின்றனர். அவற்றுக்கு அனுமதியோ மன்னிப்போ வழங்கவேண்டாம் என்று எழுதப்பட்ட ஸ்ரிக்கர்களும் அவ்வழியே சென்றவர்களுக்கு வழங்கப்பட்டதோடு வாகனங்களிலும் ஒட்டப்பட்டன.

அத்துடன் பனை அபிவிருத்திச் சபையிடம் இருந்து பெறப்பட்ட பனம் பானமும் அங்கு வழங்கப்பட்டது.


இங்கு மதுப் பாவனை அதிகரித்துள்ளது. அதனைக் கட்டுப்ப டுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதனை வலிறுத்தியே நேற்று விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர் சேவை மன்றத்தினருடன் சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் சிறு குற்றம் புரிந்தவர்கள் சேர்ந்து உருவாக்கிய 18 வயதுக்கு மேற்பட்ட திரிசாரணர்களும் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். (த-4)


## மரண அறிவித்தல்

### கறுப்பையா கிருஷ்ணசாமி

(ஒய்வு பெற்ற பிரதி அதிபர் பது/பசறை தமிழ் தேசிய பாடசாலை)



பதுளையைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை நிரந்தர வசிப்பிடமாகவும், சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை தற்கால வசிப்பிடமாகவும் கொண்ட கறுப்பையா கிருஷ்ணசாமி நேற்று (29.10.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கறுப்பையா-ரங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் நித்தியானந்ததேவியின் அன்புக் கணவரும், கிருஷ்ணசாந்தினி (ஆசிரியை யாழ்/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கிருஷ்ணானந்தா (பொறியியலாளர், சிங்கப்பூர்), தஷிந்ரகிருஷ்ணா(பொறியியல் பீடம் மொறட்டுவைப் பல்கலைக் கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.11.2014) சனிக்கிழமை மு.ப 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 01 காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
021 3737422

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்

## காணி விற்பனைக்கு

மல்லாகம் கே.கே.எஸ். வீதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 248 4342

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு திருவாதிரை 3ஆம் பாதம் செவ்வாய் குற்றமற்ற (கிரகபாவம் 34) 6அடி உயரமுடைய யாழ்ப்பாணத்தில் நிரந்தர அரசாங்க தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்கு, அழகான மணமகள் தேவை.

T.P : 078 914 7660
Jaffna2011@hotmail.co.uk

## அமெரிக்க லொத்தர் விசா- V2 Travels

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற

இன்னும் ஒருசில தினங்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

| கிளிநொச்சி | யாழ்ப்பாணம் | நெல்லியடி | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|
| 0771516537 | 0773867257 | 0776699892 | 0776697960 |

## தவறிவிட்டது

குருநகர் சவக்காலைச் சந்திக்கும், பிரதான வீதிக்கும் இடையில் சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை இல(892771685V) அடங்கிய கைப்பை 26.10.2014 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும் T.P : 0779697250

## ஆஸ்திரேலியாவில் தலைமையகத்தைக் கொண்ட திசைகாட்டியின் பதவி வெற்றிடம்



I. உதவி முகாமையாளர் (அமைய அடிப்படை)

- ஆண், பெண் 50 வயதுக்குக் கீழ்
- கல்வித்தகைமை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பு
- (HNDA Diploma ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
- வேதனம் 18000/= ஆங்கில மொழியில் சிறப்புத் தேர்ச்சி இருத்தல் அவசியம்.
- 2 வருட சேவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.
- எவருக்கும் விதிவிலக்களிக்கப்படமாட்டாது.

II. Clerk (குமாஸ்தா)

- பெண்கள் மட்டும். 50 வயதுக்குக் கீழ்.
- வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- க.பொ.த உயர்தரத்தில் 3 பாடசித்தி.
- ஆங்கில அறிவு மிகவும் அவசியம்.
- 2 வருடசேவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு

நேர்முகத் தேர்வு:- 31.10.2014 பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும்.

தொலைபேசி விசாரணைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா

செல்வி. V. இந்துஜா
பிரதம நிறைவேற்று அதிகாரி

திசைகாட்டி பிறைவேற் லிமிற்
இல. 175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம். (C/17264)(10.6.3)

## கணக்கீடு

A/L - 2015
கம்பனி
ஆரம்பம்: சனி 10 a.m

A/L - 2016
வங்கிக் கணக்கிணக்கக் கூற்று
ஆரம்பம் சனி 9 a.m

S.தவா (53663)(46.6.3)
NIRU கோண்டாவில்

## கணக்கீடு

A/L - 2015
கம்பனி
ஆரம்பம்:
பிரிவு - I சனி 6. a.m
பிரிவு - II சனி 3. P.m

A/L - 2016
வங்கிக் கணக்கிணக்கக் கூற்று
ஆரம்பம்:
பிரிவு - I சனி 8. a.m

கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம்பம்:
பிரிவு - II சனி 5. P.m

S.தவா (53662)(45.6.3)
Universal பட்டிப்பர்.

## இரு இடத்திலும்

பொருளியல்
NB.கஜீதரன்

A/L 2015
வங்கியியல்
A/L 2016
நிரம்பல் கோட்பாடு
Paper Class

புதிய அலகுகள் ஆரம்பமாகின்றன. நேர அட்டவணை அலுவலகத்தில்

NEC
பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி | மணிக்கூட்டு வீதி யாழ் / நகர்

## New Admissions 2015

Nursery, Grades One, Six, Seven & Eight- English & Tamil Medium. Application forms available at the school office.

**Admissions Close on Nov.10.2014.**

Principal
Uduvil Girls' College (C/17266)(7.6.3)

## FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.

## FRENCH CLASSES

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
850 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்...
நவீன முறையிலான கற்பித்தல்கள் Audio, Video மூலம் & A/C வகுப்பறைகள்

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..

Note: போலி ஆசிரியர்களிடம் சென்று ஏமாறாதீர்கள்....

| ஆரம்பம்:01.11.14 Sat 8.00am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | ஆரம்பம்:01.11 Sat 4.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி. | 021 320 2973 0779 789 456 |
|---|---|---|


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.